

# உள்ளத்தாலும் எண்ணத்தாலும் ஒற்றுமையை உருவாக்கிடுவோம்!

## மேதகு குடியரசுத் தலைவர் திரு ஜெயில் சிங்

நமது மாபெரும் குடியரசின் ஏழாவது குடியரசுத் தலைவராக, என்னைத் தேர்ந்தெடுத்து மகத்தான சிறப்புச் செய்திருப்பது என்னை மிகவும் நெகிழச் செய்கிறது.

குடியரசுத் தலைவரின் கடமைகள் புனிதமும் நுட்பமும் கடுமையும் நெருக்கடியும் நிறைந்தவை. இந்தக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு மிக உயர்ந்த உள்ளமும், உன்னதமான எண்ணமும் இருந்தால் மட்டும் போதாது; இறைவனின் அருளும் நாட்டு மக்களின் அன்பும் தேவை என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். இந்தப் பதவியில் எனக்கு முன்னால் இருந்தவர்கள் காட்டிய மதிப்பு வாய்ந்த மரபுகளைக் கட்டிக் காக்க எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்வேன் என்பதை உறுதியுடன் கூறிக்கொள்கிறேன்.

இன்று நாம் நமது தேசிய வாழ்க்கையில் சிறந்த ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிக்காமல் போனால் நாம் போற்றி வரும் அரசியல்,


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2013

துந்துபி — ஆடி 16

மலர்: 13 இதழ்: 3

1—8—1982

சமூக அமைப்புகளுக்குப் பேராபத்து ஏற்படுவதோடு, நமது இலட்சியங்களின் அடிப்படையே தகர்ந்துவிட நேரும் என்பதை உணர்ந்து செயல்படுவதுதான் இப்பொழுது நமக்கு மிக மிகத் தேவையான கடமையாகும். சமுதாயத்தில் பலவீனமாக உள்ளவர்கள்-வளங் குன்றியவர்கள் - தாழ்த்தப்பட்டவர்கள் இவர்களுடைய சமூக, பொருளாதார விடுதலைக்கு நல்லதொரு சூழ்நிலையைத் தோற்றுவிக்க-உறுதிபூண்டு நம்மை அக்கடமையில் மீண்டும் அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும். பல்வேறு மாநிலங்களையும், சாதி—மொழிகளையும் சார்ந்த மக்களிடையே உள்ளத்தாலும் எண்ணத்தாலும் ஒற்றுமையை உருவாக்க, நாம் முனைந்து செயலாற்ற வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே இந்திய வாழ்க்கையின் அடிப்படையாகவும், இந்திய கலாச்சாரத்தின் ஆன்மாவாகவும் விளங்குகிறது.

இன்றைய இன்னல்களையும் வேதனைகளையும் பொருட்படுத்தாமல் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் நாம் ஆற்ற . வேண்டிய பொறுப்பினை தன்னலம் கருதாது உண்மையோடு நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

நாடு, கடந்த 2 ஆண்டுக் காலத்தில், முன்னேற்றப் பாதையில் நடைபோட்டு வருகிறது என்பதில் ஐயமில்லை. ஆனால், அந்த வெற்றிகளை நாம் இப்போது வேகப்படுத்தவும் ஒருமுகப்படுத்தவும் வேண்டும். நமது ஆற்றலை ஆக்கப்பணிகளுக்கு - உத்வேகத்துடன் பயன்படுத்தி-ஒவ்வொரு துறையிலும் சிறந்த சாதனையை நிலைநாட்ட அவசர உணர்வுடன் பணியாற்ற வேண்டும். நவீன தொழில் நுட்பத்தின் நடுவில், பழம்பெருமை பூத்த நமது மாபெரும் இந்திய கலாச்சார மரபுகளை உன்னதமான முறையில் நம் நாட்டு ஞானிகளும், பெரியோர்களும், தலைவர்களும் அரசியல் விற்பன்னர்களும் நமக்கு உருவாக்கித் தந்து விட்டுப் போயிருக்கிறார்கள். இந்த மகத்தான கருவூலத்தை, நம்மிடையே நிலவும் வகுப்பு வேற்றுமை - அரசியல் அழுக்காறு, - பிளவுமனப்பான்மை பிரிவினை மற்றும் வன்முறைப் போக்குகள் ஆகியவை பலவீனப் படுத்திவிடும். இந்தச் சூழ்நிலையில்தான் நாம் எங்கிருந்தாலும் நமது கடமைகளை அர்ப்பணிப்பு உணர்வுகளோடும்; உறுதியோடும், ஊக்கத்தோடும் இடையறாது நிறைவேற்றி வரக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நமது நாடு நிலையானதொரு குடியாட்சியைப் பெற்று விளங்குகிறது. கடின உழைப்பும் திறன்ம பலவும் பெற்றவர்கள் நம் மக்கள் விஞ்ஞானிகள், தொழில் நுட்ப வல்லுநர்கள் தீரமிகு வீரர்கள், பாடுபடும் பாட்டாளிகள், உழவர் பெருமக்கள் - ஆகியோர் நிறைந்தது நமது நாடு. இயற்கை வளத்தையும் ஆள் பலத்தையும் சிறந்த முறையில் நாம் பயன்படுத்திக் கொள்வதை ஒட்டியே நமது நாட்டின் வளர்ச்சியும் முன்னேற்றமும் அமைய முடியும்.

நம்மைச் சுற்றிலும் வன்முறை பயங்கரவாதம் உயிருக்கும் உடமைக்கும் உலைவைக்கும் போக்கு ஆகியவற்றைக் காண்கின்றோம். மனித குலம் அழியாமல் இருக்க வேண்டுமென்றால், மக்களின் தேவைகளை நிறைவேற்றி அச்சத்தையும் அவநம்பிக்கையையும் அகற்றி

**முன் பக்க அட்டையில்**

மேட்டூர் அணை

**பின் பக்க அட்டையில்**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் முஸ்லீம் மாணவிக்குப் படிப்புதவிப் பணம் வழங்குதல்



பகுத்தறிவும் மனிதாபிமானமும் நிறைந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

படை பலத்தையும் வன்முறையையும் நம்புவதும் அணு ஆயுதங்களைக் குவித்து வைப்பதும் மனித குலத்தை அழிவில் கொண்டுபோய் விட்டுவிடும். அந்தப் போரில் வெற்றி பெற்றவர்-தோல்வியுற்றவர் என்று யாரும் இருக்க முடியாது. அனைவருக்கும் அழிவே ஏற்படும். உலகில் அமைதியும் ஒற்றுமையும் ஓங்க நாம் விரும்புகிறோம். நமது அண்டை நாடுகளில் நடைபெறும் நிகழ்ச்சிகள் நமக்குக் கவலை தருகின்றன. நாம், அனைவரிடமும் நண்பர்களாக இருக்க விரும்புகிறோம். அண்டை நாடுகளுடன் ஒற்றுமையோடும் நட்போடும் வாழ விரும்புகிறோம். சர்வதேச அரங்கில் எல்லாத் தகராறுகளையும் அமைதியாகத் தீர்த்துக் கொள்ளவும் நீதியான-நிலையானதொரு பொருளாதார அமைப்பை உருவாக்கவும் இந்தியா எப்பொழுதும் பாடுபட்டு வந்திருக்கிறது.

நமது அரசியல் சட்டத்தைத் தந்தவர்களால் உருவாக்கப்பட்ட மிக உன்னதமான இந்தப் பதவியின் கண்ணியம் பெருமை ஆகியவற்றாலும் அரசியல் சட்டத்தாலும் எனக்கு அளிக்கப்பட்டுள்ளது இக்கடமைப் பொறுப்பு. நான் இதனை அச்சமின்றியும் விருப்பு, வெறுப்பு இல்லாமலும் நாட்டின் சேவகன் என்ற முறையில் நல்விதமாய் நிறைவேற்றி வருவேன். அப்படி நான் என் கடமைகளை நிறைவேற்றுவதற்கு எதிர்காலத்தில், பொது வாழ்விலும் அரசியலிலும் உள்ள என் நண்பர்களும் நாட்டு மக்களும் தங்களது மனப்பூர்வமான ஒத்துழைப்பினை நல்கிட வேண்டுமென நான் பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

**25.7.82ல் பதவி ஏற்று ஆற்றிய உரை.**



# சத்துணவுத் திட்டம் சமுதாயப் புரட்சித் திட்டம்

## — மாண்புமிகு முதல்வர்

AUG 1982

இன்றைய தினம் நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்த நிகழ்ச்சி வெறும் விளம்பரத்திற்காகவோ அல்லது நாங்கள் எத்தகைய திட்டங்களையெல்லாம் அறிமுகப்படுத்துகிறோம் பார்த்தீர்களா என்று சொல்லி மக்களுடைய தேவைகளைப் புரிந்து கொள்ளாமல், அவர்களுக்கு என்னென்ன அவசியத் தேவை இருக்கின்றனவோ அவைகளை அலட்சியப்படுத்தி விட்டு, அவர்களைத் திசை திருப்பி விடுவதற்காகவோ இந்த நிகழ்ச்சி நடைபெறவில்லை, நடத்தப்படவில்லை என்பதை முதலிலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அவ்வப்போது நான் பொதுக்கூட்டங்களிலே பேசும்போதும், எங்கள் கட்சிக்காக வாக்குகளைக் கேட்கும் போதும் கூட, முன்னாலே உட்கார்ந்திருக்கிற குழந்தையைப் பார்த்து நான் பலமுறை பேசிய அந்தக்கருத்துக்ககளிலே ஒன்றை மட்டும் நான் குறிப்பிட இங்கே விரும்புகின்றேன். நாளைய தினம் இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்புக்கு சொந்தக்காரர்களான இந்தக் குழந்தைகள் இத்தகைய கூட்டத்திற்கு வரக்கூடாது. தாய் தந்தையர்கள் அனுப்பக் கூடாது என்று நான் பேசியதை இன்றைய தினம் மீண்டும் நான் வற்புறுத்திக் கொள்கின்றேன். அரசியல் பொதுக்கூட்டங்களுக்கு இந்தக்குழந்தைகளை எல்லாம் குறைந்தது 15 வயதிற்கு கீழே உள்ள குழந்தைகளை அந்த அரசியல் கூட்டங்களுக்கு அனுப்பக் கூடாது என்று நான் பல முறை சொல்லியிருக்கிறேன். வாக்குகள் கேட்கும் போதும் என்னைப் பார்த்து விசிலடிக்கும் குழந்தைகள், என்னைப் பார்த்துக்கைதட்டி என்னை அரவணைத்துக் கொள்ள ஓடி வருகின்ற குழந்தைகள் இது என் தமையன், இது என் தம்பி, இது என் தங்கை அல்லது என் தமக்கை, என் தாய் என்றே வைத்துக் கொள்ளுங்கள், அந்த வயிற்றிலே பிறந்த குழந்தைகளைப் போல ஓடோடி வந்து அவர்கள் உற்சாகத்தோடுபேசுகின்ற அந்தக்குழந்தைகளைக் கூட நான் குறிப்பிட்டுச் சொல்ல நினைக்கின்றேன். நான் பேசுவதாக இருந்தாலும் எங்கள் கட்சிக்காரரர் பேசுவதாக இருந்தாலும் கூட, அரசியல் கட்சிக் கூட்டங்களுக்கு அந்தக் குழந்தைகளை, இன்றைய நாட்டின் சூழ்நிலையில் நீங்கள் அனுப்பாதீர்கள்: காரணம் அவர்கள் திணிக்கின்ற, வேறுபடுத்துகின்ற கருத்துக்களை அந்தப் பசுமையான உள்ளத்தில் பதிய வைத்துவிடக் கூடாது என்பது தான் 25 ஆண்டுகளாக நான் அரசியலில் முழுமையாக முயன்று நேரடியாகப் பங்கு கொள்ள



முயன்ற பிறகு பேசிய பேச்சுக்களின் கடைசியாக வந்த கருத்துக்கள் என்பது மட்டும் இன்று வரை விடவில்லை என்றும் இன்னமும் திரும்ப அதையே சொல்வேன் என்றும் நான் இங்கு குறிப்பிட விருப்புகிறேன். இந்த குழந்தைகள் உணவுக்கு வகையில்லை என்பது மட்டுமல்ல, உணர்வுக்கும் கூட-அந்த நல்ல உணர்வுக்கும் கூட இந்த நாட்டுக்குத் தேவையான சமத்துவ உணர்வுகளுக்குக் கூட சொந்தக்காரர்கள் அல்லாத நிலைமையில் அந்தக் குழந்தைகள் வளர்க்கப்படுவார்களேயானால் எதிர்காலத்தில் இந்த நாட்டின் நிலைமை என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்னொன்றை நான் பல முறை சொல்லியிருக்கிறேன். நான் "எப்போதும் சொல்வதுண்டு. என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே என்று நான் குறிப்பிடுவது ஊண்டு. 'நான் காரணங்களைப் பேசும் போது, ஏதேனும் கடிதம் குறிப்பிட்டு எழுதப்படும்போது இந்த வார்த்தைகளை நான் பயன்படுத்துவதுண்டு. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு விதவைத் தாய்மார்களுக்காக என்னென்ன செய்தோம் என்கின்ற பட்டியலை இப்போது நான் சொல்லிக் கொண்டிருக்க விரும்பவில்லை. ஆனால் இந்த நபர்களை நியமிக்கின்ற வகையில் தான் முன்னுரிமை, அதிலும் விதவைகளுக்குத் தான் முன்னுரிமை. அதிலும் உள்ளூர்க்காரர்களுக்கு முன்னுரிமை, என்கின்ற வகையில் பெண்களுக்கு என்று ஏறத்தாழ 40,000 பேர்களுக்கு மேல் அங்கே வேலை வாய்ப்பை ஏற்படுத்தித்தந்திருக்கிறோம் என்பதை -அது மட்டுமல்லாமல் 36,000 பள்ளிக்கூடங்களில் வேலை செய்கின்றவர்களுக்கு அங்கேயும் அந்த வாய்ப்பை 36,000 பேர்களுக்கு ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் ஏறத்தாழ 76,000 பேர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்றால் அந்த 76,000 குடும்பங்கள் தொழில்களைப் பெற்று அதுவும் தாய்மார்கள் அந்தப் பணியைப் பெற்று நிம்மதியாக வாழக்கூடிய-முழு நிம்மதியாக என்று சொல்ல மாட்டேன். முழுமையாக வேலை வாய்ப்பு கிடைக்கின்ற நிலைமை வந்து, போதிய வருமானம் கிடைக்கும் என்றும் சொல்ல மாட்டேன்; இன்னொருவரிடம் சென்று கை ஏந்துகின்ற நிலைமை இல்லாமல் அவர்கள் வாழக்கூடியநிலைமைக்கு இந்த வாய்ப்பு அளிக்கப்படுகிறது, என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

குழந்தையிலேயே ஒழுங்காக, ஒழுக்கமாக, சுத்தமாக, சீர்மையாகத் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள அவர்களுக்கு உபதேசம் செய்யாமல் நடைமுறைப்





பழக்கவழக்கங்கள் அவர்களுக்கு வந்தாக வேண்டும். அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்க் வேண்டுமென்பது எங்கள் ஆசை. பசியையும் போக்க வேண்டும், பண்பையும் வளர்க்க வேண்டும். கழிப்பிடங்களுக்கு அவர்கள் போய் வருகின்ற நிலைமைக்குப் பிறகு அந்தக் கழிவுப்பொருள்களிலிருந்து எரிபொருள் உற்பத்தி செய்ய வேண்டும். அதை 'கோபர்கே' என்று அழைக்கப்படுகிற அந்த எரிபொருளைக் கொண்டு சமையல்வேலைக்கு அதைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். பொருள் வாங்கும் செலவைக் குறைத்து அது போலவே அதிலிருந்து கழிவுப்பொருட்கள் இருக்கின்ற மற்ற கீழ்ப்பகுதியை எருவாக்கிக் கொள்ள வேண்டும். இது கஷ்டமல்ல. நாட்டில் நடக்காததும் அல்ல. நாம் செய்யாததும் அல்ல. வயல்புறங்களில் சென்றால் வயல் புறங்களில் சென்று நாம் காணாதது அல்ல. ஆகவே, விஞ்ஞான ரீதியாக் அறிவியல் ரீதியான ,அனுபவ பூர்வமாகப் பயன்படுத்தும் வகையில் குழந்தைகளுக்கு அப்போதிலிருந்தே அவர்களுக்கு என்ன செய்கிறோம் என்பது தெரியாமலேயே நாம் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

இந்த மாபெரும் பொறுப்பை இந்தக் காப்பகத்தை நடத்த இருக்கின்றவர்கள் சுமக்க இருக்கின்றார்கள். அவர்களுக்கு மக்கள் உதவி செய்ய வேண்டும். பாதுகாப்புக் கொடுத்தாக வேண்டும்.

கட்சியைத் தயவு செய்து தள்ளி வையுங்கள். 60 லட்சம் ஏழைக் குழந்தைகளுடைய வயிற்றைப் பாருங்கள். அவர்கள் வாழ்வைப் பாருங்கள். ராமச்சந்திரனைப் பார்க்காதீர்கள். அவர் எந்தக் கட்சி என்று பார்க்காதீர்கள். எதிர்க்கட்சியா? எதிரிக்கட்சியா என்று தயவு செய்து கவனிக்காதீர்கள். தமிழகம், தமிழ்மக்கள், அதில் இருக்கின்ற வறுமைக் கோட்டிற்குக்கீழேயுள்ள – வேலையில்லாமல் இருக்கின்ற-ஒரு வேளை உணவுகூட நிம்மதியாகக் கொடுக்க முடியாமல் இருக்கின்ற அந்த வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள தாய்மார்கள், கண்ணீர் வடிக்கிறார்களே, அதைத் துடைக்கின்றோம் என்கிற நிலைமையில் ஒத்துழைக்க முன்வாருங்கள் என்று நான் சொல்லிக் கொள்வேன்.

குழந்தைகளுக்குச் சொந்தக்காரர்கள் வேலைக்குப் போவார்களேயானால் என் குழந்தை இப்போது என்ன செய்து கொண்டிருக்கும் உணவுக்கு என்ற அந்த நினைப்பே இல்லாமல் அங்கே சாப்பிட்டுக் கொண்டிருக்கிறது. அதுவும் இந்த நாட்டுக்குச் சொந்தக்

காரர்தான். அந்தக் குழந்தையும் ஒரு காலத்தில் இந்த நாட்டின் முதலமைச்சராக வரலாம். ஏன்? குடியரசுத் தலைவராகவே வரலாம். அப்படிப்பட்ட குழந்தைகள் இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்கள். அவர்கள் கொடுக்கின்ற வரிப்பணம், நாம் கொடுக்கின்ற வரிப்பணம் அவர்களுக்கு உணவாகப் போகிறது. ஆகவே அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அங்கே சாப்பிடுகிறவர்கள் என்கின்ற எண்ணத்தோடு-உரிமையோடு-நிம்மதியோடு இருக்கின்ற நிலைமையை உருவாக்க முயலுகின்றோம்.

இந்த நல்ல காரியத்துக்கு யாரும் எதிர்ப்பு சொல்ல முடியாது. நியாயமும் இல்லை. காரணமும் இல்லை. ஆகவே, இதுவரை எதிர்ப்புக் கருத்துக்கள் அதிகமாகச் சொல்லப்படவில்லை. நடக்குமா என்றுதான் சந்தேகப்படுகிறார்களே தவிர இது நடக்கக் கூடாதது, வேண்டாதது என்று யாரும் சொல்லவில்லை. ஆகவே, நடத்த முடியும் என்பதைத் திட்டமிட்டுக் காண்பித்து விட்டோம். இது நடக்கிறது. நடந்து கொண்டு போகிறது. இன்னும் விரிவடைய-எங்களுடைய வசதியைப் பொறுத்து விரிவடைய, நிதி வசதியைப் பொறுத்து, மக்கள் தருகின்ற ஆதரவைப் பொறுத்து, இது பின்னால் விரிவடையும் என்பதை இப்போது சொல்லி இந்தப் பிரச்சினைக்கு நீங்கள் ஆதரவு தருகின்ற நிலைமையில் குழந்தைகளை அழைத்து இங்கே என்னென்னவோ விளையாட்டுகளைக் காண்பித்து இருக்கிறீர்கள்.

சர்க்கஸ் விளையாட்டுகள் அத்தனையும் இங்கே காண்பித்து விட்டார்கள். இந்த வெய்யிலில் நான் பார்த்து அதிசயித்தேன். கை தட்டவும் மறந்து பார்த்துக் கொண்டிருந்தேன். எவ்வளவு உயரம்? 1 அடி. 2 அடி உயரம். அவர்கள் அங்கே கவாத்துப் பழகுகின்றதைப் பார்க்கின்றபோது உடற்பயிற்சி செய்கின்றதைப் பார்க்கின்றபோது, சிலம்பு விளையாட்டுக்களைச் செய்கின்றதைப்பார்க்கின்றபோது, நான் உண்மையிலேயே பெருமைப்படுகின்றேன். இந்த உணவையும் கொடுத்து, பண்டையும் கொடுத்து குழந்தையிலிருந்து அவர்களுக்கு உடற்பயிற்சியையும் கற்றுக் கொடுத்தோமானால் எதிர்கால சந்ததிகள் எந்த நாட்டு விளையாட்டுக்காரர்களோடும் போட்டி போடக் கூடிய அளவுக்கு அவர்கள் வளர முடியும். அறிவியலிலே அவ்வாறு போட்டி போட வேண்டுமென்றாலும் அங்கே போட்டி போட அந்தத் திறமையைப் பெற முடியும் என்பதை மகிழ்ச்சியோடு சொல்லி, அங்கே தூரத்திலே கை ஆட்டுகிறவர்களுக்கு என் நன்றியைச் சொல்லி இந்த வாய்ப்பைத் தந்ததற்கு நான் நன்றி கூறி இந்த நிகழ்ச்சியைத்தொடங்கி வைக்க என் தாய் எனக்கு இந்த நீண்ட ஆயுளைத் தந்ததற்காக எனது அன்னையை நான் வணங்கி — இது வெற்றி பெறவேண்டும் இது மக்களுக்கு நல்லதாக அமைய வேண்டும் என்று கூறி இதைத் தொடங்கி வைக்கின்றேன். எல்லோர்க்கும் நன்றி. வாழ்க அண்ணா நாமம். வணக்கம்.

**(திருச்சி மாவட்டம், பாப்பாக்குறிச்சியில் 1-7-82ல், இலவசச் சத்துணவுத் திட்டத்தைத் துவக்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து...)**

---



# அமுதசுரபித் திட்டம்

**தலைமைச் செயலர் திரு. கா. திரவியம்**

"வருக வருக இதயக்கனியே" என்று அழைத்திட உள்ளுரத்துடித்தாலும் அதிகார அமைப்பில் உள்ளதால் அவ்வாறு அழைத்திடமுடியாமல் எட்ட அமர்ந்திருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரவர்களே, பெரியோர்களே, என் குழந்தைச் செல்வங்களே! இன்று ஏழைக் குழந்தைகளுக்குதமிழ்நாடு இலவசச் சத்துணவு வழங்கும் திட்டத்தைத் துவக்க, திருச்சியிலே நடக்கிற இந்த நிகழ்ச்சி தமிழகத்திலேயே ஒரு திருப்பு முனையாகும். மணிமேகலை அமுதசுரபியை வைத்து அரும்பசியைப் போக்கினதாகக் காப்பியத்தில் நாம் கண்டிருக்கின்றோம். வள்ளலார் மூட்டிய தீ அடுப்பிலே என்றுமே தணியாத வள்ளல் தன்மையுடன் தமிழ்நாட்டு மக்களின் பசியைப்போக்கியதாகக் கேட்டிருக்கிறோம். கல்விக் கண்ணைத் திறந்த கர்மவீரர் காமராஜர் அவர்கள் தமிழகத்தில் செய்த சாதனைகளை வைத்து, இன்று கல்விக் கண்ணைப் பரப்புவதற்கும் குழந்தைகளுக்கு அமுது ஊட்டுவதற்கும் இந்த மாபெரும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் அன்பு, மற்றவர்கள் எல்லாம் பசியால் விழுங்கப்பட்டுள்ளார்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். பசியால் விழுங்கப்பட்டவரோ என்னவோ நம் முதல்வர் அவர்கள், அன்புப் பசியால் விழுங்கப்பட்டவர்கள். இவர் இந்தத் திட்டத்தைத் துவக்கிவைக்க வந்திருப்பது நமக்குப் பெருமை சேர்க்கிறது.

இங்கு வந்திருக்கும் பெரியோர்களுக்கு மட்டும் ஓர் வேண்டுகோள். உங்கள் குடும்பங்களில் எந்த நல்ல நிகழ்ச்சி நடந்தாலும் உங்கள் ஊரில் உள்ள உணவு மையக் கூடத்தில் ஒருவேளை உணவு குழந்தைகளுக்குப் போட்டு அதன் மூலம் இந்தத் தினத்தையும் மங்களகரமான நிகழ்ச்சியாக நீங்கள் கொண்டாட வேண்டும் என்று முடிவு செய்து கொள்ளுங்கள் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இது ஒரு அரசியல் திட்டம் மட்டுமல்ல. இந்த 'அமுதசுரபித் திட்டம்' வெற்றி பெறுமாறு நடத்த வேண்டுமென்றால் பொதுமக்கள் அனைவரும் இந்தத் திட்டத்தில் பங்குகொள்ள வேண்டும். இந்தத் திட்டத்திற்குப் பொறுப்பேற்றுள்ள பணியாளர்கள், ஆசிரியர்கள் அத்தனை பேரும் ஒரு புனித உணர்வுடன், ஒரு பயபக்தியுடன் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வெற்றி பெற வேண்டுமென்று என் தோழர்களைக் கேட்டுக் கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்தத் திட்டத்தைத் துவக்கி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

[திருச்சி மாவட்டம், பாப்பாக்குறிச்சியில் இலவசச் சத்துணவுத் திட்டத் துவக்க விழாவில் ஆற்றிய உரையிலிருந்து.]



# ஏழைக் குழந்தைகளுக்கு இலவச உணவு

மாண்புமிகு நிதி அமைச்சர்
டாக்டர் நாவலர்
இரா.நெடுஞ்செழியன்

வளரும் தமிழகம்

"நீரின்றி அமையா யாக்கைக்கெல்லாம், உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்பது சங்க காலப் புலவர் பெருமகனாரின் பொய்யா மொழியாகும்.

நீர்ப்பசை இல்லாமல் உலகில் உயிரினம் எதுவுமே வாழ முடியாது. உயிரினத்தின் உயிர் நலம் காக்கவேண்டுமானால், உடல் நலம் பேணப்படவேண்டும். உடல் அழிந்தால், உயிரும் அழியும். எனவே, உயிரை வளர்க்க, உடலை வளர்க்க வேண்டும். உடல் ஊட்டத்திற்கும், உடல் வளர்ச்சிக்கும் உண்டி, அதாவது உணவு தேவை. வளம் பெற்ற ஒருவர் வறுமை உற்ற ஒருவருக்கு, உணவு கொடுத்தார் என்றால், அவர் வறுமையுற்றாருக்கு உயிரையே கொடுத்தார் என்று பொருள். இதைத்தான் சங்க காலப் புலவர் பெருமகனார், ''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்று சிறப்பித்துச் சொல்லுகிறார்.

இன்றைய தமிழகத்தில், வறுமையிலும் ஏழ்மையிலும் - இல்லாமையிலும் - போதாமையிலும் கிடந்து உழலும் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த, இரண்டு வயதிற்கும் பத்து வயதிற்கும் உட்பட்ட சிறுவர், சிறுமியர்க்கு, ஒரு வேளை உணவையாவது, இலவச உணவாக— ஊட்டச் சத்துள்ள உணவாக— மதிய உணவாக வழங்குவதன் மூலம், அவர்களுக்கு எதிர் காலத்தில் செம்மையான உயர் வாழ்க்கையை— அளிக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள். பெருமுயற்சியோடும், விடா முயற்சியோடும் கொண்டு வந்துள்ள திட்டந்தான், **"புதிய மதிய இலவச சத்துணவுத்திட்டமாகும்."**

1982 ஜூலைத் திங்கள் முதல் நாளிலிருந்து நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின் மூலம், தமிழகம் முழுவதும் சுமார் 60 இலட்சம் சிறுவர் சிறுமியர் பலன் பெற்று வருகின்றனர். ஒரு ஆண்டின் 365 நாட்களிலும் இந்தப் பயனை அவர்கள் பெற ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. 2 வயதிலிருந்து 5 வயதுவரையிலுள்ள குழந்தைகளுக்கு 'குழந்தைகள் காப்பகங்கள்' மூலம் மதிய உணவு வழங்கப் படுகிறது. 19,844, 'குழந்தைகள் காப்பகங்கள்' மூலம் 23 இலட்சம் குழந்தைகள் சத்துள்ள மதிய உணவைப் பெறுகின்றனர். 6 வயது முதல் 10 வயது முடிய உள்ள இளம் மாணவ—மாணவியர்க்குப் பள்ளிகளில் மதிய உணவு வழங்கப்படுகிறது. சிற்றூர்ப்புறங்களிலுள்ள 31,372 துவக்கப் பள்ளிகளில், சுமார் 37 இலட்சம் சிறுவர்-சிறுமியர், சத்துள்ள மதிய உணவைப் பெறுகின்றனர்.

ஊரக வளர்ச்சி, நகர வளர்ச்சி, வாழ்க்கை மேம்பாட்டுக்கான. நல்வாழ்வுத் திட்டங்கள், தன்னிறைவுத் திட்டங்கள், கல்வி மேம்பாடு, மருத்துவ வசதி, தொழில் வளர்ச்சி, உற்பத்திப் பெருக்கம், வேளாண்மை விரிவாக்கம், மொழி ஆக்கம், கவின் கலைகள் வளர்ச்சி போன்றவற்றில் முனைந்து பாடுபட்டு வரும் தமிழக அரசு மதிய சத்துணவுத் திட்டத்தின் இன்றியமையாத சிறப்பு—பயன், ஆக்கம், ஏற்றம் ஆகியவை கருதி எப்பாடுபட்டேனும் ரூ. 100 கோடி அளவுக்கு ஒதுக்கீடு செய்து, இந்தத் திட்டத்தை, வெற்றிகரமாக ஆக்க வேண்டும் என்பதில், முனைப்புள்ளத்தோடு செயல்பட்டு வருகிறது.

தமிழக அரசானது, வளர்ச்சித் திட்டங்கள்— ஆக்கத்திட்டங்கள்— சமூக நல்வாழ்வுத் திட்டங்கள் பலவற்றை முறைப்படி நிறைவேற்றிவருவதோடு பல்வேறு அறப் பணித் திட்டங்களையும் நிறைவேற்றி வரு

கிறது அவைகளில் தலைசிறந்த அறப் பணித்திட்டமாகத்தான், இந்தப்புதிய மதிய சத்துணவுத் திட்டம் திகழ்கிறது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், புதிய திட்டத்தைக் கொண்டுவருவதற்கு முன்பு, சுமார் 19 இலட்சம் மாணவ—மாணவியர் பலன் பெற்றார்கள். இப்பொழுது புதிய திட்டத்தின் மூலம் 60 இலட்சம் குழந்தைகள் பலன் பெறுகிறார்கள். முன்பு 200 நாட்களுக்கு மட்டுமே மதிய உணவு அளிக்கப்பட்டது. இப்பொழுது 365 நாட்களுக்கும் அளிக்க ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்பு 15 காசு பெறுமானமுள்ள உணவு வழங்கப்பட்டது. இப்பொழுது 45 காசு மற்றும் 50காசு பெறுமானமுள்ள ஊட்டச்சத்துள்ள உணவு வழங்கப்படுகின்றது.

காப்பகங்களில் சுமார் 53,000 பேர்கள் உதவியாளர்களாகப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். பள்ளிகளில் சுமார் 62,000 பேர்கள் புதிதாக உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ளனர். நியமிக்கப்பட்டுள்ள பெண்களில் ஆதரவற்று விளங்கும் விதவையர்க்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

குழந்தை ஒவ்வொன்றிற்கும் ரூ. 4 பெறுமானமுள்ள தட்டு ஒன்றும், குவளை ஒன்றும் வழங்கப்பட்டுள்ளன.

சிற்றூர்ப்புறங்களில் உணவுக் கூடங்கள் ஒவ்வொன்றும் ரூ. 38,000 செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

11 வயதிலிருந்து 14 வயது வரையிலுள்ள மாணவ—மாணவியர் சுமார் 1 இலட்சத்து 21 ஆயிரம் பேர்களுக்கு, ஆண்டுக்கு 200 நாட்களில், 50 காசு பெறுமான மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புறங்களில் உள்ள 4,700 துவக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவ—மாணவியர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் 200 நாட்களுக்கு மதிய உணவு பெற்று வருகின்றனர். சிற்றூர்ப்புறங்களைப்போல நகர்ப்புறங்களில் உள்ள சுமார் 15 இலட்சம் ஏழைக்குழந்தைகளுக்கும் இலவச மதிய சத்துணவைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளிலிருந்து வழங்குவதற்கான திட்டம் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பரிந்துரையின் பேரில், தமிழக அரசின் ஆய்வில் இருந்து வருகிறது.

நல்ல சிந்தனைகளிலிருந்துதான், நல்ல செயல்கள் தோன்ற முடியும் என்பது சான்றோர் வாக்கு. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் நல்ல சிந்தனையிலிருந்துதான், இந்த நல்ல திட்டமும் தோற்றம் பெற்றுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திட்டத்தின் நல்லநோக்கத்தையும், அதன் மூலம் எதிர்பார்க்கும் பலனையும் நல்லவர்கள், நாட்டின் நலனிலே அக்கறை கொண்டவர்கள், நானிலம் புகழும் நல்லறிஞர்கள், குவலயம் போற்றும கல்விச் சான்றோர்கள், ஆக்க உணர்வு படைத்த அரசியல் தலைவர்கள், நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த ஏழை எளிய மக்கள், அன்புள்ளங்கொண்ட தாய்மார்கள் போன்ற சீரிய தரப்பினர் பலரும் போற்றிப் பாராட்டி வாழ்த்தி, வரவேற்றிருப்பது, தமிழக அரசினர்க்கு மனநிறைவையும், மனமகிழ்வையும் அளிக்கின்றது. இந்தியப் பேரரசின் நிதி அமைச்சர் மாண்புமிகு திரு பிரனாப் முகர்ஜி அவர்களும், இந்தியத் தலைமை அமைச்சர் மாண்புமிகு திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களும், இந்தத் திட்டத்தை வரவேற்றுப் பாராட்டியிருப்பதோடு, இந்தத் திட்டம் பற்றிய முழு விவரத்தையும் அறிந்து கொள்ள ஆவல் கொண்டுள்ளார்கள் என்ற செய்தி, எல்லோர்க்கும் பெருமிதம் அளிக்கின்றது.



திட்டத்தின் நோக்கம் நல்ல நோக்கம், திட்டத்தை நிறைவேற்ற ரூ. 100 கோடிக்கு மேல் செலவு செய்யப்படுகிறது; பணமும் பண்டங்களும் ஏராளமாகவும், தாராளமாகவும் வழங்கப்படுகின்றன; வாய்ப்புக்களும், வசதிகளும் பரவலாகவும் முறையாகவும் செய்யப்படுகின்றன என்றாலும், இலவச மதிய சத்துணவு, அன்றாடம், 60 இலட்சம் குழந்தைகளுக்கும் குற்றங்குறைகள் இன்றி போய்ச் சேருவதிலேயேதான், இந்தத் திட்டத்தின் முழு வெற்றியும் அடங்கி இருக்கின்றது. இந்தப்பணி எல்லா இடங்களிலும் செவ்வனே நிறைவேற, ஆங்காங்கு பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருக்கின்ற அதிகாரிகள்—அலுவலர்கள், மேற்பார்வையிட வேண்டிய

காப்பகக் காப்பாளர்கள் —பள்ளி ஆசிரிய — ஆசிரியைப் பெருமக்கள், நலக்குழு உறுப்பினர்கள், சமையல்கூட உதவியாளர்கள் ஆகியோரின் குழு ஒத்துழைப்பு குற்றங்களற்ற முறையில் வேண்டப்படுகிறது. ஒவ்வொரு இடத்திலும் உள்ள பொது நலம் பேணுவோர், பொது நலத் தொண்டர்கள், ஊர்ப் பெரியவர்கள், கற்றறிந்த நல்லவர்கள், சமூகத் தொண்டில் தியாகவுணர்வோடு ஈடுபடக் கூடிய பல்வேறு கட்சிகளையும் சார்ந்த தொண்டர்கள், அறநிறுவனங்களைச் சேர்ந்த தொண்டுள்ளம் படைத்தோர் முன்வந்து ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொருவர் என்று முறைப்பட்டியல் அமைத்துக்கொண்டு, ஒரு மணிநேரம் மட்டும் செலவழித்து, அன்றாடம் வருகை தந்துள்ள குழந்தைகள் எவ்வளவு? மதிய உணவு உண்ட குழந்தைகள் எவ்வளவு? என்ற கணக்கை மட்டும் கண்காணிப்பு ஏட்டில் எழுதிக் கையொப்பமிட்டு, கவத்து, மேற்பார்வையிட்டுச் செல்வார்களேயானால் பணமோ, பண்டமோ விரயமாகவோ, குறையவோ, காணாமற் போகவோ வழி ஏற்படாது.

ஒவ்வொரு இடத்திலும் இப்படிக் குறைந்தது முப்பது 'நல்ல தொண்டர்கள் கிடைப்பார்களேயானால் ஒவ்வொருவரும் திங்களுக்கு ஒரு நாள், ஒரு மணிநேரம் பொறுப்பு ஏற்றுக் கொண்டால் போதுமானது. மக்களின் வரிப்பணத்தால் நிறைவேற்றப்படும் திட்டத்தைக் கண்காணிக்கவும், சீர்படுத்தவும், சிறப்புதவி புரியவும், குழந்தைகளின் அன்புத்தாய் தந்தையராய் விளங்கவும், நல்லவர்கள் ஊருக்கு ஊர், இடத்திற்கு இடம், பள்ளிக்குப் பள்ளி, காப்பகத்திற்குக் காப்பகம் முன்வருவார்களேயானால், திட்டம், நூற்றுக்கு நூறு வெற்றி பெறும் என்பது திண்ணம். இந்த வேண்டுகோளைத் தான் தமிழக அரசின் சார்பாகத் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்குப் பணிவன்போடு விழைந்து விடுகின்றேன்.

திட்டத்தைச் சிறப்புற நிறைவேற்ற தமிழக அரசுக்கு உறுதுணையாக இருக்கும் வகையில், சமையற்கூடங்கள் கட்டித்தர, நிலக்கொடை வழங்க, நிதிக்கொடை வழங்க, உணவு செய்யும் பாண்டங்கள் கொடுக்க, காய்கறிகள் வழங்க முன்வரவேண்டும் என்று ஆங்காங்குள்ள அறநெறிச் செல்வர்களையும், அற நிறுவனங்களையும், பெருநிலக்கிழார்களையும், பெருந் தொழிலதிபர்களையும், வாணிகப் பெருங்குடி மக்களையும், வள்ளல் பெருமக்களையும், பொது மக்களையும் வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை-எளிய இளஞ்சிறார்களின் கொடிய பசிப்பிணியைத் தீர்த்து, வலிய உடல் வளர்ச்சியையும், உள்ள வளர்ச்சியையும் தரும் இந்தப் புதிய இலவச சத்துணவுத் திட்டம் என்றென்றும் வாழ்க! எல்லா வகையிலும் வெல்க—என்று கூறிடுவதில் பெருமை கொள்கிறேன், பெருமிதம் அடைகிறேன்.

18.7.'82 அன்று வானொலியில் ஆற்றிய உரை.

அடுத்த இதழில்...

மாண்புமிகு கல்வி அமைச்சர்
திரு. செ. அரங்கநாயகம்
அவர்கள்
எழுதும்
பயணக் கட்டுரை





புகழ் பெற்ற நாவலாசிரியர்
லக்ஷ்மி
எழுதும்
'பார்வதி
பொழுத்தினாள்'
(சிறுகதை)

# படமும் செய்தியும்



சென்னையில் தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் வீடியோ மையத் திறப்பு விழாவில் (28-7-82) மாண்புமிகு மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு வசந்த் சாத்தே அவர்களும், மாண்புமிகு தமிழக செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்களும் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின், சிந்தாதிரிப் பேட்டைக் கிளைத் திறப்பு விழாவில் (27-7-82) மாண்புமிகு சட்டம்–கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி.பொன்னையன் அவர்களிடம், வங்கியின் தனி அலுவலர் திரு. இரெ. ஆறுமுகம் அவர்கள், வங்கி ஊழியர்கள் சார்பில் முதல்வரின் மதிய இலவச சத்துணவுத் திட்டத்திற்கு 26,000 ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.





சென்னை இராயபுரம் பகுதியில் மக்கள் குறைகேட்கும் நாள் (16-7-82) அன்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் நேரில் அப்பகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிந்து நடவடிக்கைகள் மேற்கொண்டார்.

# பெருநாளில் ஒரு திருப்பணி

ரம்ஜான் திருநாளையொட்டி சென்னை முஸ்லீம் பெண்கள் சேவா சங்கத்தினர், ஏழை விதவைப் பெண்களுக்கு உதவி வழங்கும் விழாவை, சென்னை ராஜாஜி மண்டபத்தில் 18.7.82 அன்று நடத்தினர்.

விழாவில், மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் கலந்து கொண்டு ஏழைப் பெண்களுக்குத் தையல் இயந்திரம், துணிகள், பண உதவி அளித்தார்கள்.

விழாவுக்கு, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சி. கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார். எத்திராஜ் கல்லூரி துணை முதல்வர் நூர்ஜஹான் அப்துல்காதர், சங்க கவுரவச் செயலாளர் உபயதுல்லா ஆகியோர் பேசினர். 500 பெண்களுக்குச் சேலை, ரவிக்கை, மேலாடையும் 15 ரூபாய் உதவிப் பணமும் வழங்கப்பட்டன. 10 ஏழைப் பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. முஸ்லிம் சமுதாய மாணவிகள் மேல்நிலைப் பள்ளித் தேர்வில் முதலிடம் பெற்ற 3 பேருக்குத் தலா 250 ரூபாய் வழங்கப்பட்டது. இந்த உதவிகளை முதல்வர் அவர்கள் வழங்கினார்.

விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தமது உரையில் பேசும்போது குறிப்பிட்டதாவது:

"யாருடைய கரத்தால் இந்த இனிய விழா நடைபெற வேண்டும் என்று தாய்மார்கள் நினைத்தார்களோ, அதே கரத்தால் இன்றைக்கு இந்த விழா சீரோடும் சிறப்போடும் நடந்துள்ளது. தாய்க்குலத்தின் கண்ணீரைத் துடைக்கின்ற தலைவர் புரட்சித் தலைவர்கள் அவர்கள். தைத் திங்களிலும் தீபாவளித் திருநாளிலும் ஏழை-எளியவர்களுக்கு இலவசமாக உணவும் உடையும் ஆண்டுதோறும் வழங்கி வருகிறார். நமது முதல்வர் அவர்கள். கண்ணை இமை காப்பது போல புரட்சித் தலைவர் இன்றைக்கு மக்கள் நலனுக்காகத் தன்னை அர்ப்பணித்து வருகிறார். தாய்க்குலம் மீது நபிகள் நாயகம் எப்படிப் பாசத்துடன் இருந்தாரோ அதே போல, நமது புரட்சித் தலைவர் அவர்களும் தாய்க்குலத்து மீது பாசம் வைத்து இதுபோன்ற நற்காரியங்களைச் செய்து வருகிறார்கள். தமிழகம் முழுவதும் இன்றைக்கு 63 இலட்சம் ஏழை-எளிய மாணவர்களுக்குச் சத்துணவு அளித்து நாட்டு மக்கள் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கிறார்கள். இந்தச் சத்துணவுத் திட்டம் செம்மையாகச் செயல்பட மக்கள் ஆதரவு தர வேண்டும்."

மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

### உருவ வழிபாடற்ற முறை

"இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்களை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே நபிகள் (ஸல்) அவர்களைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் கிருஷ்ணசாமி அவர்கள் கூறினார்கள்.

உருவ வழிபாடற்ற ஒரு முறையைக் கடைப்பிடிக்கும் இஸ்லாமிய சமுதாயம் எந்த அளவு ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்காதவர்கள் இருக்க முடியாது. இந்தச் சமுதாயத்திலிருப்பவர்களுக்கு என்னென்ன கடமைகள்



ஏழை முஸ்லீம் விதவைப் பெண்களுக்கு மாண்புமிகு முதல்வர் ஆடைகள் வழங்குதல்

-திருக்குரானில் சொல்லப்பட்டிருக்கிறதை- ஒன்றிரண்டை நான் குறிப்பிடுவது எனக்கு நினைவுபடுத்திக்கொள்வதாக அமையும். மறந்தவர்களுக்கும் நினைவுபடுத்துவதாக அமையும் என நான் கருதுகிறேன்.

"ஒவ்வொருவரும் தனது சொத்தில் மொத்தத்தில் என்று நான் அடைமொழியாகச் சேர்த்துக் கொள்கிறேன். இரண்டரை சதவிகிதத்தை ஏழை, எளியவர்களுக்கு ஒதுக்கித் தரவேண்டும் என்பது ஒகு சித்தாந்தமாகக் கூறப்பட்டிருக்கிறது.

**தொகுப்பு: ஜி. ஆனந்தன்**

## பெண் கல்வி

பெண் கல்வி நாட்டில் எந்த அளவுக்கு உயருகிறதோ, அந்த அளவு நாடு மேம்பாடு அடைகிறது என்று பொருள். படித்த ஆண்கள் தவறான வழியில் செல்லும் போது படிப்பு வாசனையற்ற பெண்கள் அவர்களைச் சரியான வழிக்குத் திருப்பி விடுகிறார்கள். இந்தக் குடும்ப அறிவை எந்தப் பள்ளியிலும் பயிலாமலே அவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு முறையான கல்வி அறிவும் கிடைத்தால் சமுதாயம் உயர்வதற்கும் சந்ததிகள் வாழ்க்கை சீர் பெறுவதற்கும் மெத்தப் பயனுடையதாக இருக்கும்.

—பேரறிஞர் அண்ணா

**நாங்கள் பாராட்டக் காரணம்**

“நோன்பிருப்பதை வெறும் நோன்பு என்று மட்டும் எடுத்துக்கொள்ளாமல் அவர் உண்ணாமலிருக்கும் பகல் நேர உணவு-அந்த வேளை உணவு இன்னொருவருக்குப் பயன்படப்போகிறது என்கிற சித்தாந்தத்தை நாம் மறந்துவிடக்கூடாது. நாங்கள் இஸ்லாமிய சமுதாயத்தைப் பாராட்டக் காரணம் ஏழை பணக்காரன் என்பது இயற்கையாக ஆண்டவன் சிருஷ்டியில் இல்லை. அவரவர் வாய்ப்புதான். சந்தர்ப்பம்தான். அவரவர் செய்கின்ற துணிச்சலான காரியத்தினால் தான் அந்த இடத்தை எய்துகிறான். அதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். சட்டப்படி ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். ஒரு இஸ்லாமியனாக இருப்பானானால் அதைச் செய்தாக வேண்டும் என்றிருப்பதை எண்ணி எண்ணிப் பாராட்ட வேண்டும்.

“அந்தக் கொள்கையைச் சொன்னவர்களுக்கு—கடைப்பிடிப்பவர்களுக்கு, கடைப்பிடித்து வருபவர்களுக்குத் தலைகுனிந்து கைகூப்பி வணக்கம் தெரிவிக்க விரும்புகிறோம். இங்கே ஏழைகளுக்குத் துணிகள் கொடுக்க இருக்கிறார்கள். மானத்தை மறைக்க இலவசமாகத் துணிகள் கொடுக்க இருக்கிறார்கள்.

**யார் தயவுமின்றி வாழும் நிலை**

“என்றைக்கு அவரவர்களால் வாங்க முடிகிறதோ அன்றுதான் இந்தியா சுதந்திரம் பெற்றதற்கு அடையாளமே தவிர, இன்னொருவருடைய கையை எதிர்பார்த்து வாழும் வரையில் இந்தியா பரிபூரண சுதந்திரம் அடைந்ததாக யாருமே சொல்ல மாட்டார்கள்.

“அமரர் காந்தி சொன்னதில்லை, நேரு சொன்னதில்லை, இந்திராகாந்தி அம்மையாரும் சொன்னதில்லை, லால்பகதூர் சாஸ்திரி சொன்னதில்லை, அபுல்கலாம் ஆசாத் சொன்னதில்லை, மூதறிஞர் ராஜாஜி சொன்னதில்லை, அய்யா அவர்கள் சொன்னதில்லை, அமரர் அண்ணா சொன்னதில்லை, இதை நான் எதற்காகக் குறிப்பிடுகிறேனென்றால், இந்த வாய்ப்பை நாம் பெற்றாக வேண்டும்.

“எந்த ஒரு வீட்டிலும் எந்த ஒரு மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்த நம்பிக்கைக்குத் தன்னை ஆட்படுத்திக் கொண்டவர்களாக இருந்தாலும் அவர்கள் சமத்துவத்தோடு, சரி நிகராக வாழ்க்கையிலே ஒரு மனிதன் அவசியத் தேவைகளை யாவது பிறருடைய தயவில்லாமல் பெற்று வாழ்கின்ற நிலைமையை உருவாக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அந்தக் கடமையை இன்னும் யாரும் முழுமையாகச் செய்துவிடவில்லை என்பதை இங்கே சுட்டிக் காட்டுகின்றேன்.

**மக்கள் பணத்திலிருந்து மக்களுக்கே**

“இங்கே மாண்புமிகு அமைச்சர் கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்போது, 63 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் காரியத்தை முதலமைச்சர் செய்துள்ளார் என்று சொன்னார். யாருடைய பணம்? என்னுடைய தனிப்பட்ட பணமல்ல. மக்களுடைய பணம், மக்களுடைய வரிப் பணத்திலிருந்து, மக்களுக்குச் செலவு செய்கின்ற பணம் இதை உண்டு வளருகின்றவர்கள் எந்த ஒருதனி மனிதனுக்கும் கட்டுப்பட்டவர்களல்ல—கட்டுப்பட வேண்டியவர்களல்ல. அவர்கள் நன்றிக்கடன் செலுத்த எந்தத் தனிப்பட்ட மனிதனையும் தேடிச் செல்ல வேண்டிய அவசியமில்லை.

“இந்தப் பணம் தமிழக மக்களுடைய பணம் என்றால் தமிழக மக்கள்-தமிழ் நாட்டின் சொத்து. எனவே, தமிழ்நாட்டிற்குத்தான் இந்தக் குழந்தை வளர்ந்து எதிர்காலத்தில் நன்றி காண்பிக்க வேண்டுமே தவிர, யாருக்கும் அடிமையாகக் கைகட்டி நன்றி காட்டவேண்டிய அவசியமில்லை. நாங்கள் ஒரு குழு அமைத்திருப்பது உங்களுக்குத் தெரியும். அதில் ஒரு செய்தி வந்திருக்கிறது.

**ஒரு வேளைச் சாப்பாட்டிற்காக...**

“12, 13 வயதுச் சிறுவர்கள் சில வீட்டில் வேலை செய்கிறார்கள். எதற்கு வேலை செய்கிறார்கள் என்றால் சம்பளத்திற்காக அல்ல. ஒரு வேளைச் சாப்பாட்டிற்காக, தாய் தந்தையர்கள் வேலைக்குப் போகும் போது ஒரு வேளை உணவுக்காக வேறு வீடுகளுக்கு அனுப்புகிறார்கள்.

“இந்த வயதில் ஒரு வேளை உணவுக்காக வேலை செய்து கொண்டு எங்களுக்கு எங்கே சாப்பாடு என்று கேட்கிறார்களாம். ‘இல்லை’ உங்களுக்கு இல்லை. குழந்தைகளுக்குத்தான் என்று சொன்னால் ‘நீங்கள் எம். ஜி. ஆரிடம் சொல்லுவதில்லை. எம். ஜி. ஆரிடம் சொல்லுங்கள், எங்களுக்கும் சாப்பாடு கிடைக்கும்’ என்கிறார்களாம்.

“இதை நான் குறிப்பிடக் காரணம். மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை பெரியது. ஆனால் அரசுக்கு இருக்கும் சக்தி மிகமிகச் சிறியது.

**பிரித்துப் பார்க்க முடியாது!**

“ஒரு கொள்கையை எடுத்து நிறைவேற்றும்போது திட்டங்களைப் பிரித்துப் பார்க்க முடியாது. முஸ்லிம் சமுதாயக் குழந்தைகள் பகலில் உண்ணக்கூடாது என்று சொன்னால், அவர்களுக்காக மாற்றி வைக்க வேண்டியிருந்தது. மாலை 7 மணிக்கு மேல் அவர்களுக்குச் சமைத்துக் கொடுக்க வேண்டும்

என்று உத்தரவிட்டிருப்பது உங்களுக்குத் தெரியும்.

"அதற்காக அந்தத் தாய்மார்கள்-சமையல் செய்பவர்கள் 3 மணி நேரம் அதிகமாக இருந்து அந்தக் குழந்தைகளுக்கு உணவு ஊட்டி விட்டு செல்ல வேண்டி இருக்கிறது. அதற்காக அவர்கள் ஓவர்டைம் கேட்கவில்லை; கேட்க மாட்டார்கள்.

"ஆனால், இப்போது எங்கு பார்த்தாலும் ஒரு நாட்டிற்குத் தொண்டு செய்பவர்கள், வேலை செய்யும்போது பல பிரச்னைகளில் ஏலம் போடுகிறார்கள். தன்னுடைய கடமையை ஏலம் போடுகிறார்கள். தன்னுடைய நாட்டிற்குச் செய்ய வேண்டிய தியாக உணர்வை விலை பேசுகிறார்கள்.

**அரசு சரிபாதி உதவி!**

"அவைகளையெல்லாம் நீக்க வேண்டுமானால் படித்தவர்கள், விவரம் தெரிந்தவர்கள் மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். சாதாரண மக்களுக்கு அல்ல, அப்படிப்பட்ட பணியிலிருப்பவர்களுக்குக் கூட எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டுருக்கிறீர்கள். **இன்றைக்கு 500 தாய்மார்களுக்குத் துணிகளை இந்த அமைப்பு வழங்க இருக்கிறது. 100 ஆண்டுக் காலம் பணி செய்யும் அமைப்பு இதனைச் செய்கிறது என்றால், இதிலும் பாதிப் பங்கு சுமார் 20-லிருந்து 30 ஆயிரம் ரூபாயைத் தமிழக அரசு ஏற்றுக் கொடுக்கிறது.**

"கொடுக்கிறது என்றால் இந்தத் தாய்மார்களுக்கு மாதம் 15 ரூபாய் தருகிறது என்றார்கள். அந்தப் பணத்துடன் அரசு முதியோர்களுக்குத் தரும் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொடுங்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொன்னேன். உடனே மற்றவர்கள், "சங்கத்திலிருப்பவர்களுக்கு 50 ரூபாய்; எங்களுக்கு 35 ரூபாய் 25 ரூபாய்தானா" என்று போட்டிக்கு வந்துவிடக் கூடாது.

**ஒன்றே குலம் ஒருவனே தேவன்**

"சில சந்தர்ப்பங்களில் சிலருக்கு ஒரு ரூபாய், 2 ரூபாய்கூட கிடைக்கலாம். இருக்கின்ற சூழ்நிலையை வைத்து, நமக்கிருக்கிற சக்தியை வைத்து வாழ்க்கையை எப்படி நடத்திக் கொள்ள வேண்டுமோ அப்படி நடத்திச் செல்லக்கடமைப்பட்டிருக்கிறோம்.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று அமரர் அண்ணா எங்களுக்குச் சொன்னதன் விளைவாகத்தான் இன்றைய தினம் முஸ்லிம் பெரியவர்களைச் சந்திக்கும்போது நெஞ்சாரத் தழுவ முடிகிறது. அது ஒரு மதத்தினுடைய கோட்பாடு-நம்பிக்கையாக இருந்தாலும் அது எங்களுக்கும் பொருந்துகிறது. ஏனென்றால் எங்களுக்கு "ஒன்றே குலம் தான் ஒருவனே தேவன்தான்".

**சத்துணவு நகரத்திற்கும் விரிவுபடுத்தப்படும்**

"எங்கெங்கே அன்பைக் காணுகிறோமோ, பண்பைக் காணுகிறோமோ அங்கெல்லாம் இறைவனைக் காணுகின்றோம். ஆகவேதான் ஒரு மனிதன் வேறுபட்ட உணர்ச்சிக்கு-காழ்ப்புணர்ச்சிக்கு ஆளாக இடமில்லாமல் இருக்க வேண்டுமென்றால் உணவு பிரச்சினை இருக்கக் கூடாது. இருக்க வீடில்லை என்ற பிரச்சினை இருக்கக் கூடாது, செய்ய தொழில் இல்லை என்ற பிரச்சினை இருக்கக் கூடாது.

"**அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15 லிருந்து வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குழந்தைகளுக்கும் இந்த உணவுத் திட்டத்தை நகரத்திற்கும் விஸ்தரிப்பது என்று திட்டமிட்டிருக்கிறோம்.** நாம் ஆரம்பித்திருக்கிற திட்டம் ஆங்காங்கே செயல்படும் அனுபவத்தை வைத்து நகரங்களிலும் செயல்படுத்த இருக்கிறோம்.

"இந்தத் திட்டம் எவ்வளவு மகத்தான திட்டம் என்பதைச் சொல்லும்போது, மகத்தான என்று சொல்வது பெருமை சேர்க்கக் கூடியது என்று நான் சொல்லவில்லை. இது ஒரு சுமையான-மிகப் பெரிய சுமையான திட்டம் என்பதைச் சொல்லுகிறேன்.

"இதற்கு நிதி சேர்த்தாக வேண்டும். நிதி வேண்டும். ஆண்டுக்கு ஆண்டு நிதி வேண்டும். ஆண்டுக்கு ஆண்டு எண்ணிக்கை அதிகரிக்கும். எவ்வளவுதான் நாம் குடும்பக் கட்டுப்பாடு செய்தாலும் எண்ணிக்கை அதிகரிக்கும்.

"இவைகளைத் தனிப்பட்ட அரசு நிறைவேற்றிட முடியாது. 63 இலட்சம் குழந்தைகள் என்று சொல்லுகின்றோம், ஒரு பகுதியில் 13 இலட்சம் பேர் என திட்டமிட்டோம். ஆனால் இப்போது 18 இலட்சம் பேர் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

"சில இடங்களில் தாய்மார்கள், ஏழைக் குழந்தைகளையும் அனுப்பிவிட்டு பெரியவர்களும் வந்து உட்கார்ந்து விடுகிறார்கள். இதையும் கவனிக்க வேண்டும். குழந்தைகளுக்கு உணவு கொடுப்பது என்பது எளிதான காரியம் அல்ல. ஏழை - பணக்காரன் என்ற எல்லைக்கு அப்பாற்பட்டு, சாதி மதத்திற்கு அப்பாற்பட்டு காரியத்தைச் செய்தால் மற்ற மாநிலமும் சத்துணவுத் திட்டத்தினைப் பின்பற்றும்.

**ஆந்திரக் கல்வி அமைச்சர் பாராட்டு**

"ஆந்திர மாநிலக் கல்வி அமைச்சர் சொந்த காரியமாக தர்மபுரிக்கு வந்தார். மாவட்ட ஆட்சித் தலைவரோடு திடீரென மதிய உணவுத் திட்டம் செயல்படும் இடங்களைச் சென்று பார்வையிட்டார்.

"சமையல் செய்த சாதத்தை உண்டு பார்த்து, "சாப்பாடு நன்றாக இருக்கிறது: குழந்தைகள் சாதி மத வித்தியாசம் இன்றி உணவு உட்கொள்வதைப் பார்த்துவிட்டு ஆந்திராவிலும் இதைக் கொண்டு வருவோம். இதுதான் முதல் வேலை!" எனச் சொல்லியிருக்கிறார்.

"இதில் பெருமையைவிட, தேவையும் சூழ்நிலை உருவாவதும் நமக்குத் தேவை. அந்தத் தேவை உருவாகிறது. இதை வெற்றிகரமாகச் செய்ய நீங்கள் ஒத்துழைக்க வேண்டும்.

"ஏழை விதவை முஸ்லீம் மக்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட விழாவாக இருந்தாலும், தேசிய ஒருமைப்பாட்டிற்கு மேலும் பெருமை சேர்க்கும் விழாவாக சாதி-மத-இன வேறுபாடின்றி அமைத்துத்தரப்பட்ட இனிய விழாவாக இது இருந்தது என்று கூறினால் அது மிகையாகாது.







# பால் தேவை நிறைவேற பாங்கான திட்டம்!

சென்னை அரும்பாக்கம், சாந்தி காலனி, அண்ணா நகர் ஆகிய இடங்களில் புதிய பால் வழங்கு தானியங்கி நிலையங்கள் (Automatic Vending Machine Units) அமைக்கப்பட்டுள்ளன.

இதன் தொடக்க விழா ஜூலைத் திங்கள் 17–ஆம் நாள் சென்னை அரும்பாக்கத்தில் உள்ள, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமக் குடியிருப்புப் பகுதியில் நடந்தது. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தி இணையத்தின் நிர்வாக இயக்குர் திரு. ஏ. எம். சுவாமிநாதன், இ. ஆ. ப. அவர்கள் தலைமை வகித்தார்.

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் பொது மேலாளர் திரு ஆர். கோபாலன் இ. ஆ. ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், இணையத்தின் இணையிலாப் பணிகளை எடுத்துக் கூறினார்.

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை–பால் வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், பால் வழங்கு தானியங்கி நிலையங்களைத் துவக்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

"சென்னை நகரில் 100 தானியங்கி பால் வழங்கு நிலையம் அமைப்போம் என்று கூறினோம். அதன்படி ஓராண்டுக் காலத்தில் 25 நிலையங்கள் அமைத்துள்ளோம். இன்னும் 2 ஆண்டுகளில் மேலும் 75 நிலையங்கள் அமைப்போம். இப்போது 40 இடங்களில்தான் ஐஸ் கிரீம் விற்கப்படுகிறது. மேலும் 800 இடங்களில் ஐஸ் கிரீம் விற்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

"பால் விநியோகத்தில் கலப்படம், குறித்த நேரத்தில் கிடைப்பதில்லை என்று பல குறைபாடுகள் உள்ளன. இவற்றைப் போக்க நுகர்வோர் சங்கங்களின் மூலம் பால் விநியோகம் நடைபெற்று வருகிறது. இப்போது 9 இடங்களில் அவ்வாறு பால் விநியோகிக்கப்படுகிறது. இன்னும் 7 இடங்களில் நுகர்வோர் சங்கங்கள் மூலம் பால் விநியோகிக்கத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

"நகரின் 50 சதவீத பால் தேவையை இந்த நிறுவனம் பூர்த்தி செய்து வருகிறது. நியூசிலாந்து நாட்டில் 15000 பேர் பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளார்கள். ஆண்டுக்கு ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள பாலும், பால் பொருள்களும் அங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. நம் நாட்டில் 3 இலட்சம் விவசாயிகள் பால் உற்பத்தியில் ஈடுபட்டு உள்ளனர். இன்னும் மூன்றாண்டில் பால் உற்பத்தியாளர்கள் எண்ணிக்கையை 10 இலட்சமாக உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது.

விழாவில் அமெரிக்கவாழ் தமிழர் டாக்டர் ரகுநாத் அவர்கள் கலந்துகொண்டு, தமிழக அரசின் பணிகளை வெகுவாகப் பாராட்டிப் பேசியது அனைவரையும் கவர்ந்தது. விழாவுக்கு ஆடவர், மகளிர், குழந்தைகள் திரளாக வந்திருந்தனர். தங்கள் பகுதியில் பால் வழங்கு தானியங்கு நிலையம் அமைந்ததை எண்ணி மகிழ்ந்தனர்.

—பி. வி. ஜி.

# அமோக விளைச்சலுக்கு





# உரத்தைத் திறம்படப் பயன்படுத்துங்கள்



உயர் விளைச்சலுக்கு உரம் மிகவும் அவசியம். உரத்தின் விலையும் சாகுபடி செலவும் அதிகமாக உள்ள இந்நேரத்தில் உரத்தைத் திறம்படப் பயன்படுத்துவது மிகவும் முக்கியம்.

1. முதலில் உங்கள் நிலத்துக்கும் பயிருக்கும் ஏற்ற சரியான உரத்தைத் தேர்ந்தெடுங்கள். மண் பரிசோதனை செய்து, அதன் சிபாரிசுப்படி உரமிடுங்கள்.

2. ஒவ்வொரு பயிருக்கும் உரமிடும் முறைகள் வேறுபடும். அதை அறிந்து முறையாக உரமிட வேண்டும்.

3. பண்ணையில் கிடைக்கக்கூடிய தொழு உரம், பண்ணைக் கழிவுகள் போன்றவற்றையும் சிறந்த முறையில் சேகரம் செய்து பாதுகாத்துப் பயன்படுத்த வேண்டும்.

4. மேலுரமாக யூரியாவை ஒரே தடவையில் இடாமல், இரண்டு-மூன்று தடவைகளில் பிரித்து இட வேண்டும். யூரியாவை வேப்பம் புண்ணாக்குடன் கலந்து இட வேண்டும்.

மேலும் உரத்தைத் திறம்படப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளையும், விரிவான சாகுபடி முறைகளையும் அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள் :

மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001

VIJAY




சமச்சீர் உரமிட

விஜய்

HTM-MFL-2526

# குடிப்பதை விடுவது குடும்பத்தைக் காக்கும்

மு. முத்துக்காளத்தி

வாழ்நாளைச் சுருக்க, மனிதனின் கழுத்துக்குக் கயிறு போடும் இரண்டு எமதூதர்கள் இருக்கிறார்கள். ஒன்று குடி, இன்னொன்று பிடி. அதாவது, மதுவும் புகையும்; இதில் மது பட்டாக்கத்தி பயில்வான். பூகம்பம் போன்றது. விரைந்து அழிப்பது. புகை ஜேப்படி திருடன் மாதிரி. கொஞ்சம் கொஞ்சமாக ஆளைக் குளத்தில் மூழ்கவைத்து சாகடிப்பதுபோல. இரண்டுமே தீமை பயப்பன. தீயென அஞ்சத்தக்கன.

திருவள்ளுவர் காலத்திலிருந்தே மதுவை வெறுத்துப் பேசாத சான்றோர்கள் இல்லை; அறிஞர்கள், அறவோர்கள் இல்லை. தேசத் தந்தை காந்தியடிகள், மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் குடியின் கொடுமைகளை விளக்கியிருக்கிறார்கள். மற்றவர்களுக்கு மதுவில் மயக்கம் ஏற்படும். ஆனால் அண்ணாவோ தமக்கு ''மதுவிலக்கில் மயக்கம்'' இருப்பதாகச் சொன்னார்கள். இப்படிப்பட்ட பெரியோர்கள், பேரறிவாளர்கள் சொல்லியும் திருந்தாத மக்களை என்னென்பது! அண்மையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மது விலக்குக் கொள்கை தம் ஊனோடும் உயிரோடும் கலந்துவிட்ட கொள்கையென்றும், அதற்காகக் கையெழுத்துப் போடும் பொழுதெல்லாம் கண்ணீர் விடுவதாகவும் கல்லும் கரையும் வண்ணம் எடுத்துரைத்தார்கள். இக்கனிவுரையாவது கள்ள மது குடிப்போரை மெல்ல வழிப்படுத்துமா?

ஆரம்பத்தில் மனிதன் மதுவைக் குடிக்கிறான். போகப் போக மது, மனிதனைக் குடித்து விடுகிறது. அவனை மட்டுமின்றி, அவனது குடும்பத்தையும் குடித்து விடுகிறது. பீர், விஸ்கி, பிராந்தி, ஜின், ரம், ஒயின், சாராயம், பட்டை, நாட்டுச் சாராயம் எல்லாமே மனித கண்ணியத்துக்கு அப்பாற்பட்டவைதான். உடல் நலனுக்கு ஊறு விளைப்பவை. விஷத்தன்மை வாய்ந்தவை. விலக்கவேண்டியவை.

படித்தவர்கள், பணக்காரர்கள், பதவியில் இருப்பவர்கள் பார்ட்டிகளில் குடிக்கிறார்கள். குப்பனும், சுப்பனும் குடிசைகளில் குடிக்கிறார்கள். வசதி படைத்தவர்கள் உயர்ந்த ரகங்களையும், வசதி குறைந்தவர்கள் மட்ட ரகங்களையும் வாங்கி 'மடக் மடக்'என்று குடிக்கிறார்கள். இரு சாராருமே சந்தோஷத்துடன் கொஞ்சம் கொஞ்சமாகத் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

நாம் சாப்பிடும் எந்த உணவும் உடம்பில் ஜீரணமாக நேரம் பிடிக்கும். மது அப்படியல்ல. சாப்பிட்ட 15 நிமிடங்களுக்கெல்லாம் அது வயிற்றிலிருந்தும் சிறு குடலிலிருந்தும் கிரகிக்கப்பட்டு, இரத்த ஓட்டத்தில் சேர்க்கப்படுகிறது. வெறும் வயிற்றில் சாப்பிடும் பொழுது இந்த வேகம் இன்னும் அதிகமாகிறது. உச்சி முதல் உள்ளங்கால் வரை எல்லாப் பகுதிகளிலும் இந்தக் ''கில்லர்'' பாய்கிறது. இதை ''கிக்'' என்று மகிழ்ந்து மனிதர்கள் மரணப் பிடியில் சிக்கிக்கொள்கிறார்கள்.

கொஞ்சமாகச் சாப்பிட்டால் கேடில்லை என்பது உண்மைதான். ஆனால் அந்தக் கொஞ்சத்தோடு இந்த நஞ்சு நின்று விடுவதில்லை. ஆரம்பத்தில் கொஞ்சம் சாப்பிட்டதும் போதையேறும். போகப் போக அதிகம் சாப்பிட்டால்தான் போதை வரும். பேதை மனம் தெளியும்போது காலம் கடந்து விடும். காலன் நெருங்கி விடுவான்.

**குடியால் வரும் கேடுகள்:**

மனிதன் அருந்தும் சாராயத்தில் 95 சதவிகிதம் உடம்புக்குள் எரிக்கப்பட்டு விடுகிறது. மீதி சிறுநீரிலும், வியர்வையிலும், வெளியிடுகிற மூச்சிலும் வெளியேறிவிடுகிறது. ஒருவன் குடித்திருக்கிறானா இல்லையா என்பதைப் பார்க்க அவனை





தீண்டாமைக்கு அடுத்தபடியாக மிகவும் கண்டிக்கத் தக்கது ஒன்று உண்டென்றால், அது குடி என்ற சாபக்கேடுதான்.

குடிப்பழக்கத்திற்கு இரையான ஒரு நாட்டுக்கு அழிவைத் தவிர வேறொன்றும் கிடையாது.

அபினி மற்றும் போதையளிக்கும் பொருள்கள், மனிதனின் உள்ளத்தை முடமாக்கி, மிருகங்களுக்கும் கீழ்த்தரமான நிலைக்கு அவனைக் கொண்டு வருகின்றன.



மதுவிலக்கை மகாத்மா காந்தியடிகள் ஒரு கொள்கையாக அல்ல, வாழ்க்கை முறையாகவே வலியுறுத்தினார். குடிகாரர்கள் தங்களை அழித்துக் கொள்வதுடன் தங்களைச்சார்ந்துள்ள மக்களையும் அழித்துவிடுகிறார்கள். சமுதாயத்தின் ஒழுக்கமும் சீரழிவுக்குள்ளாகிறது. மது விலக்கால் சமுதாயம் அடையும் நன்மைகள்தான், பிற எவற்றையும்விட முக்கியமானவை. உடல்நல மிக்க மக்களைக் கொண்ட நாடுதான் முன்னேற முடியும்.

மூச்சு விடச்சொன்னால் போதும். வாடையைக் கொண்டு கண்டு பிடித்துவிடலாம். சாராயத்தில் 80 சதவிகிதம் கல்லீரலில் எரிக்கப்படுகிறது. மீதி 20 சதவிகிதம் சிறுநீரகத்தில் எரிக்கப்படுகிறது. ஒரு மணிக்கு 5 மில்லியிலிருந்து 10 மில்லி வரை எரிக்கப்படுகிறது. இதற்குமேல் முடிவதில்லை. ஓடுதல், தாண்டுதல், குதித்தல் போன்ற உடல் நடவடிக்கைகளை வேகப்படுத்தினாலும் கூட மற்ற உணவுப் பொருட்களைப் போல் மதுவை இதற்குமேல் எரிக்க முடியாது. மதுவில் கார்போஹைட்ரேட் (carbohydrate) தவிர வேறு ஒன்றும் கிடையாது. சாதாரணமாக கார்போஹைட்ரேட் ஒரு கிராமுக்கு 4 கலோரி கொடுக்கும். புரதம் அவ்வாறே 4 கொடுக்கும். கொழுப்பு 9 தரும். சாராயம் 7 தருகிறது. சாராயத்தை கிளைக்கோஜனாகவோ (glycogen) கொழுப்பாகவோ (fat) மாற்றி உடம்புக்குள் சேர்த்து வைக்கமுடியாது. சாராயம் ஜீரணிக்கும் பிரச்சினையே கிடையாது. குடித்தவுடனே அது உடலுக்குச் சக்தியாகப் பயன்படக்கூடியது. கொஞ்சமாகக் குடித்தால் உடலில் கொழுப்பு, கார்போஹைட்ரேட்டுக்குப்பதில் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்தக் கார்போஹைட்ரேட் கலோரி மதிப்பு தவிர, சாராயத்தில் வேறு எந்தவிதமான சத்துகளோ வைட்டமின்களோ கிடையாது. இப்படியிருக்க அதை ஏன் குடிக்கவேண்டும்?

குடி ஆரம்பத்தில் பசியைத் தூண்டிவிடும். உற்சாகத்தைக் கொடுப்பதுபோல் தோன்றும். நாளாவட்டத்தில் சதை போட்டுவிடும். நீண்டநாள் குடித்துக் கொண்டே வந்தால் உடம்பு உருக்குலைந்துவிடும். வயிற்றுப் போக்கு உண்டாகும். பசியெடுக்காது. உணவிலிருந்து வைட்டமின் சத்துகளை உடலால் கிரகிக்க முடியாது.

குடித்தவுடன் மனம் குதூகலிக்கும். கட்டுப்பாடுகளைக் கடந்து களிப்பில் துள்ளும். மேலும் மேலும் குடிக்கும் பொழுது அது மனித உணர்வுகளைக் கீழ்த்தரமாக்கி, ஆளை நரம்புத் தளர்ச்சியில் தள்ளும். இரண்டு பேருக்கு முன்னால் நாலு வார்த்தை பேசக் கூச்சப்படும் ஒரு நபருக்குக் கொஞ்சம் மது கொடுத்துப்பாருங்கள். நம்முடைய நாட்டின் அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளை அலசியெடுத்து விடுவான். அரிய யோசனைகள் அவனது 'கூர்த்த மதியிலிருந்து' அலை அலையாக வரும். உளறிக் கொட்டுவான். நிதானம் தவறிப் பேசுவான். மானம், மரியாதை இழப்பான். மதுவின் தீமைகள் அளவற்றவை. இதயம், கல்லீரல், இரத்த ஓட்டம் எல்லாமே மதுவினால் பாதிக்கப்படுகின்றன. காம சுகத்தில் சாராயம் 'கிக்' கொடுக்கும் என்று சிலர் நினைக்கிறார்கள். கொஞ்சமாக இருக்கும் பொழுது அப்படியொரு உற்சாகம் வருவது உண்மையே! ஆனால் அளவோடு நில்லாதது தான் மதுவின் ஆற்றலே; அதிக மது ஆண்மைக் குறைவை உண்டாக்கிவிடும்.

*சாராயம் எரிக்கப்பட வைட்டமின் 'பி' காம்ப்ளக்ஸ் ஒரு கிரியா ஊக்கியாகப்* (catalyst) *பயன்படுகிறது.* அத்துடன் அது கல்லீரலையும் பாதுகாக்கிறது. குடி அதிகமாகும்பொழுது மேற்கொண்டு வைட்டமின் 'பி' காம்ப்ளக்ஸ் தேவைப்படுகிறது. அது கிடைக்காததால் கோளாறுகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடருகின்றன. குடிப்பதை விட்டுவிடுவதேபுத்திசாலித்தனம்; குடும்பத்தைக் காக்கும் உன்னத வழி!



# கிராமங்கள் தோறும் அடிப்படை வசதிகள்

எச். பி. என். ஷெட்டி,
(இ.ஆ.ப.)
ஆணையர் -அரசுச் செயலர்
ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித்துறை.

"சுத்தம் சுகம் தரும்" என்ற பழமொழி என்றோ கூறப்பட்டது. எனினும் இவ்வுலகம் உள்ளவரைக்கும் இப்பழமொழிக்கும் மதிப்புண்டு. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று கூறும்போது, நோயற்ற வாழ்வை நாம் பெற என்ன செய்ய வேண்டுமென எண்ண வேண்டியது அவசியம்.

இயற்கைச் சூழலில் ஓடுகின்ற ஆறுகளையும், தென்றலால் அசைகின்ற மரம் செடி கொடிகளையும் கொண்டிருந்தும் பல கிராமங்கள் தொற்று நோய்களுக்குக் காரணமான நோய்க் கிருமிகளின் இருப்பிடங்களாக இருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் திறந்த வெளிகளையும், புதர்களின் மறைவுகளையும், ஆறு மற்றும் கால்வாய்க் கரைகளையும், கழிப்பிடங்களாக மக்கள் பயன்படுத்தி வந்த வழக்கம் தலையாய காரணமாகும்.

மாதர்க்கு அணிகலனாகிய நாணத்தின் காரணமாக, இயற்கைக் கடன்களைக் கழிப்பதற்குக் கூட விடியாத காலைப் பொழுதிற்கும், இருள் கூடும் மாலைப் பொழுதிற்கும்-காத்திருக்க வேண்டிய கட்டாயம் உண்டு. அந்தக் கட்டாயத்தினால் மானத்திற்கும் உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம்.

எனவே தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்படுகின்ற பொழுதே — பெண்களுக்கான தனிக்கழிப்பிடங்கள் கட்டும் திட்டத்தை அரசு நிறைவேற்றி வந்தது. இத்திட்டம், கிராம மகளிர்க்குப் பெரிதும் பயனுள்ளதாக இருந்தது. எனினும், தக்க கழிப்பிடங்கள் இன்மையால்-ஆண்களாலும், சிறுவர்களாலும் கிராமப்புறச் சுகாதாரச் சூழ்நிலை சோதனைகளைச் சந்திக்க வேண்டியதாயிற்று. இதனை அறிந்த தமிழ்நாடு திட்டக் குழு, ஆண்களுக்கான கழிப்பிடங்கள் கட்டும் திட்டத்தையும் மேற்கொள்ளுமாறு ஆலோசனை நல்கியது.

எனவே, மாநிலத் திட்டக் குழுவின் இந்த யோசனையை ஏற்றுக்கொண்ட தமிழ்நாடு அரசு, ஆண்களுக்கான கழிப்பிடங்கள் கட்டும் திட்டத்திற்குத் தற்போது அனுமதி அளித்துள்ளது.

தமிழகத்திலுள்ள ஏறத்தாழ 16,000 வருவாய் கிராமங்களிலும், ஒரு கிராமத்திற்கு ஒரு கழிப்பிடம் என்ற விகிதத்தில் கழிப்பிடங்கள் கட்ட தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில் 8000 கழிப்பிடங்கள் 1982-83 ஆம் ஆண்டும் - எஞ்சியவை 1983-84-ஆம் ஆண்டிலும் கட்டப்படும்.

ஆறு கழிப்பறைகள் கொண்டதாக அமையும் இக்கழிப்பிடங்களில், நான்கு அறைகள் பெண்களுக்காகவும். இரு கழிப்பறைகள் ஆண்களுக்காகவும் ஒதுக்கப்படும். இயலுகின்ற இடங்களில் எல்லாம் குழாய் வழியே நீர் வழங்கப்படும். அத்தகைய தண்ணீர்த் தொட்டிகள் கட்டப்பட்டு, தண்ணீர் எப்போதும் வழங்கப்படும். இக்கழிப்பிடங்கள் ஆதிதிராவிடர்கள் குடியிருக்கும் பகுதிக்கு அருகாமையில் அவர்கள் பயன்படுத்தத் தக்க வகையில் அமைக்கப்படும். மேலும், மின் வசதி கிடைப்பின், இக்கழிப்பிடங்களில் மின் விளக்குகளும் அமைக்கப்படும். இவைகளைப் பராமரிக்கப் பணியாளர்களும் அமர்த்தப்படுவர்.

ஒரு கழிப்பிடம் கட்டுவதற்கு ரூ. 14,100 செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள 16,000 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படப் போவதால், இதற்கென ஏறத்தாழ ரூ. 22.56 கோடி தேவைப்படுகிறது.

கிராம மக்கள் நல்வாழ்விற்காக-அடுத்தடுத்துப் பல திட்டங்களை அறிமுகப்படுத்தி வரும் நமது முதலமைச்சர் அறிவித்த தன்னிறைவுத் திட்டத்தின் விரிவாக்கமே இத்திட்டம்!



ஆடுகள், உழவுமாடுகள், வண்டிகள், கயிறு திரிக்கும் கருவிகள், பாய்பின்ன, கரும்பு பிழிய தொழிற்கூடங்கள் அமைத்தல் போன்ற பல்வேறு பணிகளுக்காக 1039 பேருக்குக் கடனும், மானியமும் வாங்கித் தரப் பட்டிருக்கின்றன.

சின்னத்தடாகம் என்னுமிடத்தில் 100 ஆதிதிராவிடக் குடும்பத்தைச் சார்ந்தவர்களை செங்கல் தயாரிக்கும் தொழிலில் ஈடுபடுத்தும் முகத்தான், சங்கம் ஒன்று பதிவு செய்யப்பட்டு ரூ. 8,68,000 செலவில் செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலை உருவாக்கப்பட்டு வருகிறது. சூலூர் என்னுமிடத்தில் 100 ஆதிதிராவிடப் பெண்கள் பயன் பெறும் வகையில் ரூ. 5.45 இலட்சம் செலவில் பாலித்தீன் பைகள் தயாரிக்கின்ற தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இதைப் போலவே 525 மலை வாழுநர் குடும்பங்கள் பில்லூர் பகுதிகளில் பயனடையும் விதத்தில் 6 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கங்கள் உருவாக்கப் பட்டு, கறவை மாடுகள் மானிய விலையில் · வாங்கித் தரப்பட்டு வருகின்றன.

'தாட்கோ' நிறுவனத்தின் மூலம் ஆதிதிராவிடர் வங்கிகளில் கடன் வாங்கித் தொழில் தொடங்குவதற்கு ஏற்ற வகையில் ரூ. 17 இலட்சம் வங்கிகளுக்கு முன்வைப்புத் தொகையாக செலுத்தப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் ஆதி திராவிடர் பொருளாதார மேம்பாட்டிற்குப் பல்வேறு பணிகள் பாங்குற ஆற்றப்பட்டு வருகின்றன. சமுதாயத்தில், பொருளாதார வளர்ச்சி மிகவும் பங்கு வகிப்பதை உணர்ந்து, உழைக்கின்ற கரங்களில், உண்மையான ஊதியம் கிடைக்க, வழிவகை காணப்பட்டு வருகிறது.

தமிழக அரசு 'தாட்கோ' நிறுவனத்தின் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கு ரூ. 66 இலட்சம் வாரி வழங்கியுள்ளது. ஓராண்டில் 8,000 ஆதி திராவிடக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் பெரிதும் பயன்பெற்றதோடு ஆண்டு வருமானம் ரூ. 5,000 பெறுகின்ற பக்குவத்தைப் பெற்றிருக்கிறார்கள். இத்திட்டம் இம் மாவட்டத்தில் ஆண்டுதோறும் வலிவோடும், பொலிவோடும் செயல்படுவதன் மூலம் மலர்ச்சியும், பொருளாதார உயர்வும் பெருகும் என்பதில் ஐயமில்லை!

# தமிழ்நாடு செய்தித்தாள் காகிதத் தயாரிப்பு நிறுவனம்

நம் நாட்டில் குறிப்பாக பத்திரிகைக் காகிதம் பொதுவாக எழுது காகிதம் மிகவும் பற்றாக் குறையாக இருப்பது யாவரும் அறிந்ததே. பொதுமக்களிடையே ஒரு பாலமாகத் திகழும் செய்தித் தாள்களின் முக்கிய பங்கும், கல்வித் தேவைகளைப் பரப்புவதில் காகிதத்தின் முக்கிய தேவையும் குறிப்பிடத் தேவையில்லை. இப்பொருள்கள் போதிய அளவிற்குக் கிடைக்கப் பெறாமையால் ஏற்பட்ட இடர்ப்பாடுகள் சொல்லிலடங்கா.

காகித உற்பத்தியாளர்கள், அடிப்படை மூலப்பொருள்களுக்கு மரக்கூழையே பெரிதும் நம்பியிருந்ததே பத்திரிகைக் காகிதம், எழுது காகிதம் ஆகியவை பற்றாக்குறை ஏற்பட்டதற்கு முக்கிய காரணமாகும். ஆதாயம் தரத்தக்க வகையில் இத்தொழிலில் முதலீடு செய்ததற்கு இத்தொழிலைத் தேர்ந்தெடுத்ததற்காக மட்டுமல்லாது வழக்கமாக காகித உற்பத்திக்கு மூலப்பொருளாகப் பயன்படுத்தும் மரக்கூழைப் பயன்படுத்தாது இதன் உற்பத்திக்கு கரும்புச் சக்கையைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதற்கும் தமிழக அரசு பாராட்டுக்குரியது. மரக்கூழை மூலப் பொருளாகப் பயன்படுத்திக் காகித உற்பத்தி செய்பவர்கள் காலப்போக்கில் அம்முறையை அறவே விடுத்து, ஆதாயமளிக்கும் இம்முறையை அதாவது கரும்புச் சக்கையை மூலப்பொருளாகப் பயன்படுத்துவதைப் பின்பற்றுவரென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது கரும்புச் சக்கை பத்திரிகைக் காகிதம், எழுது காகிதம் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படவில்லை. அது பெருமளவில் கழிவுப் பொருளாகவே ஒதுக்கப்படுகின்றது. செய்தித்தாள் தயாரிப்பில் கரும்புச் சக்கையைப் பயன்படுத்துவதற்குப் பின்பற்றப்படவிருக்கும் தொழில் நுட்ப உத்தி, நல்ல தரமுள்ள, சிக்கனச் செலவிலான காகிதத்தை உற்பத்தி செய்யும் மிகச் சிறந்த உத்தியெனக் கூறப்பட்டுள்ளது.

மிகவும் பற்றாக்குறையாக உள்ள பத்திரிகைக் காகிதம், எழுது காகிதம் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிலைத் தெரிந்தெடுத்து சிக்கன வகையில் தனித்தியங்க வல்லதாயும், மூலப் பொருள்கள் தங்குதடையின்றி கிடைக்கக் கூடியதாயும், அமையப்பெற்ற தொழில்நுட்ப உத்தி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள புகலூரில் செய்தித்தாள் காகிதம், எழுது காகிதம் தயாரிப்பதற்கான ஆலை ஒன்றைஅமைத்திட தமிழக அரசு கருதியது. அரசு துணிகர முயற்சியாக ரூ. 30 கோடி மூதலீடு செய்ய முன் வந்துள்ளது. உலக வங்கியிடமிருந்து ரூ. 80 கோடி உதவித் தொகை பெற்றுத் தந்துள்ளது. உலக வங்கியின வல்லுநர்கள், நாட்டில் பத்திரிகைக், காகிதம், எழுது காகிதத்திற்குள்ள பற்றாக்குறையைப் போக்க இது ஒரு நல்ல திட்டமாகுமென்றும் இதில் போடும் முதலீட்டிற்கு நல்ல வரவு கிட்டுமெனவும் கூறியுள்ளனர்.

இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 180 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. கடன் வசதிக்காக நாட்டிலுள்ள பெரிய நிதி நிறுவனங்கள், வணிக வங்கிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. நிதி ஏற்கெனவே வரத் தொடங்கியுள்ளது. இத்தொழிற்சாலையை அமைத்து நிர்வகிப்பதற்கு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் கூட்டுத்துறை நிறுவனமான தமிழ்நாடு செய்தித்தாள் - காகித ஆலை நிறுவப்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலை, துணைத் தொழில்கள் வளர பல வாய்ப்புகளை நல்கும். இதனால் வேலை வாய்ப்பு கணிசமான அளவிற்குப் பெருகும். மேலும், இத்தொழிற்சாலை அமைந்துள்ள பின்தங்கிய பகுதியான புகலூர் மேம்பாட்டடைய இது பெரிதும் உதவியாக இருக்கும்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகிதம் - காகித நிறுவனம், ஆண்டுக்கு 50,000 டன் செய்தித்தாள் காகிதமும், ஆண்டுக்கு



40,000 டன் அச்சு-எழுது காகிதமும் உற்பத்தி செய்யும் திறனுடன் ரூ. 50 கோடி பங்கு மூலதனத்துடன் தற்போது ரூ 70 கோடிக்கு உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டம், புகளூரில் அமைக்கக் கருதப்பட்டுள்ளது., இத்திட்டத்திற்கான செலவு ரூ. 180 கோடியாகும்.

இத்திட்டத்திற்கு, தமிழக அரசு இதுவரை ரூ. 31.50 கோடி பங்கு மூலதனமாகக் கொடுத்துள்ளது. அரசு நிறுவனங்கள் ரூ. 20 இலட்சமும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ரூபாய் 23.52 கோடியும் அளித்துள்ளன. கரும்புச் சக்கையிலிருந்து செய்தித்தாள் காகிதம் தயாரிப்பதற்கு இத் தொழிற்சாலை பின்பற்றவிருக்கும் தொழில்நுட்ப உத்திக்கு திட்ட ஆணைக்குழு ஒப்புதல் தெரிவித்துள்ளது. இந்திய அரசு, அனுமதிக் கடிதத்திற்கான செயல்திறன் கால அளவை 31-6-1982 வரை நீட்டித்துள்ளது. இந்த அனுமதிக் கடிதத்தை தொழில் உரிமமாக மாற்ற நிறுவனம் அனுமதி பெற்றுள்ளது. இந்திய அரசு, தொழில் அமைச்சகத்தில் தொழில் வளர்ச்சித் துறையில் தொழில் அனுமதி பெறுவதற்காகத் தலைமைச் செயலகத்திலிருந்து FC & CG விண்ணப்பத்திற்கும் நிறுவனம் இசைவு பெற்றுள்ளது.

உலக வங்கி, இத்திட்டத்திற்கு ஒப்புதல் தெரிவித்துள்ளது. இத்திட்டத்திற்கு இந்திய அரசு இந்திய தொழில் வளர்ச்சி வங்கி மூலமாக ரூ. 80 கோடி கடன் உதவி (100 மில்லியன் டாலர்) வழங்கவும் ஒப்புக்கொண்டுள்ளது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து, பங்குத் தொகையாக ரூ. 31 கோடியும், ரூ. 101.5 கோடிக்குமேற்படாமல் தவணைக் கடனும் பெறுவதற்கும் இந்திய தொழில் நிதியுதவிக் கழகத்திடமிருந்து ரூ. 6 கோடி தவணைக் கடனும் இந்திய தொழில் கடனுதவி முதலீட்டுக் கழகத்திடமிருந்து ரூ. 6 கோடி தவணைக் கடனும் பெற இந்நிறுவனம், பொதுவான கடன் ஒப்பந்தமும் நேரடி பங்குத் தொகை அளிக்கும் ஒப்பந்தமும் செய்து கொண்டுள்ளது.

காகிதக் கூழ் தயாரிக்கும் இயந்திரம் வழங்குவதற்காகவும் அமெரிக்காவிலுள்ள பெல்லாயிட் ஜோன்ஸ் டிவிஷன்ஸ், லண்டனிலுள்ள ரீட் இன்டர்நேஷனல் கன்சல்டன்ட்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் உடனுழைப்புடன் அடிப்படைப் பொறியியல் மற்றும் ஏனைய எல்லாப் பணிகளையும் மேற்கொள்ள இந்நிறுவனம், இலண்டனிலுள்ள திருவாளர்கள் பெல்லாயிட் வால்ம்ஸ்லே நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளது. திருவாளர்கள் பெல்லாயிஸ் வால்ம்ஸ்லே, ரீட் இன்டர்நேஷனல் கன்சல்டன்ஸ் நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கிணங்க, ரொக்கத் தொகை சுமார் ரூ. 18.48 கோடி செலுத்தப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைக்குப் பல்வேறு திட்ட ஆலோசனை நல்கிடவும், தொழில் நுட்ப உதவி நல்குவதற்கும் திருவாளர்கள் சேசசாயி பேப்பர் - போர்டு நிறுவனத்துடன் இந்நிறுவனம் ஒப்பந்தம் ஒன்றையும் செய்து கொண்டுள்ளது.

வன மீன் துறை, தமிழ்நாடு வனக்கழகத்திடமிருந்து கம்பெனிக்கு யூகலிப்டஸ் உயர்வகை மரம் 70,000 டன் ஒதுக்கியுள்ளது. இத்தொழிற் பிரிவின் முக்கிய மூலப் பொருளான. கரும்புச் சக்கையை வழங்குவதற்கு சர்க்கரை ஆலைகள், தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்துடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டுள்ளன.

1983-84-ஆம் ஆண்டிலிருந்து, தமிழ்நாடு மின் வாரியத்தால் 110 கிலோ வாட்டில் 30,000 கிலோ வோல்ட் மின் சக்தியை புகளூரிலுள்ள தொழில் சாலைக்கு வழங்க இந்நிறுவனம் அவசியமான ஏற்பாடுகளைச் செய்து அரசிடமிருந்து ஆணை பெற்றுள்ளது. இத்திட்டத்திற்கு காவிரியாற்றிலிருந்து நாளொன்றுக்கு 30 மில்லியன் காலன் நீர் பெறவும் அரசு அனுமதித்துள்ளது. கரூர் வட்டத்தில் புகளூர், திருக்காட்டுத்துறை கிராமங்களில் 678.63 ஏக்கர் புன்செய் நிலத்தையும் இங்குள்ள 31.01 ஏக்கர் அரசுப் புறம் போக்கு நிலத்தையும் இந்த ஆலையின் வசம் எடுத்துக் கொள்ள அரசு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்திற்கு சர்க்கரை ஆலைகள் விற்கும் கரும்புச் சக்கைக்கும் மேற்படி நிறுவனம் இச்சர்க்கரை ஆலைகளுக்கு விற்கும் நீராவிக்கும் விற்பனை வரியிலிருந்து அரசு விலக்களித்துள்ளது. அரசு தலைமை மின்சார ஆய்வாளரின் ஒப்புதலுக்கு உட்பட்டு 17.5 மெ. வா. திறன் கொண்ட சுழல் மின் உற்பத்தி இயந்திரத்தை நிறுவ இந்நிறுவனத்திற்குத் தமிழ்நாடு மின் வாரியம் அனுமதி வழங்கியுள்ளது. இந்த இயந்திரத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சக்திக்கு உற்பத்தி வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

75 சதவீதம் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி செய்தித்தாள், அச்சு, எழுதுதாள் தயாரிப்பதற்கான திட்டம் எதுவும் அத்திட்டத்திற்கு இறக்குமதி செய்யப்படும் எல்லா சாதனங்களுக்கும் 30 சதவீதம் குறைந்த சுங்கத்தீர்வை விதிக்கப்படுவதற்குத் தகுதியுடையதாகும் என்று மத்திய அரசு நிதி அமைச்சகத்தின் வருவாய்த் துறையிலிருந்து இந்நிறுவனத்திற்குக் கடிதம் வந்துள்ளது. நம் திட்டம் இந்தக் குறைந்த இறக்குமதித் தீர்வையைப் பெறத் தகுதியுடையதாகிறது.

இந்நிறுவனம் இந்திய நிலக்கரி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இதன்படி 1983 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் 48,000 டன் நிலக்கரியை முதற்கண் வழங்கும். மொத்தத்தில் 190000 டன் நிலக்கரியை அந்நிறுவனம் வழங்கும். 1983 ஜூன் திங்களிலிருந்து ஆண்டுக்கு 150000 டன் நிலக்கரி வழங்குவதற்கு சிங்கரேனி நிலக்கரிச் சுரங்க நிறுவனம் இந்நிறுவனத்திற்கு உறுதியளித்துள்ளது. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனமும் 1983-ஆம் ஆண்டிலிருந்து, ஆண்டுக்கு 60000 டன் சாதாரண கரித்தூள் வழங்க விருப்பம் தெரிவித்துள்ளது. ஆகவே இத்திட்டத்திற்குத் தேவைப்படும் எரிபொருளுக்குப் போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆலை 3 ஆண்டுகளுக்குள் நிறுவி, செயல்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



தமிழைத் தக்க முறையில் பயன்படுத்தும் பணியில் அரசுத் துறையினர் மட்டுமல்ல வேறுபல துறைகளைச் சேர்ந்தவர்களும் மும்முரமாக ஈடுபட்டிருப்பது தமிழுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பதையே காட்டுகிறது.

பேரறிஞர் அண்ணா

# நினைவில் நிற்கும் திருபுவனம்

கூடின உழைப்பு, கலைத்திறன் ஆகியவற்றின் வெளிப்பாடாய், பரம்பரையான அழகும், பயனும் நிறைந்த கைத்தறித் துணிகளின் நிலைக்களனாய் திகழும் திருபுவனம் கைத்தறி பட்டு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் வெள்ளி விழாவினைப் பெருமிதத்துடன் கொண்டாடுகிறது. இச்சங்கம் கடந்த 25 ஆண்டுகளாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டுவரும் இச் சங்கத்தைச் சேர்ந்த திரு எம். ஆர். சுந்தரராமன் தனது இளமைக் காலத்தை திரும்பிப் பார்க்கிறார். கைத்தறி உதவி ஆளாக மாதம் ஐந்து ரூபாய் கூலிவாங்கிய அந்த நாட்கள் அவருக்கு நினைவில் வருகின்றன. இன்றைக்கு ,தான் நெய்கின்ற சேலைகளின் ரகங்களை ஒட்டி மாதம் 300 முதல் 500 ரூபாய் வரை அவர் சம்பாதிக்கிறார். திரு. டி. என். குமாரசுவாமி ,திரு எல். எஸ். சேஷய்யர், திரு எம்.எல். ஐயன்சுவாமி ஆகியோரின் அனுபவம் இதுதான். இது அவர்களுடைய பரம்பரைத்தொழில். ஒரு தனித்தறியில் ஒருவர் மூன்று ஆறு கெஜ' சேலைகளை நெய்ய முடிந்தால், மாதம் 300 ரூபாய் சம்பாதிக்க முடியும். மூன்று பெரியவர்கள் கொண்ட ஒரு குடும்பத்தில் இரண்டு தறி இருந்தால் கூட, ஒழுங்காக வேலை கிடைத்தால் மாதம் 600 ரூபாய் சம்பாதிக்கமுடியும்.

மாதத்தில் எப்பொழுதும் வேலை என்பது 1955-ம் ஆண்டு திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஏற்பட்டதிலிருந்து உறுதியாகிவிட்டது. தஞ்சை மாவட்டம் திருபுவனம் நகரில் வாழும் 15,000 மக்களில் பெரும்பாலோர் பரம்பரையாக நெசவுத் தொழில் செய்யும் சௌராஷ்டிரா சமூகத்தைச்சேர்ந்தவர்கள் . திருபுவனம் கைத்தறி நெசவாளர்களின் திறனை வெளிநாடுகள் கூட பாராட்டியுள்ளன. இவர்களின் கலைத்திறன் மிக்க டிசைன்களை பட்டுச் சேலைகளின் தரத்தை பிரிட்டிஷ் அரசி எலிபெத், ரஷ்ய அதிபர் பிரஷ்னேவ் ஆகியோர் பாராட்டியுள்ளனர். இன்றைய தினம் இந்தக் கூட்டுறவு சங்கத்தில் 877 பேர் உறுப்பினர்களாக இருக்கின்றனர். இந்த சங்கத்தின்கீழ் 790 தறிகள் உள்ளன. 500 ரூபாய் முதல் 6000 ரூபாய் விலையுள்ள சேலைகளை இவர்கள் நெய்கிறார்கள். இந்த பட்டுச்சேலைகளும் பிற நாட்டு துணிகளும் 75 சதவிகிதம் அங்கேயே விற்பனையாகி விடுகின்றன. எஞ்சியவை தமிழ்நாட்டில் பரவலாக அமைக்கப்பட்டுள்ள எட்டுக்கிளை விற்பனை நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இந்தச்சங்கத்தின் சேலைகள் மற்றும் துணிகளில் 96 சதவிகிதம் நுகர்வோர்க்கு நேரிடையாக விற்கப்படுகின்றன.

சங்கத்தின் உறுப்பினர்களுக்கு தொடர்ந்து ஒழுங்காக வேலை கிடைக்க உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. மாதம் 300 முதல் 500 ரூபாய் வரை அவர்கள் சம்பாதிக்கிறார்கள். இது தனியார் அளிக்கும் சம்பளத்தைவிட 30 சதவிகிதம் அதிகமாகும். சங்கத்தின் லாபத்தில் 40 சதவிகிதம் போனாசாக வழங்கப்படுகிறது. 1980-81ம் ஆண்டில் ஒவ்வொரு உறுப்பினரின் ஊதியத்திலும் ஒரு ரூபாய்க்கு 21•5 பைசா விதம் போனஸ் வழங்கப்பட்டது. குடும்பத்தில் ஏற்படும் எதிர்பாராத செலவுகளைச் சமாளிப்பதற்காக கடன் உதவியும் அளிக்கப்படுகிறது.

உறுப்பினர்களின் அன்றாட பணிகளில் உதவி செய்ய சங்கம் பெரிதும் அக்கறை காட்டி வருகிறது. குடும்பத்தில் திருமணம் நடந்தால் " சேலைவாங்குவதற்கு 300 ரூபாய் கடனுதவி அளிக்கப்படுகிறது. உறுப்பினர்கள் சேமிப்பு தொகையிலிருந்து 75 சதவிகிதத்தை பெற்றுக்கொண்டு அதை 24 சம அளவிலான தவணைகள் மூலம் திருப்பிச்செலுத்தலாம். உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு 5-வது வகுப்பு வரை சீருடைகள் அளிக்கப்படுகின்றன. 6-வது வகுப்பிலிருந்து கல்லூரி கல்வி முடியும் வரை வருடந்தோறும் உதவித்தொகைகள் அளிக்கப்படுகின்றன. குடும்பநல திட்டத்தை ஏற்றுக்கொண்டு கருத்தடை செய்துகொள்வோருக்கு 50 ரூபாய் வரை உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

லண்டனில் நடந்த இந்தியா விழாவின்போது திருபுவனம் சங்கத்தின் கைத்தறிப்பட்டுச்சேலைகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அதன் வண்ணத்திறன் பிரிட்டிஷ் மக்களின் கண்ணைக் கவர்ந்தது.

ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி போன்ற உயர் லட்சியங்களை நோக்கமாகக்கொண்டு சேவைபுரிவதில் திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச்சங்கம் மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டும் ஓர் அமைப்பாகத் திகழ்கிறது. தங்களுடைய வளமான பொருளாதாரத்தின் பின்பலமாக திகழும் இந்தச்சங்கத்தைப்பற்றி திருபுவனம் நெசவாளர் சமுதாயம் நியாயமாகவே பெருமைப் பட்டுக்கொள்ளலாம்.



# கோவை மாவட்டத்தில் ஆதி திராவிடர் பொருளாதார மேம்பாட்டுப் பணிகள்

**கே. மலைச்சாமி, இ.ஆ.ப.**
**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**கோயம்புத்தூர்.**

“பிறப்பால் அனைவரும் ஒன்றே' என மதங்களும், தத்துவங்களும் உணர்த்தி நிற்கின்றன. அறிவால் ஆற்றலால் ஒரு மனிதனின் உயர்வு கணக்கிடப்படும் எனப் பாண்டியன் நெடுஞ்செழியன் தனது புறநானூற்று வரிகளால் புகன்றான். 'சாதிகள் இரண்டொழிய வேறில்லை' என ஆத்தி சூடியில் ஒளவையும், 'சாதிகள் இல்லையடி பாப்பா' என பாரதியும், சாதி வேறுபாடு எனும் சாக்காட்டை வேரறுக்க வேண்டுமென பாரதிதாசனும் பாடிக்காட்டினர்.

இறைவனின் குழந்தை ஆதி திராவிடர் என்று அண்ணல் காந்தியடிகளும், சாதி வேறுபாட்டில் எழுந்துவிட்ட பிரிவினை எண்ணத்தை ஒழிப்பதற்கு, ஆதி திராவிடர் நம் சகோதரர் என்று தந்தை பெரியாரும், தீண்டாமையை ஒழித்து அனைவரும் ஒன்றே என்று காட்டிட் கலப்புத் திருமணமே பொருந்தும் எனப் பேரறிஞர் அண்ணாவும் எடுத்துச் சொல்லி நாட்டில் கடமையாற்றினர். சட்ட வடிவில் பாதுகாப்பும், சுதந்திரமும் ஆதிதிராவிடர்களுக்கு வழங்குவதற்கு டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பெரிதும் பாடுபட்டுப் பெற்றுத் தந்தார்.

அறிவாலும், ஆற்றலாலும், செல்வ மேம்பாட்டாலும் ஆதி திராவிடர்களின் வாழ்வில் மேன்மையையும், சமுதாயத்தில் மதிப்பையும் உருவாக்கித் தருவதற்குத் தமிழக அரசால் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஏராளமான துவக்கப் பள்ளிகளும், உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளும், உறைவிடப் பள்ளிகளும், தங்கிப் படிப்பதற்கு உணவு விடுதிகளும் உருவாக்கித் தரப்பட்டதோடு, கல்லூரிகளிலும் படிப்பதற்கு ஏற்ற வசதிகளும், வாய்ப்புகளும் மிகுதியாக உருவாக்கித் தரப்பட்டுள்ளன.

கலை, இலக்கியம், அறிவியல், வரலாறு, பூகோளம், வானியல், பொறியியல், மருத்துவ இயல், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல்துறைப் பணி போன்ற பல்வேறு கல்விகளைப் பெறுவதற்குத் தகுந்த வாய்ப்பும், வசதியும், பெருக்கித் தரப்பட்டு உள்ளன. சுகாதார வசதி, வீட்டு வசதி, சாலை வசதி, போக்குவரத்து வசதி, குடிநீர் வசதி, வேலைவாய்ப்பு போன்ற பல்வேறு வசதிகள் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த மக்களுக்கு உருவாக்கித் தரப்பட்டு வருகின்றன.

தீண்டாமையை ஒழிக்கவும், கலப்புமணத்தை வரவேற்கவும், பல சிறப்புத் திட்டங்கள் பாங்குற நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன, ஆதி திராவிடர் என்போர் தாழ்த்தப்பட்டவர் அல்ல, அவர்கள் ஆண்டவனின் குழந்தைகள் என்ற உயர்வுக்குச் சொந்தக்காரர்களென, தலை நிமிர்ந்து தரணியில் பறைசாற்ற வேண்டுமென்று தமிழக முதல்வர் நாட்டிற்கு எடுத்துரைத்து, பல்வேறு சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றித் தந்திட வழிவகை செய்துள்ளார். அறிவும் ஆற்றலும் பெற்று, உழைப்புச் சக்தியை தன் கையிலே வைத்துக் கொண்டு இருக்கிற கிராமப்புறத்திலிருக்கும் ஆதி திராவிடப் பெருமக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வகையான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கோவை மாவட்டத்தில் 60,354 குடும்பத்தைச் சார்ந்த 4,60,000 ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்தவர்களும், 4,000 குடும்பங்களைச் சார்ந்த 25,000 மலைவாழுநர்களும் வாழ்வதைக் கணக்கில் கொண்டு வேளாண்மை, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, கறவை மாடுகள் வளர்ப்பு, பட்டுவளர்ப்பு, நூற்புமையங்கள், கல் உடைக்கும் தொழில், பாய், கூடை பின்னும் தொழில், சிறு தொழில்கள் ஆகியவற்றிற்கான சாத்தியக் கூறுகள் முழுமையாக ஆராயப்பட்டு, அன்றாட வருவாயைப் பெருக்குவதற்கு, 'தாட்கோ' என்ற நிறுவனம் தமிழக அரசால் உருவாக்கப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கல்லாபுரம் என்ற கிராமத்தில் 96 நிலமற்ற ஏழை ஆதி திராவிடக் குடும்பங்கள் பயனடையும் விதத்தில் 145 ஏக்கர் நிலப் பரப்பு அவர்களுக்கு உடைமை ஆக்கப்பட்டு அந்த நிலங்களுக்கு ரூ. 9.56 இலட்சம் செலவில் நீர்ப்பாசன வசதி உருவாக்கித் தரப்பட்டிருக்கிறது. இதைப் போலவே பெத்திக்குட்டை என்னும் கிராமத்தில் 146 ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த குடும்பத்தினர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுகிற வகையில் அவர்களுக்கு 276 ஏக்கர் நிலம் உடமையாக்கப்பட்டதோடு ரூ. 15 இலட்சம் செலவில் நீர்ப்பாசன வசதி செய்து தரப்பட்டு இருக்கிறது. இது தவிர அவர்களுக்கு வீடுகள், சாலை வசதிகள், குடிநீர் வசதிகளும் உருவாக்கித் தரப்பட்டு உள்ளன. மேலும் வருமானத்தைப் பெருக்கித் தரும் வகையில் பட்டு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, பால்வளப் பெருக்கம் ஆகிய திட்டங்களின் மூலம் அவர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டு, கடனும் மானியமும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஏறத்தாழ ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்கள் கூட்டுறவு துறையின் மூலம் 4691 குடும்பங்களும், வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 252 குடும்பங்களும், தனி நபர் பொருளாதாரமேம்பாட்டு திட்டத்தின் மூலம் 1039 குடும்பங்களும், சுய வேலைவாய்ப்புப் பயிற்சி திட்டத்தின் கீழ் 2030 குடும்பங்களும் ஓராண்டில் பயன் பெற்றிருக்கின்றன.

பால் வளப் பெருக்கத்தில் பங்கு கொள்ளும் வகையில் 268 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 4691 ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்கள் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டு, அவர்களுக்குக் கறவை மாடுகள் மானிய விலையில் வாங்கித்தரப்பட்டு இருக்கின்றன. இவர்களுக்காகவே 21 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஓரளவு வருவாயைப் பெற்றுத் திகழ்கிறார்கள்.



# வேகமாய் வளரும் வில்லிவாக்கம் அரும்பாக்கம்!







ஓலைக் குடிசையில் ஒண்டிக் கிடந்தவர்கள்—

காற்று, மழை என்று கஷ்டப்பட்டவர்கள்—

சுகாதார வசதியின்றிச் சோம்பிக் கிடந்தவர்கள்—

இவர்களுக்கெல்லாம் விடிவு காலம் பிறந்திருக்கிறது!

ஆம். சிங்காரச் சென்னைக்குச் செழிப்பூட்டும் வகையிலே, அரசு பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றது. அவற்றுள் ஒன்று, ஏழை எளிய மக்களுக்கு வீடுகள் கட்டித் தருவது என்பது நமக்குத் தெரியும்.

சுகாதாரமும், நல்ல காற்றோட்டமும், அமைதியான சூழ்நிலையும் உள்ள நகர்ப்பகுதி மற்றும் புறநகர்ப் பகுதிகளிலே- அல்லல்படுகின்ற ஏழை எளியவர்களுக்கு, அடுக்கு மாடி வீடுகளைக் கட்டி, துயர் துடைக்கின்ற துரிதப் பணிகளிலே தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகியவை பெரும் பணியாற்றி வருவதை நாம் பார்க்கின்றோம்.

**வாழ்க்கைத் தரம் மேம்பட....**

அடித்தளத்து மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட, அரசு எடுத்து வரும் அசுர வேகப் பணியினை நேரில் காணும் நல் வாய்ப்பு அண்மையில் ஏற்பட்டது.

—பி. வி. கிரி



மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்களுடன் நிருபர்கள்

ஜூலை 5ந் தேதி அன்று பத்திரிகை நிருபர்கள் குழுவினர் வில்லிவாக்கம், அரும்பாக்கம் பகுதிகளில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்களுடன் பார்வையிட்டார்கள்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு வேலூர் நாராயணன், தலைமைப் பொறியாளர் திருமதி மே. ஜார்ஜ், மேற்பார்வைப் பொறியாளர்கள் திரு எஸ். குமரேசன், திரு டி. ஜெகதீசன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தலைமை வடிவமைப்பாளர் திரு பிரகாசம் ஆகியோர் இந்தத் திட்டங்கள் பற்றிய விவரங்களை எடுத்துக் கூறினார்கள்.

சென்னை நகர, ஏழை எளியவர்களுக்கு வீட்டு வசதி செய்து தரும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது என்றும், இந்தத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் வீட்டுமனைகளில் 75 சதவிகிதம் மிகவும் ஏழைகளுக்கு வழங்கப்படுகிறது என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

வீட்டு மனைகள் ஏழைகளுக்கு மிகவும் குறைந்த விலையில் தரப்படுகிறது. இதனால் ஏற்படும் இழப்பு மற்றப் பிரிவினருக்குத் தரப்படும் மனைகளின் விலைகளிலிருந்து ஈடுகட்டப்படுகிறது என்ற கருத்தையும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

**வில்லிவாக்கத்தில்...**

வில்லிவாக்கம் பகுதியில் முதலாவது கட்ட திட்டத்தின் கீழ் 3750 மனைகள் மேம்பாடு செய்யப்பட்டு மக்களுக்கு வழங்கத் தற்போது தயாராக உள்ளன.

இந்த மேம்பாடு செய்யப்பட்ட மனைகளில் பல வகைகள் உள்ளன. மாதம் 150 ரூபாய் முதல் 350 ரூபாய் வருமானம் உள்ள ஏழை எளியவர்களுக்கு 429 அல்லது 500 சதுர அடி மனையில் குளியலறை, கழிப்பறை மற்றும் பாதி அளவு கட்டப்பட்ட அறைகள் கட்டப்பட்டு வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு வீட்டு மனைப் பகுதிக்கும் தனித்தனியான குடிநீர்க் குழாய் இணைப்பு வசதி, கழிவுநீர் வெளியேற்ற வசதி ஆகியவை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். வில்லிவாக்கம் முதல் கட்டத் திட்டப் பணி 55.29 ஹெக்டர் நிலப் பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

**பல்வேறு வசதிகள்**

இந்தப் பகுதியில் நல்ல சாலைகள், தெரு விளக்குகள், பள்ளிகள், மருத்துவமனை வசதிகள் ஆகியவற்றுடன் சிறு தொழிற்சாலைகளை நடத்த இட வசதியும் செய்து தரப்படுகின்றன. இங்கு சிறு தொழில்களை நடத்த முன் வருபவர்கள், இந்தக் குடியிருப்புப் பகுதியில் வசிக்கும் மக்கள் மொத்த வேலை வாய்ப்பில் 10 சதவிகிதத்துக்காவது சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இடங்கள் தரப்படுகின்றன. குடியிருப்புகளில் வசிக்கும் மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அங்காடி வசதியும் இங்கு செய்யப்படவுள்ளது.

இந்தக்குடியிருப்புவளாகத்தில் ஓர் அழகிய உயர்நிலைப் பள்ளி கட்டப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். 3 ஏக்கர் நிலத்தில், 8 ஆயிரம் சதுர அடியில் கட்டப்பட்டுள்ள இந்தப் பள்ளியின் மதிப்பு ரூ. 5½ இலட்சம். இது தவிர இரண்டு துவக்கப் பள்ளிகளும் இங்கு உள்ளன.

வில்லிவாக்கம் பகுதியில் கட்டப்பட்டுள்ள — கட்டப்படுவதற்குத் தயாராக உள்ள நிலங்கள் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்கிறோம். அதன்படி வீடு-வீட்டுக்கானமனை ஏ.பி.சி.டி.இ.எப். என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுள், குறைந்த வருமானமுள்ள அடித்

வில்லிவாக்கம் பகுதிக் குடியிருப்பு ஒன்றில் மாண்புமிகு அமைச்சரும், வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு வேலூர் நாராயணன் அவர்களும்...





வில்லிவாக்கத்தில் 'சி' பிரிவு வீடுகள்

தளத்து மக்களுக்கானவையும் அடங்கும்.

## வீடு பெறுவது எப்படி?

பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழை எளியவர்கள் சொந்தத்தில் வீடு பெறுவது எப்படி?

அவர்களுக்காக 20 ஆண்டுத் தவணையில் 3 திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவை :

(1) மாதம் ரூ. 30 வீதம் செலுத்தி ரூ. 3030 மதிப்புள்ள வீட்டைப பெறுதல்.

(2) மாதம் ரூ. 80 வீதம் செலுத்தி ரூ. 8080 மதிப்புள்ள வீட்டைப் பெறுதல்.

(3) மாதம் ரூ. 150 வீதம் செலுத்தி ரூ. 15,152 மதிப்புள்ள வீட்டைப் பெறுதல்.

வீட்டில் குடியிருந்து கொண்டே மாதந்தோறும் எளிய தவணை மூலம் பணம் செலுத்தி வீட்டைச் சொந்தமாக்கிக் கொள்ளும் அருமையான திட்டமாகும் இது. சாதாரணமாக இந்தத் தவணைத் தொகை வெளியில் செலுத்தும் வீட்டு வாடகையைவிடக் குறைவானது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

## குடியிருப்பு சொந்தமாகும் !

இந்தக் குடியிருப்புகள் ஏழை எளியவர்களுக்கு மிகக் குறைந்த மாதத் தவணைகள் மூலம் சொந்தமாக்கப்படுகின்றன. மொத்தத் தவணையின் அளவு 25 ரூபாய் முதல் 80 ரூபாய் வரை உள்ளன. இந்த மாதத் தவணைகளை 20 ஆண்டுகளில் செலுத்தினால் அவர்களுக்கு அந்தக் குடியிருப்பு சொந்தமாகி விடும். தவிர, மேம்படுத்தப் பட்ட வீட்டுமனை பெறும் ஏழை எளியவர்கள், தங்கள் விருப்பம் போல் வீடுகளைக் கட்டிக் கொள்ள தேசியமயமாக்கப் பட்ட வங்கிகளின் மூலம் குறைந்த வட்டியில் 3000 ரூபாய் கடனாக வழங்கப்படுகிறது. வீட்டு வசதி நிதி நிறுவனக் கடனும் இதே அளவுக்கு அவர்களால் பெறமுடியும்.

குறைந்த வருமானம் உள்ள ஏழை எளியவர்களுக்காக, ஏ. பி. சி. என்று மூன்றுவகையான வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 'சி' பிரிவு வீடு சற்று வசதியானதாக உள்ளது. மொத்தம் 223 வீடுகள் உள்ளன. 500 சதுர அடி நிலத்தில், 300 சதுர அடி பரப்பளவில் இந்த வீடு கட்டப்பட்டிருக்கிறது. மீதியுள்ள இடத்தில் குடி வருபவர்களே விருப்பம் போல் கட்டிக் கொள்ளலாம். மாதம் ரூ. 150 தவணையில், 20 ஆண்டுகளாகச் செலுத்தினால், இந்த வீடு அவர்களுக்குச் சொந்தமாகி விடும். இந்த வீட்டை, அமைச்சர் அவர்களோடு நாமும் சுற்றிப் பார்க்கிறோம். குடிநீர், தெரு விளக்கு, பள்ளி, மருத்துவமனை இப்படி எல்லா வசதிகளும் நிறைந்த இடத்தில் உள்ள இந்த வீட்டுக்குக் குடிவருபவர்கள் கொடுத்து வைத்தவர்கள்!

அழகிய உயர்நிலைப் பள்ளி



கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் ஒரு தோற்றம்





கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தைப் பார்வையிடுகிறார்கள்

**பிற பகுதிகளிலும்...**

ஏழை எளியவர்களுக்கு இவ்வாறு குடியிருப்பு வசதி செய்து தருவதற்கு உலக வங்கி நிதி உதவியைப் பெற்று, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் உதவியோடு இந்த வீட்டுமனை மற்றும் சேவைத் திட்டத்தை அமல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் குடியிருப்பு மனைகள் பெற்றவர்கள் செலுத்தும் மாதத் தவணைத் தொகைகள், ஒரு சுழலும் நிதியாகச் சேமிக்கப்பட்டு அந்த நிதியைக் கொண்டு இதுபோன்ற திட்டங்களைச் சென்னை நகரில் மற்ற பகுதிகளிலும் நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

குடியிருப்புகளைச் சுற்றிப்பார்த்துக் கொண்டு வரும்போது, அமைச்சர் அவா்கள், பக்கத்தில் உள்ள ஒரு தொழிற்கூடத்துக்குள் செல்கிறார். அது, மோட்டார் உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை. அரசுத் தொழிற்பேட்டையான அந்த இடத்தில் பல்வேறு தொழிற்கூடங்கள் உள்ளன. அமைச்சர் அவர்கள் தொழில் சம்பந்தமாக அங்குள்ள தொழிலாளர்களிடம் விசாரிக்கிறார்.

**முகப்பேர், நெற்குன்றத்தில்...**

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் முதலாவது கட்டத்தில் அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய இடங்களில் 12537 குடும்பங்களுக்கு வீட்டுவசதி 15 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இது முடிந்தவுடன், இரண்டாவது கட்டப் பணிகள் முகப்பேர், நெற்குன்றம் ஆகிய இடங்களில் நிறைவேற்றப்படும். இந்தப் பணி 25 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு, 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வீட்டு வசதி செய்து தரப்படும்.

குடியிருப்புக்குச் சற்றுத் தொலைவில், மிகப் பெரிய ஏரி ஒன்று தென்படுகிறது. அந்த இடத்தைப் போய்ப் டார்வையிடுகிறோம்.

மிகப் பிரமாண்டமான அளவில், ரூ. 32 இலட்சம் செலவில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று அங்கே அமைக்கப்பட்டு வருகிறது.

வில்லிவாக்கம் திட்டத்தின் கீழ் உள்ள குடியிருப்புப் பஞ்திகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரைச் சுத்தப்படுத்தி, ஓட்டேரி நல்லாவுடன் சேர்த்து வெளியேற்ற அமைக்கப்பட்டு வரும் திட்டமே இது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றிக் கூறுகையில்:

"இந்தக் கழிவுநீரைச் சுத்தப்படுத்தும் பணியின்போது கிடைக்கும் வாயுவை, எரிசக்திப் பொருளாகப் பயன்படுத்துவது குறித்தும் பரிசீலிக்கப்படும்" என்றார்.

**வில்லிவாக்கத்தில் உருவாகிவரும் மருந்தகம்**





அழகிய குடியிருப்புகளின் ஒரு தோற்றம்

அவர் நிருபர்களிடம் மேலும் சில தகவல்களைத் தெரிவித்தார்:

"சென்னை நகரைப் பொறுத்த வரை குடிசைப் பகுதிகள் நகரின் அழகைக்கெடுக்கின்றன. அத்துடன் அசுத்தங்களை ஏற்படுத்தி சுகாதாரக் கேடுகளையும் உண்டாக்குகின்றன. எங்கள் ஆட்சியில், சென்னையில் இருந்து அப்புறப்படுத்தும் குடிசைவாசிகளைக் கொண்டே புதிய நகரம் அமைக்க முடிவு செய்தோம். அதன்படி அவர்களை அப்புறப்படுத்தும் முன்பே வெவ்வேறு திட்டங்களின் மூலம் முன்கூட்டியே வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம்.

''நாட்டுப்புற நகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சத்துக்கும் குறைவாக உள்ள மக்கள் தொகை உள்ள நகரங்களை மேம்படுத்தும் திட்டம் ஒன்றை மத்திய அரசு உதவியுடன், தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. தற்போது இத்திட்டத்தின் கீழ் **23** நகரங்கள் மேம்பாடு செய்யத் திட்டமிடப்பட்டிருந்தாலும், விரைவில் **30** நகரங்கள் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கும் செலவுத் தொகையில் பாதியை மத்திய அரசம், மீதியை மாநில அரசும் ஏற்கவிருக்கிறது.

தற்போது சென்னையிலும் சில குறிப்பிட்ட மாவட்டத் தலை நகரங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிசை மாற்றுத் திட்டம், தாலுகா நகரங்களுக்கும் விரைவில் விரிவுபடுத்தப்படும், இது குறித்து அரசு தற்போது தீவிரமாகச் சிந்தித்து வருகிறது. இந்தக் குடிசை மாற்றுத் திட்டங்கள் அப்பகுதிகளில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்படும்.

''சென்னையை ஒட்டியுள்ள கிராமப்புறப் பகுதிகளில், ஒரு சில இடங்களைத் தேர்ந்தெடுத்து, அதில் வசதி இல்லாத ஏழைகளுக்குத் தீப்பிடிக்காத வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். குடிநீர், மின்சார வசதி, கடைகள், சிறு தொழிற்கூடம், பள்ளி, மருத்துவமனை ஆகிய வசதிகளும் இந்தப் பகுதிகளில் செய்யப்படும். இந்த வீடுகள் குறைந்த விலையில், சுலபமான தவணைகளில் குடிசைவாசிகளுக்கு வழங்கப்படும்.

''சென்னை நகரில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த வீட்டு மனை மற்றும் சேவைத் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டுவருவதைப் பார்வையிட்டு அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா போன்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்தவர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.''

**அரும்பாக்கத்தில்...**

வில்லிவாக்கத்திலிருந்து நேரே அரும்பாக்கத்துக்குச் செல்கிறோம்.

அழகிய குடியிருப்புகள் நம்மைக் கவர்கின்றன.

சாலை. தெரு விளக்கு, குடிதண்ணீர். பள்ளி, கடைகள், மருத்துவமனைகள். சமூகக் கூடம், பேருந்து இப்படி நல்ல பல வசதிகளுக்கிடையே, இந்தக் குடியிருப்புகள் காட்சியளிக்கின்றன. **34.2** எக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள இத்திட்டத்தின் மதிப்பீடு **184.24** இலட்சமாகும்.

இங்கும் ஏ, பி, சி, டி, இ. எப். என்னும் ஆறு வகையான வீடுகள், வீட்டுக்கான மனைகள் உள்ளன. குறைந்த வருமானம் உள்ள ஏழை மக்களுக்கான வீடுகளும் இவற்றுள் அடங்கும்.

ஒரு தெருவில் குடியிருப்புகளுக்கு மத்தியில் குடிசை ஒன்று தென்பட்டது. அதைக் கண்ணுற்ற அமைச்சர் அவர்கள், குடிசைகளால் சுகாதாரக் கேடு ஏற்படும் என்றும், அது நகரின் அழகைக் கெடுக்கும் என்றும் கூறி குடிசையை அகற்றிவிடும்படி கூறினார்.

அடுத்து, இன்னொரு வீட்டுக்குப் போனார். நிருபர்களும் அவரைப் பின்தொடர்ந்தனர். அவ்வீட்டுப் பெண்மணியிடம் குடும்பநல அவசியம்பற்றி எடுத்துக் கூறினார். சாலைப் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கும் கடைகள்மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படியும் உடன் வந்த அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பிறகு அமைச்சர் அவர்கள் மக்களிடம் பேசும்போது, "வீட்டைப் போல வீதியையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். இது உங்கள் இடம். நகரின் அழகைக் கெடுக்கின்ற வகையில் எந்தச் செயலையும் செய்ய வேண்டாம். எல்லாவற்றுக்கும் மேலாக. நீங்கள் சிறு குடும்ப நெறியைப் பின்பற்ற வேண்டும். அளவாகப் பெற்று வளமாக வாழ வேண்டும்!'' என்று கேட்டுக் கொண்டார்.

ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்துகின்ற வகையிலே, அவர்களுக்கு ஏற்ற குடியிருப்புகளைக் கொண்ட வில்லிவாக்கம், அரும்பாக்கம் பகுதிகள் வேகமாய் வளர்ந்து வருகிறதென்றால், அது முற்றிலும் உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை!

கட்டப் பட்டுள்ள கழிவறை, குளியலறைகள்





# தென்னை வளர்ப்பு அனுபவம்

**அ. அருணாசலம்**
வெடியரசம்பாளையம்
பள்ளிப் பாளையம் வட்டாரம்

பள்ளிப்பாளையம் வட்டாரத்தை சார்ந்த வெடியரசம் பாளையம் கிராமத்தில் உள்ள எனது வீட்டு சுற்றுப்புறத்தில் 18 தென்னை மரங்கள் சுமார் 10 வருடங்களாக மகசூல் ஏதும் தராமல் வளர்ச்சி குன்றி காணப்பட்டு வந்தன. இதைக் கண்டு மனம் வருந்தி, இம்மரங்களை பலன் தரச்செய்வதற்கு ஏதேனும் தொழில் நுட்பமான முறைகளை கையாளுவதால் சாத்தியக் கூறுகள் உள்ளனவா என அறிந்து கொள்ள நான் பள்ளிப்பாளையம் விவசாயப் பிரிவு அலுவலர்களை நாடினேன். எனது வேண்டுகோளுக்கு இணங்க, விவசாய அலுவலர் கலவை உர ஆய்வாளர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் ஆகியோர்கள் கடந்த 1980 ஆகஸ்டு முதல் வாரத்தில் எனது தென்னை மரங்களை பார்வையிட்டு உரம் இடவேண்டிய அவசியத்தை விளக்கிக் கூறினார்கள். அத்துடன் தென்னை மரங்களில் கருந்தலை வண்டுகள் தாக்கியுள்ளது எனவும், இதற்கும் பாதுகாப்பு முறைகள் கையாள வேண்டும் எனவும் கூறினார்கள். மேலும் பணிகளை உடனிருந்து செய்து தருவதாகவும் கூறினார்கள். அவர்களின் ஆலோசனைகளின்படி தென்னை மரம் ஒன்றுக்கு $\frac{1}{2}$ கிலோ யூரியா ஒரு கிலோ சூப்பர் பாஸ்பேட் ஒரு கிலோ பொட்டாஷ் மற்றும் மைக்ரோ நியுட்டிரியண்ட் மிக்சர் $\frac{1}{2}$ கிலோ என்ற விகிதத்தில் வருடத்திற்கு இருமுறையாக உரம் இடவேண்டும் என்ற கருத்தினைத் தெரிந்து கொண்டேன். முதற்கட்டமாக உரம் வைத்தல் பணி 1980 ஆகஸ்டு 22ஆம் தேதியன்று வேளாண் துறை அலுவலர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. தென்னை மரத்தின் அடிப்பாகத்தில் தண்டிலிருந்து 3 அடி தள்ளி $\frac{1}{2}$ வட்டத்தில் ஒரு அடி அகலம் ஒரு ஆழம் என்ற அளவில் குழிகள் வெட்டப்பட்டு, குழிகளில் பசுந்தழைகளை $\frac{1}{2}$ அடிஉயரத்திற்கு ஒரு லேயராகப்பரவலாக இட்டு அதன் மேல் $\frac{1}{2}$ கிலோ யூரியா ஒரு கிலோ சூப்பர் பாஸ்பேட் ஒரு கிலோ பொட்டாசு ஆகியவற்றையும் பரவலாகப் போட்டு பிறகு $\frac{1}{2}$ கிலோ மைக்ரோ நியுட்டியண்ட் மிக்சர் இட்டு மண்ணை அணைத்து, குழியை மூடி நீர்ப்பாசனம் செய்யப்பட்டது. இவ்வாறு 18 மரங்களுக்கு உரம் வைத்தல் பணியினையும் செவ்வனே செய்து முடித்து, கருந்தலை வண்டு உபாதையிலிருந்து மரங்களைப்பாதுகாப்பு செய்திட கீழ்க்கண்டவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. மரத்தின் அடிபாகத்திலிருந்து 3 அடி உயரத்தில் $\frac{1}{4}$ அங்குலம் ஆக உபயோகப்படுத்தி மேலிருந்து உட்புறம் சாய்வாக ஆறு அங்குலம் ஆழத்தில் துவாரம் போடப்பட்டது. இந்த துவாரத்தில் கண்ணாடிக் குழல் செலுத்தி அதன் வழியாக ஒரு மரத்திற்கு 4 மில்லி என்ற அளவில் மானாக்ரோட்டாஃபாஸ் மருந்து ஊசி மூலம்(சிரின்ஜ்)செலுத்தினார்கள்

அந்த துவாரத்தை உடனடியாக சாணி உபயோகப்படுத்தி அடைத்து விட்டார்கள். ஒரு வாரம் கழித்து அந்த துவாரங்களை சிமெண்ட் பிளாஸ்டர் செய்து அடைத்து விட்டார்கள். அவர்கள் கூறியபடி உரமிட்டு ஒரு வாரக் காலத்திற்குத் தினசரி ஒரு வேளை தண்ணீர் பாய்ச்சப் பட்டது.

பிறகு வாரத்தில் இருமுறை தண்ணீர் பாய்ச்சி வந்தேன். இவ்வாறு உரமிட்டு பாதுகாப்பு செய்தலுக்கு எனக்கு ஏற்பட்ட செலவினம், மரம் ஒன்றுக்கு ரூபாய் 5 ஆகிவிட்டது. இவ்வாறு உரமிட்டுப் பாதுகாப்பு செய்த பிறகு சரியாக 4 மாதங்கள் முடிவுற்றவுடன், தென்னை மரங்களில் புதிதாகப் பாளைகள் உருவாகி உள்ளது கண்டு மனம் நெகிழ்ந்தேன். இதிலிருந்து பூக்கள் லேசாக கீழே விழுவதையும் கண்டேன். இத்தகவலை காலம் தாழ்த்தாமல் விவசாயப்பிரிவு அலுவலர்களிடம் கூறினேன். அவர்கள் என்னிடம் 100 மில்லி பிளானபிக்ஸ் மருந்து வாங்கி வரும்படி கூறினார்கள். அதன்படி மருந்து வாங்கி தகவல் தெரிவித்தேன்.

ஒரு மரத்திற்கு 22 $\frac{1}{2}$ லிட்டர் தண்ணீரில் 5 மில்லி பிளானபிக்ஸ் மருந்து வீதம் கலந்து தென்னை மரத்தின் மேற்பகுதியில் பாளைகளின் மீதும் தென்னைக் குரும்பைகள், பூக்கள் ஆகியவைகளின் மீதும் நன்கு நனையும் வண்ணம் காலை நேரத்தில் மருந்து தெளிக்க வட்டார வேளாண் துறை அலுவலர்கள் உடனிருந்து உதவினார்கள். இந்த மருந்து தெளித்த பின் பூக்கள் உதிர்வது நின்று விட்டது. மரத்தில் சராசரியாக 30-40 காய்கள் வரையிலும் மகசூல் கிடைத்துள்ளது. மேலும் வட்டார வேளாண் துறை அலுவலர்களின் ஆலோசனையின்படி நான் ஏற்கனவே உரமிட்டது போல் 2-வது முறையாக மரம் ஒன்றுக்கு $\frac{1}{2}$ கிலோ யூரியா 1 கிலோ சூப்பர் பாஸ்பெட் 1 கிலோ பொட்டாஷ் ஆகியவைகளை

மரத்தின் மறு அரை வட்டப் பகுதியில் குழி வெட்டி உரம் வைத்து பிறகு $\frac{1}{2}$ கிலோ மைக்ரோ நியுட்ரியண்ட் மிக்சரை வைத்து மண் போட்டு குழியை மூடி தண்ணீர் பாய்ச்சப் பட்டது. இதில் மொத்தம் மரம் ஒன்றுக்கு ஒரு ஆண்டில் செலவினம் ரூபாய் 10 மட்டுமே. ஆனால் இதுவரையிலும் மலட்டு தன்மையிலிருந்து வந்த எனது தென்னை மரங்கள் சராசரியாக குறைந்த பட்சம் மாதம் ஒன்றுக்கு 30 காய்கள் மகசூல் தந்த வண்ணம் இப்போது காணப்படுகிறது என்ற எனது சொந்த அனுபவத்தை நான் கூறுகிறேன். வேளாண் துறையினரால் பரிந்துரை செய்யப்படும் முறைகளை செவ்வனே கடைப்பிடித்தால் நற்பலன் கிடைப்பது உறுதி.

அனுபவம் புதுமை

# வரலட்சுமி பருத்தி




வி. மாரியப்பன்

காளிப்பட்டி தெரு,
வைகுந்தம் அஞ்சல்,
சேலம் மாவட்டம்.


நான் 1980-ஆம் ஆண்டு செப்டம்பரில் வரலட்சுமி பருத்தி பயிரிட எண்ணினேன். பலரும் என்னை புதுசு புதிசா வரலட்சுமி போடுவதாகத் தெரிகிறது என்றனர். இத்தோடு விவசாயத்தை அறவே விட்டு விடுவான் எனவும் கேலியாகப் பேசினர். அப்போது ஒருங்கிணைந்த பருத்தி பெருக்குத் திட்ட வேளாண்மை அலுவலர் திரு எல். சோமசுந்தரத்தை அனுகிய போது வரலட்சுமி தாராளமாகப் பயிரிடலாம். ஆனால் தான் கூறிய முறைப்படி உரம், மருந்து, கட்டுக்கோப்பு முறைகளை கையாள வேண்டும். எனவும் கூறினார். நான் எம்.சி ஐ.சி.யில் மாதம் ரூ. 1,000-வரை சம்பளம் பெற்று வருகிறேன். நான் விவசாயத்தை பக்க தொழிலாக கொண்டு வரலட்சுமி 1¾ ஏக்கரில் பயிரிட்டேன். நான் வேளாண்மை அலுவலர் கூறிய அறிவுரைப்படி என்.பி.கே. 16:16:16 அளவில் டி.ஏ.பி., பொட்டாஷ் அடியுரமாக இட்டு 3½' 2' விதை ஊன்றினேன். பருத்தி நுண்ணூட்ட சத்து 7½ கிலோ, விதை நட்ட அன்றே மணலில் கலந்து போட்டேன். செடிகள் முளைத்த போது அனைவரும் நெருக்கமாக உள்ளது என்றே கூறினர். இலாகா பரிந்துரை 4' 2' என இருந்தால் 3½'2' என்பது நெருக்கமாக தோன்றியது. பரவாயில்லை அடுத்த வருடம் 4' 2' சரியாக இடைவெளி விட்டு நடலாம் என எண்ணினேன். விதை முளைக்காத இடங்களில் பாலிதீன் பைகளில் போட்ட செடியை வைத்து நிரப்பினேன். செடிகள் அசுவணி தத்துப்பூச்சி தாக்குதல் அடைந்த போது இலாகா பரிந்துரைப்படி ரோகார் 300 மில்லி லிட்டர் ஏக்கருக்கு தெளித்தேன். 45-வது நாள் மம்மட்டி களை எடுத்த போது 16 கிலோ தழைச் சத்து யூரியா மேலுரமாக இட்டேன். செடிகள் பார்க்க எதிர்பார்த்த அளவுக்கு மேல் பூவும் சப்பையுமாக இருந்தது. காய்ப்புழு தாக்குதல் இருந்த பொழுது பரிந்துரையின்படி கொட்டிய பூ, சப்பைகளை பொறுக்கி குழியில் போட்டு புதைத்து எண்டோசல்பான் 600 மில்லி லிட்டர் தெளித்தேன். 10 நாட்களுக்கு ஒரு முறை காய்ப்புழுவை கட்டுப் படுத்த நுவக்கிரான், ஜோலோன் மாற்றி மாற்றி தெளித்தேன். 85-வது நாள் நுனியை கிள்ளி விட்டேன். காய்கள் பருமனாக டி.ஏ.பி.3 சத பரிந்துரை செய்ததால் .2 தடவை நன்றாக தெளித்த வடிகட்டிய கரைசலை 90-வது, 110வது நாளில் தெளித்தேன். காய்கள் நன்றாக முற்றி இருந்தது கண்கூடாக தெரியவந்தது. 115-வது நாள் வெடிப்பிற்கு வந்த பொழுது, தொட்டியிலிருந்து பருத்தியை மட்டும் தனியாக பிரித்து எடுத்து சுத்தம் செய்து மணல் மீது பரப்பி வைத்தோம். மார்ச்சு மாதம் 20-ம் நாள் பருத்தி வெடிப்பு முடிந்து விட்டது. 1¾ ஏக்கரில் ஏறக்குறைய 24 குவிண்டால் பருத்தி விளைச்சல் பெற்றேன். மார்க்கட் அப்போது வரலட்சுமிக்கு இல்லாததால் ஒழுங்கு முறை விற்பனைக்கூட மாவட்ட தனி அலுவலர் முயற்சியால் நல்ல விலைக்கும் விற்பனை செய்தேன். கேலி பேசிய பலரும் பரவாயில்லை. புது விவசாயத்திலும் அற்புதமான மகசூல் என்றனர். எனக்கு நிகர லாபம் ரூ. 12,000 - கிடைத்தது. அதே போல் இந்த 1981 வருடத்திலும் செப்டம்பர் வரலட்சுமி 2½ ஏக்கர் ஊன்றி தற்போது மிக நன்றாக இருக்கிறது. அதிக மகசூல் வருகிறது.



# விண்வெளியில் ஒரு வகுப்பறை

மாணவர்களே சொந்தமாகச் செயற்கைக் கோள் ஒன்றினை இயக்குகின்றனர் என்றால் வியப்பாக இருக்கிறதா?

பேரார்வத்துடனும் துடிப்புடனும் பட்டப் படிப்புப் படிக்கும் மாணவர் பதினைந்து பேர் முழு மூச்சுடன் இத்திட்டத்தில் இறங்கியுள்ளனர்.

அவர்கள், அமெரிக்காவின் மலைப் பாங்கான மேற்குப் பகுதியிலே அமைந்திருக்கும் கொலராடோ பல்கலைக் கழகத்து மாணவராவர். அமெரிக்கச் செயற்கைக் கோள் ஒன்று முழுக்க அவர்களுடைய கட்டுப்பாட்டில் உள்ளது. மேல் வாயுமண்டலத்தில் இருக்கும் 'ஓஸோன்' அடுக்கினைப் பற்றிய புதிய விஞ்ஞான விவரங்களை இந்தச் செயற்கைக் கோள் பூமிக்கு அனுப்பி வைக்கிறது.

மாணவர்கள் கம்ப்யூட்டர் (கணக்குப் பொறி) துணை கொண்டு உருவாக்கப் பெற்ற கட்டளைகளை இக்கோளுக்கு விழுங்குகின்றனர்; கோள் அனுப்பி வைக்கும் விஞ்ஞானத் தகவல்களைப் பல்கலைக் கழகத்து ஆசிரியர்களும், பட்டம் பெற்ற மாணவர்களும் ஆராய்கின்றனர்.

பட்டப்படிப்புப் படிக்கும் இம் மாணவர்களில் பெரும்பாலோர், தமது முக்கிய பாடமாகப் பொறியியல் அல்லது பௌதிகத்தினை



எடுத்துக் கொண்டவர்களாவர்; ஆயினும் ஒரு சில கலைத்துறை மாணவர்களும் உள்ளனர்.

வானியல், பௌதிகம் முக்கியமான பாடமாக எடுத்துள்ள 22 வயது இளைஞன் ரீஸ் மாரிஸன் கூறுவதாவது :

''நாங்கள் என்ன செய்கிறோம், என்ன கற்கிறோம் என்பதனைக் கொண்டு பார்க்கையில் இந்தத் திட்டம் மிகமிகப் புதுமையானது; வழக்கத்தில் இல்லாதது; அடுத்த ஆண்டிலே நான் பட்டம் பெற்று விடுவேன். அப்பொழுதும்கூட பட்டம் பெற்ற நான் மாணவர் குழுவில் ஒருவனாகவே இங்கு தங்கி விண்வெளிப் பணிகளில் ஈடுபட எனக்குக் கொள்ளை ஆசை''.

''விண்வெளியில் ஒரு வகுப்பு அறை'' என்று இத்திட்டதிற்கு நாங்கள் பெயர் சூட்டியுள்ளோம்' என்கிறார் செயற்கைக் கோள் பணி மேலாளர்.

ஆய்வுக்கூடத்தினை மாரிஸன், பிற பட்டப்படிப்பு மாணவர்கள் ஆகியோர் முறைவைத்து (ஷிஃப்ட்) 24 மணி நேரம் இடையறாமல் இயக்குகின்றனர். கோளின் எல்லா நிலைகளையும் இவர்களே கட்டளையிட்டுக் கட்டுப்படுத்துகின்றனர்.

''இதுவரை கிடைத்த தகவலின்படி ஓஸோன் ''சுற்றி வருகிறது' முன்னர் கிடைத்த மாதிரிகளின்படி மீஸோஸ்ஃபியர் ஒரு நிலையில் இருக்கிறதாகக் கருதப்பட்டு வந்துள்ளது. இப்பொழுது கிடைத்திருக்கும் தகவல் மிகவும்





புதியது மட்டுமல்ல, பரபரப்பூட்டுவதுமாகும்.

1974-ஆம் ஆண்டில் நாஸா (அமெரிக்க விண்வெளி நிலையம்) இத்திட்டத்தினை உருவாக்கியது. விண்வெளியில் சிறிய, செலவுக் குறைவான, ஆய்வுகளை நடத்த சில வழிகளைக் காண முயலுவதாக அது அறிவித்தது. இக் கோரிக்கைக்குச் செவி சாய்த்தது கொலராடோ பல்கலைக் கழகம்.

தற்போது மேற்கொள்ளப் பட்டிருக்கும் திட்டத்தின் பெயர் 'ஸோலர் மீஸோஸ்ஃபியர் எக்ஸ்புளோர்ர்', 'ஊளச்சதை ஏதுமில்லாத' செலவு மிகமிகக்குறைவான ஆய்வுத்திட்டம் இதுவாகும்.

ஒரு கோடியே 70 இலட்சம் டாலர் செலவில் இந்தச் செயற்கைக் கோளுக்கு வடிவம் அமைத்து கட்டி முடிக்கவும் தகவல்களை ஆராயவும் முன்வந்தது கொலராடோ பல்கலைக் கழகம்.

திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுவதற்கு உதவி, பட்டப் படிப்புப் படிக்கும் மாணவர்களுக்கு ஒரு மணி நேர உழைப்புக்கு 5 டாலர் வீதம் வழங்கப் பெற்றது. செலவை மிக்க குறைவாக்குவதற்கு இவர்கள் கைகொடுத்தனர்.



# மாணவரின் மணியான கண்டுபிடிப்பு!

சென்னை மாநிலக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பி.ஏ., (அரசியல்) பயிலும் கலாநிதி என்ற கண் பார்வையற்ற மாணவர், தானாக-குறித்த காலத்தில்-மின் சாதனங்களை இயக்கும் கருவி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்.

இந்தக் கருவியின் பயன் என்ன ?

இதனால் தேவைப்படும் நேரத்தில், யாரும் இல்லாத நேரத்தில், மின் விளக்கைப் போடவும் அல்லது எரிந்து கொண்டிருக்கும் விளக்கை நிறுத்தவும் முடியும்!

அதுமட்டுமல்ல, இந்த நவீனக் கருவி தொலைக்காட்சி, ஒலிப்பதிவுக் கருவி, இசைத் தட்டுக் கருவி, வானொலி, மின்விசிறி ஆகி'' வற்றைச் சரியான நேரத்தில் இயக்குவதற்கோ அல்லது இயங்கிக் கொண்டிருக்கும் இக்கருவிகளைக் குறித்த காலத்தில் நிறுத்தவோ பயன்படும்.

இவை தவிர, வீடுகளில் உள்ள மாவரைக்கும் இயந்திரம், மின்சாரச் சமையல் கருவி, குளிர்சாதனக் கருவிகள், 1.5 குதிரைச்சக்தி ஒட்டத்திற்கு உட்பட்ட நீரிறைக்கும் இயந்திரம் ஆகிய கருவிகளையும் நாம் விரும்பும் நேரத்திற்கு, வசதிக்கேற்ப இயக்கவும் அல்லது இயங்கிக் கொண்டிருக்கும் இவற்றை நிறுத்தவும் இதன் மூலம் முடியும்.

இக்கருவி வேலை செய்வதற்கு, அவரவர் இல்லங்களில் உள்ள மேசைக் கடிகாரமே போதுமானது.

இந்த நவீனக் கருவியைக் கண்டுபிடித்த கலாநிதி அவர்களின் தந்தையார் ஒரு கொத்தனார். பெயர் திரு பெ. அண்ணாமலை ரெட்டியார்.

1967-ஆம் ஆண்டு, பாளையங்கோட்டையில் உள்ள பார்வையற்றோர் பள்ளியில் முதல் வகுப்பில் சேர்ந்து 8-ஆம் வகுப்பு வரை இவர் படித்தார்.

இவர் உயர்நிலைக் கல்வியைப் பாளையங்கோட்டை தூய யோவான் உயர்நிலைப் பள்ளியில் முடித்தார். பிறகு சென்னை, லயோலா கல்லூரியில் பயின்றார். இவரது சகோதரி சென்னை எழும்பூரில் உள்ள மகப்பேறு மருத்துவமனையில், செவிலியராகப் பணியாற்றி வருகிறார்.

இவருக்குப் படிப்பதற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது ஒரு ஒலிப்பதிவுக் கருவி.

''ஏன் இது, தானாக அல்லது நாம் விரும்புகின்ற நேரத்திற்கு இயக்கக் கூடாது?' என்று எழுந்த கேள்வியின் விளைவுதான், இவர் இதைக் கண்டுபிடிப்பதற்கு அடிப்படைக் காரணம் என்று கூறுகிறார் இவர். இவர் இப்பணியில் 9 மாதக் காலம் இரவும், பகலும் பாடுபட்டாராம். இந்தக் கருவிக்கு இவர் வைத்திருக்கும் பெயர் என்ன தெரியுமா? ''கென் ஆட்டோமெட்'' (Kan-Automat) என்பதாகும்.

# ஒரு ஜாடியின் விலை ரூ. 2000!

மிகவும் எளிமையாகத் தோற்றமளிக்கும் பீங்கான் பாத்திரத்தின் விலை ஆயிரம் ரூபாய்!

நுணுக்கமான முறையில் வடிவமைக்கப்பட்ட ஜாடியின் விலை ரூ. 2000. நம்ப முடியவில்லை அல்லவா? ஆயினும், பத்ராவதியைச் சேர்ந்த கைவினைஞர்கள் இதைச் சாதித்துக் காட்டியுள்ளனர்.

பம்பாய் ஜகாங்கீர் கலை அரங்கில் ஏழு நாட்கள் நடைபெற்ற பீங்கான் கலைப் பொருட்கள் கண்காட்சிக்கு மாபெரும் ஆதரவு இருந்தது. காட்சியில் வைக்கப்பட்ட எல்லாப் பொருட்களும் விற்றுப் போயின. சில, அதிக விலைக்கும் விற்பனை செய்யப்பட்டன.

இங்கு உற்பத்தி செய்யப்படும் பீங்கான் பாத்திரங்கள் உள்ளூர் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டவை. கிராமப்புற பானை வனைதலைப் பிரதிபலிக்கும் இப்பாண்டங்கள், அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.





## விளையும் பயிர்

பள்ளிப் பருவத்திலேயே பல துறைகளிலும் மாணவமணிகள் சிறந்து விளங்குவதைப் பார்க்கின்றோம்.

அந்த வகையில், தாராபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில், 'அலுவலகச் செயலரியல்' இரண்டாமாண்டு பயிலும் மாணவன் சி. பாரதி, சகலகலா வல்லவனாகத் திகழ்கிறார்.

பள்ளியில் நடந்த இலக்கியப் போட்டிகள் பலவற்றில் இம் மாணவன் கலந்துகொண்டு வெற்றி பெற்றுள்ளார்.

கவிதை, கட்டுரை, பேச்சு, நாடகம் முதலானவற்றில் இம் மாணவன் பங்கு கொண்டு, சான்றிதழ்கள், பரிசுகள் பெற்றுள்ளார்.

"எதிர்காலத்தில் ஒரு கவிஞனாக வரவேண்டும் என்பதே என் ஆசை!" என்று இம்மாணவன் கூறுகிறார். அவரை நாமும் வாழ்த்துவோம்!

## சென்னை தொலைக்காட்சியில் கல்வி நிகழ்ச்சி



சென்னை தொலைக்காட்சி நிலையத்தில் கல்வி ஒளிபரப்பு நிகழ்ச்சியை மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு கே. ராசாராம் அவர்கள் 9.7.82 அன்று பகல் 11.45 மணிக்கு குத்து விளக்கு ஏற்றித் துவக்கி வைத்தார்.

கல்வி நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சியில் மாணவர்கள் காண அதிக வாய்ப்பு அளிப்பதற்குக் கல்வி ஒளிபரப்பு நிகழ்ச்சிகளுக்கு தனியான சேவை மத்திய அரசு ஒதுக்கவேண்டுமென்று மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் குறிப்பிட்டார்.

நவீன தொழில் நுட்பத்தினால் ஏற்பட்டுள்ள விஞ்ஞான சாதனைகளை, தொலைக் காட்சிக் கல்வி நிகழ்ச்சிகளில் காட்டலாமென்று அவர் யோசனை கூறினார்.

ஆரம்பப் பள்ளிகளுக்கான ஆங்கில பாடங்களை நடப்பு ஆண்டில் அறிமுகப்படுத்தவிருக்கிறது என்று சென்னை தொலைக் காட்சி நிலையத் துணை இயக்குநர் திரு கே. குன்னி கிருஷ்ணன் தனது வரவேற்புரையில் குறிப்பிட்டார்.

தொலைக்காட்சி கல்வி நிகழ்ச்சிகளைக் காணும் சிறந்த பள்ளிக்குப் பரிசு அளிக்கத் தயாராக இருப்பதாகப் பள்ளி கல்வி இயக்குநர் டாக்டர் கே. வேங்கடசுப்பிரமணியம் அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் கூறினார். எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுகளுக்கு அளிக்கப்படும் மாதிரி வினாத்தாள்களைப் போல +2-க்கும் அளிக்கவேண்டுமென்று அவர் கூறினார். இந்த யோசனையைத் தொலைக் காட்சி நிலையத்தினர் உடனடியாக ஏற்றுக் கொண்டனர்.

## மலர்களின் மருத்துவப் பயன்கள்

**கொன்றைப்பூ:** இம் மலரினால் மலக் கிருமிகள், குடலைப் பற்றிய நோய்கள் தீரும்.

குடிநீரிலிட்டு உட்கொள்ள மலக்கிருமிகள், குடலைப் பற்றிய நோய்கள் தீரும். பூவை தேனில் ஊறவைத்து அருந்த, மலச்சிக்கல் தீரும். இதைப் பாலுடன் காய்ச்சி அருந்த உடற்கு நல்ல ஊட்டத்தைத் தரும்.

**தாழம்பூ:** இம் மலரை நீரில் ஊறவைத்துக் குடிக்க, உடம்பிலுள்ள வெப்பத்தைத் தணிக்கும்; இம்மலர் அம்மை நோய்க்குச் சிறந்த தடுப்பு மருந்தாகும். இதன் செய்கை குங்குமப் பூவின் செய்கையை ஒத்தே இருக்கும். இம் மலரிலிருந்து எடுக்கும் எண்ணெயைத் தலைவலி, உடல்வலி முதலியவைகளுக்குத் தடவலாம்.

**குருக்கத்திப்பூ:** இம் மலர் தலையில் உண்டாகும் நோய்கள், நீர்வேட்கை, வெப்பம் நஞ்சுகள் ஆகியவற்றை நீக்கும். இம் மலரைக் குடிநீர் செய்து அருந்தலாம்.

## எழுதுங்கள்!

மாணவ மணிகளே! இது உங்கள் பக்கம். இந்தப் பகுதிக்கு நீங்கள் குட்டிக்கதை, கவிதை, துணுக்குகள் முதலானவற்றை எழுதி அனுப்பலாம். அவை சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும். பள்ளியில் சிறந்து விளங்கும் மாணவன் / மாணவி பற்றிய குறிப்பும், புகைப்படத்துடன்-ஆசிரியரின் சான்றுடன் அனுப்பி வைக்கலாம். மாணவர்க்குப் பயனுள்ளவை இப்பகுதியில் வெளியிடப்படும். எழுதும்போது தங்கள் பள்ளி முகவரியைத் தெளிவாக எழுதுதல் வேண்டும்.



# ஏழை பங்காளருக்கு இனிய விழா!





எளிமையின் சின்னம்!
எதற்கும் அஞ்சாதவர்!
சிறந்த தீர்க்கதரிசி!
சத்தியத்திலே நம்பிக்கை உள்ளவர்!

—என்றெல்லாம் புகழ்மாலை சூடிய பெரு விழா—பெருந்தலைவர் காமராசரின் 80வது பிறந்த நாள் விழா, சென்னை கலைவாணர் அரங்கில், ஜூலைத் திங்கள் 15ஆம் நாள், செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் மிகச் சிறப்பாக நடந்தது.

அன்று காலை, நாயன இசையுடன் விழா துவங்கியது.

நிகழ்ச்சித் தொகுப்பு:
**பி. வி. கிரி**
**ஜி. ஆனந்தன்**

**நெஞ்சத்தில் வாழ்கிறார்**

மேதகு தமிழக ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள், பெருந்தலைவர் காமராசர் அவர்களின் வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்து விழாவினைத் தொடங்கி வைத்தார். அவர் பேசுகையில் குறிப்பிட்டார் :

''காமராசர் இப்போது உயிரோடு இல்லையென்றாலும்,







பெருந்தலைவர் காமராசர் அவர்களின் வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சியை மேதகு ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள் திறந்து வைத்துப் பார்வையிடுகிறார்.

அவர் நம்முடைய நினைவிலும் நெஞ்சத்திலும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார். அவர் வாழ்வின் தொடக்க காலத்திலிருந்து எளிமையாகவும், நேர்மையாகவும் வாழ்ந்து வந்தார் என்பதை நான் தமிழகத்தின் ஆளுநராக வருவதற்கு முன்னரே அறிவேன்.

''காங்கிரஸ் இயக்கத்திலேயே காமராசர் மிகவும் முக்கியமான ஒருவராகக் கருதப்பட்டார். மக்களின் குறைகளைத் தீர்க்க வேண்டி அவர்களுடன் நெருங்கிப் பழகிக் குறைகளைப் போக்கினார்''.

**எளிமையின் சின்னம்**

பிறகு நடந்த கருத்தரங்கிற்கு மாண்புமிகு சட்ட மன்றப் பேரவைத் தலைவர் திரு க.இராசாராம் அவர்கள் தலைமை வகித்தார். அப்போது அவர் பேசுகையில் தெரிவித்ததாவது:

''காமராசர் சின்னஞ்சிறுவயது முதற்கொண்டே சாதி ஒழிப்புத் தன்மையிலும், எல்லாருக்கும் ஓரே சீரான வாழ்க்கை அமைய வேண்டும் என்ற தன்மையிலும் தம்முடைய உள்ளத்தைப் பறிகொடுத்தவர். வைக்கம் சத்தியாக்கிரகத்தில் தந்தை பெரியாருடன் கலந்துகொண்டார்.

''பல்வேறு கால கட்டங்களில், மகாத்மா காந்தியடிகளுடன் சத்தியாக்கிரகப் போராட்டங்களில் காமராசர் ஈடுபாடு கொண்டார். பதவியை என்றும் அவர் பெரிதாக மதித்ததே இல்லை. பதவியை ஒரு மேல் துண்டுபோலவே அவர் மதித்தார்.

''காமராசர் எளிமையின் சின்னமாகத் திகழ்ந்தார். காமராசர்



திரு க. இராசாராம்

போன்ற எளிமையான தலைவரை அரசியல் உலகில் காண்பது கடினமானது.''

**கருத்து மழை பொழிந்தது!**

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் அருமை பெருமைகளை விளக்கிடும்வண்ணம் கருத்தரங்கு அமைந்திருந்தது.



திரு லியாகத் அலிகான்

திரு லியாகத் அலிகான் அவர்கள் 'செயலாற்றும் திறன்', என்னும் தலைப்பில் பேசுகையில், ''காமராசர் சிறந்த தீர்க்கதரிசி. செயலாற்றும் திறன் உள்ளவர். இந்திய நாட்டு ஒருமைப்பாட்டுக்குப் பாடுபட்டவர்'' என்றார்.



திரு கவி. கா. மு. ஷெரீப்

திரு கவி கா.மு. ஷெரீப் அவர்கள் 'நாட்டுப்பற்று' என்னும் தலைப்பில் பேசும்போது, ''தமிழ் மாநிலம் தனியாக அமையக் காரணமாக இருந்தவர். அவர் காலத்தில்தான் முதன் முதலில் 'தமிழ்க் கலைக் களஞ்சியம்' தொடங்கப் பட்டது. தமிழுக்கும், தமிழ் இனத்துக்கும், தமிழ் நாட்டுக்கும் தொண்டாற்றியவர்'' என்று குறிப்பிட்டார்.



திரு கு. இராஜவேலு

திரு கு. இராஜவேலு அவர்கள் 'அரசியல் தொண்டு' என்னும் தலைப்பில் உரையாற்றுகையில் சொன்னார்:

''நெப்போலியனைப் போல, காமராசருடைய நினைவாற்றல் போற்றத்தக்கது. அவர் தெளிவான அரசியல் கொள்கையுடையவர். அஞ்சாமை மிக்கவர். உலகத் தலைவர்களோடு ஒன்றாக வைத்து எண்ணத்தக்கவர். ஜன

நாயகத்திலே அழுத்தமான பற்றுள்ளவர். சத்தியத்திலே ஆழ்ந்த நம்பிக்கையுள்ளவர்.''



திரு திருக்குறளார் வீ. முனிசாமி

### தூய வாழ்க்கை வாழ்ந்தவர்!

திரு திருக்குறளார் வீ.முனிசாமி அவர்கள் 'எளிமை இயல்பு' என்னும் தலைப்பில் கருத்து தெரிவிக்கையில், ''காமராசர் தூய வாழ்க்கை வாழ்ந்தவர். அவர் வாழ்க்கையைப் பின்பற்றி நடப்பதுதான், அவருக்கு நாம் செய்கின்ற நன்றியாகும். தமிழக அரசு, தலைவர்களுக்கெல்லாம் விழா எடுத்து வருவதைப் பாராட்டுகிறேன். இம்மாதிரியான விழாக்கள், எதிர்காலச் சந்ததியினர்க்குப் பெரிதும் பயன்படும்'' என்றார்.

காலை நிகழ்ச்சியின் துவக்கத்தில், மொழிபெயர்ப்புத்துறை இயக்குநர் டாக்டர் அவ்வை நடராசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். இறுதியில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் அவர்கள் நன்றி நவின்றார்.

மாலை 4 மணியளவில், சீர்காழி திரு சிவசிதம்பரம் குழுவினரின் இசை நிகழ்ச்சி அனைவரையும் கவர்ந்தது.

### சிறப்புக் கூட்டம்

அன்று மாலை 6 மணியளவில் சிறப்புக் கூட்டம் நடந்தது.

மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமை வகித்தார். அவர் தமது உரையில்:—

''காமராசர் தலை சிறந்த தேசத் தொண்டர். அவரது தொண்டு மகத்தானது. அவரது சீரிய பணி காரணமாகவும், செயல் திறன் காரணமாகவும் அவர் நாட்டு மக்களின் நன் மதிப்பைப் பெற்றுத் திகழ்ந்தார். அவரை அனைத்துத்



டாக்டர் ம. பொ. சிவஞானம்

தரப்பட்ட மக்களும் பாராட்டத் தவறவில்லை. தன் வாழ்நாள் முழுவதும் காமராசர் இலட்சியத்திற்காக வாழ்ந்து வந்தவர். புதிய பாரதத்தைப் படைக்க வேண்டும் என்பதில் அதிக அக்கறை கொண்டிருந்தார். பதவிப்பித்து இல்லாத காமராசர், தமிழகத்திற்கு நல்ல பல திட்டங்களைத் தந்து, மறைந்தும் நம்மிடையே மறையாதவராய் விளங்குகிறார்.

''மாண்புமிகு முதல்வர் கொண்டு வந்துள்ள சத்துணவுத் திட்டம், அகில இந்தியத் திட்டமாக வரவேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். முதல்வர் கொண்டு வந்துள்ள திட்டம் என்றென்றைக்கும் சிரஞ்சீவித்திட்ட



திரு நெ. து. சுந்தரவடிவேலு

மாகத் திகழும் என்பதில் சந்தேகமில்லை.'' என்றார்.

### கண் கொடுத்தவர்

சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திரு.நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் தமது உரையில், குறிப்பிட்டதாவது:

''இலவசக்கல்வித்திட்டத்தைக் கொண்டு வந்த பெருமை காம



திருமதி சுலோசனா சம்பத்

ராசரைச் சாரும். கல்விக்குக் கண் கொடுத்தவர் காமராசர் என்று சொன்னால் அது மிகையாகாது. காமராசர் முதல்வராக இருந்த காலத்தில் காஞ்சிபுரத்திலும் மதிய உணவுத் திட்டத்தின் துவக்க விழா நடைபெற்றது. அப்போது அமரர் அண்ணா எம்.எல்.ஏ.யாக இருந்து வந்தார். அமரர் அண்ணா அவர்கள் இலவச மதிய உணவுத் திட்டத்திற்கு அவர் வாங்கிய எம்.எல்.ஏக்கான ஊதியமான 150 ரூபாயில் மாதா மாதம் ஏழைக் குழந்தைகளுக்காக இலவச மதிய உணவுத் திட்டத்திற்காக ஐம்பது ரூபாய் வழங்கினார். காமராசர் கொண்டு வந்த மதிய உணவுத் திட்டத்தை அமரர் அண்ணா பாராட்

இசை நிகழ்ச்சி-சீர்காழி திரு சிவசிதம்பரம் குழுவினர்.



டினார். இன்றைக்கு ஏழை எளிய மக்களுக்காகச் சத்துணவுத் திட்டத்தைத் தமிழகத்தில் முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்ததை நல்ல மனம் படைத்தோர் அனைவரும் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள்''.

**சமுதாய மறுமலர்ச்சி**

திருமதி சுலோசனா சம்பத் அவர்கள் பேசும்போது ''காமராசர் ஆட்சிக் காலத்தில் சமுதாய மறுமலர்ச்சி ஏற்படுத்துவதற்கான ஆக்கப் பணிகள் அனைத்தையும் செய்து காட்டினார். பிற்பட்டவர்கள் – தாழ்த்தப்பட்டவர்களின் தூதுவராக இருந்து, தமிழகத்திற்குச் சேவை செய்தார். காமராசரின் சேவை அகில இந்தியாவுக்கே தேவைப்பட்டது. பிறகு காமராசர் உலகப் புகழ்பெற்ற தலைவரானார்'' என்று குறிப்பிட்டார்.



திரு சி. சுப்பிரமணியம்

முன்னாள் மத்திய அமைச்சர் திரு. சி.சுப்பிரமணியம் அவர்கள் பேசுகையில், ''தமிழக முதலமைச்சர் காமராசர் இந்தியாவிலுள்ள தலைசிறந்த முதல் அமைச்சராக விளங்குகிறார் என்று அமெரிக்காவிலிருந்து வந்த அறிஞர் ஒருவர் நேருவிடமும், என்னிடம் சொன்னார். காமராசர் தனக்கென வாழாமல் நாட்டுமக்களுக்காகவே வாழ்ந்து வழிகாட்டிய உத்தமத் தலைவர். காமராசர் தலைமைப் பொறுப்பு ஏற்ற போதும், பதவி இல்லாத போதும் மக்களின் நலனில்தான் அவரது எண்ணம் இருந்து வந்தது. அவர் காட்டிய வழியில் நாட்டிற்கும் நம்மால் ஆன சேவையைச் செய்ய முடியுமா? என்பதைப் பார்க்கவேண்டும். காமராசர் ஆட்சிக்காலம் ஒரு பொற்காலமாகும். ஏழ்மையாகப் பிறந்து ஏழ்மையாகவே வாழ்நாள் முழுவதையும் கழித்தவர். காமராசர் விழாவை எடுக்க காரணமாக இருந்த தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களுக்கு எனது நன்றி'' என்று குறிப்பிட்டார்.



திரு ஓ.வி. அளகேசன்

**மகத்தான தொண்டு!**

முன்னாள் மத்திய அமைச்சர் ஓ.வி. அளகேசன் அவர்கள் பேசுகையில், ''தலைவர் காமராசருக்கு விழா எடுக்க முன்வந்த தமிழக அரசை முதலில் பாராட்டுகிறேன். நன்றி சொல்லிக் கொள்கிறேன். காமராசர் விழாவை ஆண்டுதோறும் நடத்த வேண்டும். இதனைப் பிறரும் கடைப்பிடிக்க வேண்டும். நேருஜி முதல் சாதாரணத்தொண்டர்கள் வரை காமராசரின் சேவையைப் பாராட்டியுள்ளனர். காமராசர் தொண்டு மகத்தானது. காமராசரின் வழியைப் பின்பற்ற வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.



திரு கே. ஏ. கிருஷ்ணசாமி

மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்—

''காமராசர் விழாவை, நமது இனியத்தலைவர் புரட்சித்தலைவர் அவர்களின் சீரிய தலைமையிலுள்ள அரசு விழாவாக எடுத்

## சாதி முறை கூடாது!

சாதியை நான் வெறுக்கிறேன். சாதி மீது எனக்கு நல்ல அபிப்பிராயமே கிடையாது.

சென்ற பல நூற்றாண்டுகளாக, சாதி முறையானது இந்தியாவின் சாபக்கேடாகவே இருந்து வந்திருக்கிறது என்பது என்னுடைய கருத்து.

சாதிப் பாகுபாடு இந்தியாவின் சக்தியைச் சீரழித்தது. பலவீனப்படுத்தியது. பாரதத்தை அது தாழ்மைப் படுகுழியில் தள்ளி மீளவொட்டாமல் அழுத்தியது.



நாம் அன்னியருக்கு அடிமைப்பட்டதன் மூலகாரணமே, நம்மிடையேயிருந்த சாதிப் பிளவுகள்தான். நம்முடைய ஐக்கிய பாவத்தை அழித்தது சாதியுணர்வுதான். நம்முடைய சகோதரர்களிலேயே ஒரு பகுதியினரை இழிவுபடுத்தும் துர்நோக்கத்தை விளைவித்தது சாதி முறைதான்.

கடந்த காலத்தில் சாதி முறையினால் ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்கக் கூடுமா என்பதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், இன்றைய உலகத்தில் சாதிமுறைதான் நம்முடைய படுமோசமான பலவீனம் என்பதென்னவோ மறுக்க முடியாத உண்மை.

இந்தச் சாதிமுறை நம்மிடையே நீடித்திருக்கும் வரை, நமக்கு விடிவு காலமே இல்லை. நமது குறிக்கோளை நாம் ஒரு நாளும் அடைய முடியாது.

--பண்டித ஜவகர்லால் நேரு



**மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் காமராசர் திருவுருவப் படத்தைத் திறந்து வைக்கிறார்.**

திருப்பதை நாடு பாராட்டுகிறது. நாமும் பாராட்டுகிறோம். காமராசர் ஜனநாயகத்திற்கு வழி காட்டியாக இருந்தார். இந்தியாவுக்கு சீன அபாயம் தலைதூக்கிய போது, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள் காமராசர் அவர்களிடம் அப்போது 75 ஆயிரம் ரூபாயை வழங்கினார். பெருந்தலைவரின் புகழ்பட்டுவிடக்கூடாது என்பதற்காக நமது முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், திருமலைப் பிள்ளை சாலையிலுள்ள



காமராசர் இல்லத்தை நினைவு இல்லமாக ஆக்கி, அவருக்கு மேலும் பெருமை சேர்த்தார்கள். மதுரைப் பல்கலைக் கழகத்திற்குக் காமராசர் பல்கலைக் கழகம் என்று பெயர் சூட்டியுள்ளார்கள். காமராசர் புகழ் இன்றைக்கு உலகம் உள்ளவரை இருக்கும் என்பதில் ஐயமில்லை.''

பெருந்தலைவர் காமராசர் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டதாவது:

''நம்மால் என்றும் போற்றிப் பாராட்டப்பட்ட- தகுதி பெற்ற- யாராலும் மறந்துவிட முடியாத பெருந்தலைவர் திரு. காமராசர். எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர் நாட்டிற்குச் செய்த நற்காரியத்தை மறக்கக் கூடாது.

**தாய்ப்பாசம்**

''காமராசர் தன் தாயின் மீது வைத்து இருந்த பக்தி, பாசம், மரியாதையை மிகத் தெளிவாக கூறிய என்.வி.நடராசன் ஒரு சம்பவத்தைக் கூறினார். நோய் வாய்ப்பட்டு இருந்த தன் தாயாரைப் பார்க்கச் சென்ற திரு காமராசர் நான் இருந்து என்ன செய்ய முடியும்? நான் நாட்டுப் பணியாற்றப் போகவேண்டும் என்று கூறிவிட்டுச் சென்றார் என்று தெரிவித்தார். நான் அப்போது கூறினேன். தன் தாயை விட, பல சமூகநீதிகளால் நோய்வாய்ப்பட்டிருக்கும் பல தாய்மார்களுக்கு வாழ்வளிக்கச் சென்று இருக்கிறார்.

"அண்ணா இப்போது இல்லை. இனி அவர் தலைமை ஏற்று வழி காட்ட முடியாது. ஆனால் சிறந்த தத்துவங்களை-சித்தாந்தங்களைத் தந்துவிட்டுப் போயிருக்கிறார். அவைகள் இந்த நாட்டுக்கு வழி காட்டியாக இருக்கின்றன.

"மக்கள் நல்வாழ்வில் காமராசர் அதிக அக்கறை வைத்திருந்தார். முதல்வர் பதவியைக்கூட காமராசர் ராஜினாமா செய்வேன் என்று அறிவித்த போது, ராஜினாமா செய்ய வேண்டாம் என்று சொன்ன என்னிடம், பதவி பெரிதல்ல நாடு தான் பெரியது என்று கூறினார்.

**சத்துணவு திட்டம் வெற்றி பெற..**

"காமராசர் ஆட்சிக் காலத்தில் 17 லட்சம் ஏழைக் குழந்தைகளுக்கு இலவச மதிய உணவு வழங்கப்பட்டது. அவர் முழு திருப்தி அடைந்திருப்பாரா என்றால் இல்லை. பள்ளியில் படித்த மூன்றில் ஒரு பங்கினருக்குத் தான் உணவு அளிக்க முடிந்தது. அந்த திட்டத்தில் அரசு 10 காசும் தர வேண்டியிருந்தது. பல யூனியன்கள் வருமானமின்றி இருந்தது. அது எப்படி உணவுக்குக் காசு கொடுக்க முடியும்? அந்தத் திட்டத்தில் ஆசிரியர்கள் சென்று உணவுப்பொருள்களைத் திரட்டி சமைத்துப் போடவேண்டியதிருந்தது. அதில் தவறு இருந்தது. இதைத் திருத்த முயன்றோம்.

''இன்று 63 லட்சம் குழந்தைகளுக்குச்சத்துணவு அளிக்கப்படும் என்று சொல்லி இருக்கிறோம். ஒரு பகுதியில் 13 இலட்சம் என்று கணக்கிடப்பட்டு இருந்தது. இப்போது அது 18 இலட்சமாகி இருக்கிறது. இந்த மாத முடிவில் தான் 63 லட்சம் ஒரு கோடியாக இருக்குமா, மாணவர்கள் 90 இலட்சமாக இருக்குமா என்று தெரியும். சத்துணவுத் திட்டம் வெற்றி பெற பொதுமக்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும்.

"மதிய சத்துணவுத் திட்டம் என வாழ்க்கை அனுபவத்தையொட்டி ஏற்பட்டது.

**இளைஞர்களே முன் வருக!**

''திட்டங்களை நிறைவேற்றுவதற்குள் காலம் போய்விடும் என்பதால் தான் பெருந்தலைவர் காமராசர் ''சிகப்பு நாடா'' முறையைத்தூக்கி எறிந்தார். பொறுப்புகளை எண்ணும்போதெல்லாம் பெரியவர்களை நினைத்துக் கொள்ளவேண்டும். முதியோருக்கு 20 ரூபாய் உதவித் தொகையைப் பெருந்தலைவர் காமராசர்அறிமுகப்படுத்தினார். நாங்கள் வந்து 25 ரூபாய் ஆக்கினோம்.

"தவறுகளைச் சொல்லுங்கள் நடவடிக்கை எடுக்கிறோம். வேடிக்கை மனோபாவத்தைத் தூக்கி எறியுங்கள். பொறுப்பிலிருப்பவர்கள் குறிப்பாக, இளைஞர்கள் முன் வந்தால்தான் வெற்றி பெற முடியும்.''

**மாலை நிகழ்ச்சியில் துவக்கத்தில் பாரதி நூற்றாண்டு விழாத் தனி அலுவலர் திரு. சி. என். கிருஷ்ணபாரதி அவர்கள் அனைவரையும் வரவேற்றார். செய்தி-மக்கள் தொடர்புத் துறைத் துணை இயக்குநர் திரு. வி. டி. வீரப்பன் அவர்கள் நன்றி நவின்றார்.**



# கோழி வளர்ப்பில் குவியும் செல்வம்!

தமிழ்நாடு கோழிவளர்ப்பு நிறுவனம் 1 .7.73ஆம் நாளன்று தமிழ்நாட்டில் கோழி வளர்ப்பினைமேம்படுத்தும்பொருட்டும், வணிக முறையில் அதனை விரிவாக்கும் பொருட்டும், ஓர் அரசுத் துறை நிறுவனமாகத் தொடங்கப்பட்டது.

**நோக்கங்கள்**

இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாவன:—

கோழி, கோழியிலிருந்து பெறப்படும் முட்டை, இறைச்சி மற்றும் இதர துணைப் பொருட்கள், கோழித் தீவனம் ஆகியவற்றின் உற்பத்தி, முறைப்படுத்தல், சேமித்தல் மற்றும் விற்பனை செய்தல்.

கோழி வளர்ப்புத் தொடர்பான் தொழில் நுட்ப ஆலோசனை மற்றும் உதவிகள் அளித்தல்.

கோழி வளர்ப்பு, அதன் துணைப்பொருட்கள் தீவனம், தேவைப்படும் சாதனங்கள் ஆகியவற்றை உருவாக்கி, கோழி வளர்ப்புத் துறையில் உற்பத்தி, விற்பனை, வாகனவசதி, விநியோகம், ஏற்றுமதி, இறக்குமதி ஆகிய பணிகளுக்கு உதவுதல்.

**நடவடிக்கைகள்**

இந்நிறுவனம் தற்போது நான்கு கலவை நிலையங்களில் கோழித் தீவனம் உற்பத்தி செய்கிறது.

வீரிய இன முட்டையிடும் கோழிக் குஞ்சுகள் மற்றும் இறைச்சிக் (ப்ராய்லர்) கோழிக் குஞ்சுகளை இதன் இரண்டு குஞ்சுப் பொரிப்பகங்களில் உற்பத்தி செய்கிறது.

வளர்ப்புப் பண்ணைகள் மற்றும் விரிவாக்க மையங்களை அமைத்து முட்டையிடும் கோழிகளையும் இறைச்சிக் கோழிகளையும் வளர்க்கிறது.

கோழித் தீவனம், முட்டைகள், இறைச்சி ஆகியவைகளை



தன் விற்பனைக் கூடங்கள் மூலமாக விற்பனை செய்து வருகிறது.

இந்நிறுவனத்தின் பணிகள் செயல்களின் தன்மைக்கேற்ப, கீழ்க்கண்டவாறு தொகுத்தளிக்கப்படுகின்றன:

**கோழித் தீவனக் கலவை நிலையங்கள்**

1. நந்தனம் (சென்னை)
2. கொட்டப்பட்டு (திருச்சி)
3. கப்பலூர் (மதுரை)
4. திருப்பூர்(கோவை)

இந்நான்கு தீவனக் கலவை நிலையங்களும் தொழில் மற்றும் விவசாயத் துறையில் கிடைக்கும் துணைப் பொருட்களைக் கொண்டு ஊட்டமுள்ள கோழித் தீவனம் உற்பத்தி செய்கின்றன. தீவனத்திற்காக மூலப் பொருட்களையும், கலவை செய்த தீவனத்தையும், சென்னையில் உள்ள இந்நிறுவனத்தின் பகுத்துணர் ஆய்வகத்தில் கடுமையான சோதனைக்கு உட்படுத்துவதன் வாயிலாக உயர்ந்த தரமுள்ள தீவனத்தை உற்பத்தி செய்கின்றன. தமிழ்நாடு கோழிவளர்ப்பு நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் தீவனம், இந்திய தர நிறுவனத்தின் (IST) முத்திரை வழங்கப் பெற்ற சிறப்பினைக் கொண்டது.

டாப்கோ உருவாக்கிப் பின்பற்றும் விலைக் கொள்கை. கோழித் தீவனம் நியாய விலையில் கிடைக்க வகை செய்கிறது.

அரசுத் துறையில் செயல்பட்டு வரும் சிறப்புக் கால்நடை வளர்ப்புத்திட்டம் மற்றும் பல வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றாலும், சில தனிப்பட்ட விவசாயிகளின் முயற்சியாலும் அதிக அளவில் கோழிப் பண்ணைகள் தொடங்கப்படுவதால் டாப்கோ தீவனத்திற்கான தேவை நாளும் பெருகி வருகின்றது. சென்னை நந்தனத்தில் நிறுவப்பட்டுள்ள பெரிய கலவை இயந்திரமும் மற்ற மாவட்டங்களில் அமைந்துள்ள மூன்று சிறிய இயந்திரமும் மற்ற மாவட்டங்களில் அமைந்துள்ள மூன்று சிறிய கலவை நிலையங்களும் பெருகிவரும் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றன.

**விற்பனை மையங்கள்**

இந்நிறுவனம் தன்னுடைய கீழ்க்கண்ட விற்பனை மையங்கள் மற்றும் அவற்றோடு இணைந்த விற்பனை நிலையங்கள் மூலமாக (பத்து விற்பனை நிலையம், சிற்றுண்டிச்சாலை உட்பட) முட்டை, தரமான கோழி இறைச்சி ஆகியவற்றை விற்பனை செய்து வருகிறது.

சிறப்புக் கால்நடை வளர்ச்சித் திட்ட விவசாயிகளிடமிருந்து 30.9.81 வரை முட்டை ஒன்று 33 காசு வீதம் கொள்முதல் செய்யப்பட்டது. 1.10.81 முதல் ஒரு முட்டை 36 காசு வீதம் கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்கு உடனடி விற்பனை வாய்ப்பு கிடைப்பதோடு டாப்கோவின் முட்டை விநியோகப் பணியும் தடையின்றித் தொடர்கிறது. இத்திட்டம் தற்போது செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, சேலம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் (சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் கீழ்) செயல்படுத்தப்படுகிறது. இம்மாவட்டங்களில் இத்திட்டத்தின் கீழ் உற்பத்தியாகும் பொருட்களை டாப்கோ விற்பனை செய்கிறது.

**முட்டை மற்றும் இறைச்சி விற்பனை**

டாப்கோவின் விற்பனை மையங்கள் நிறுவப்படாத இடங்களில் உள்ள பொது மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்ட விரிவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் வரும் ஆண்டில் விற்பனை நிலையங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள விற்பனை நிலையங்களை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**அரசூர் (கோவை மாவட்டம்) குஞ்சு பொரிப்பகம்**

வீரிய இனக் குஞ்சுகளை உற்பத்தி செய்வது டாப்கோவின் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாகும். அரசூரில் உள்ள குஞ்சு பொரிப்பகம் வியாபார நோக்குடைய வீரிய இனக் குஞ்சுகளை அரசுத்துறையில் உற்பத்தி செய்வதில் முதன்மையாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டில் வீரிய இனக் குஞ்சுகளின் அறிமுகம் கோழி வளர்ப்பினை வியாபார நோக்குடைய ஒன்றாக மாற்றியுள்ளது. குறிப்பாக சேலம், ஈரோடு, செங்கல்பட்டு, மதுரை மற்றும் திருச்சியில் கோழி வளர்ப்பு வணிகத் தன்மையுடையதாக அமைந்துள்ளது. விவசாயிகள், அரசு நிறைவேற்றி வரும் சிறப்புக் கால்நடை மேம்பாட்டுத் திட்டம், சத்துணவு வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் துணை கொண்டு வியாபார நோக்குடன் கோழிப் பண்ணைகளை நடத்தி தங்கள் பொருளாதார நிலையினை உயர்த்திக் கொள்வதில் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அரசூரில் உள்ள குஞ்சு பொரிப்பகம் 'பாப்காப்' ரகத் தாயினக் கோழிகளையும் 'காப்' இன இறைச்சிக் கோழிகளையும் வளர்த்து வருகிறது. இப் புதிய ரகம் கோழி வளர்ப்போரால் பெரிதும் விரும்பப்படுவதால் இதற்கான தேவை நாளும் வளர்ந்து வருகிறது.

**கப்பலூர் (மதுரை மாவட்டம்) குஞ்சு பொரிப்பகத்தை வணிகமயமாக்குதல்:**

கப்பலூரில் உள்ள குஞ்சு பொரிப்பகம் 1978-79 வரை தூய இனக் குஞ்சுகளையே உற்பத்தி செய்து வந்தது. குறைந்த உற்பத்தித் திறன் கொண்ட தூய இனக்கோழிகளின் தேவை பொது மக்களிடையே மிகக் குறைந்த அளவு இருந்தமையே மேற்கூறப்பட்ட ஆண்டுகளில் இக்குஞ்சு பொரிப்பகம் நட்டத்தில் இயங்கி வரக் காரணமாக அமைந்திருந்தது. வணிக நோக்குடையதாகவும் நட்டத்தில் இயங்காமல் இருக்கவும், வீரிய இனக் கோழிக் குஞ்சுகளைப் பொதுமக்களுக்கு அளிக்கவும் இப்பொரிப்பகத்தை வணிக நோக்குடையதாக மாற்றி அமைக்கத் திட்டமிடப்பட்டது.

**வளர்ப்புப் பண்ணை மற்றும் விரிவாக்க மையங்கள்**

இந்நிறுவனத்தின் கீழ் இயங்கும் வளர்ப்புப் பண்ணை மற்றும் விரிவாக்க மையங்கள் முட்டையிடும் கோழிகளையும், இறைச்சியினக் கோழிகளையும் வளர்த்து பொதுமக்களுக்கும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கும், உதாரணமாக, சத்துணவுத் திட்டம். சிறப்புக் கால்நடைத் திட்டம் ஆகியவற்றிற்கும் வழங்கி வருகிறது.

இவ்வளர்ப்புப் பண்ணைகள் கீழ்க்கண்ட இடங்களில் அமைந்துள்ளன:

1. கொட்டப்பட்டு (திருச்சி மாவட்டம்)
2. தி கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்)
3. பெருந்துரை (கோயம்புத்தூர் மாவட்டம்)
4. சேஷன்சாவடி (சேலம் மாவட்டம்)
5. செங்கல்பட்டு (செங்கல்பட்டு மாவட்டம்)

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் தொடங்கவிருக்கும் பல்வேறு விரிவாக்கத் திட்டங்களுக்குத் தேவையான முட்டை கோழிக் குஞ்சுகள் வழங்குவதற்காக, வளர்ப்புப் பண்ணைகளின் வளர்ப்புத்திறனை விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**டாப்கோ நிறைவேற்றும் திட்டப் பணிகள் சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டம் (கோழிப் பெருக்கம்)**

சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் குறிக்கோள் (கோழி பெருக்கம்). கால்நடை வாயிலாகப் பெறப்படும் புரதச்சத்து மிக்க உணவு வகைகளை முட்டை, கோழி இறைச்சி ஆகியவற்றைப் பெருக்குவதாகும். இத்திட்டம் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் கிராம மக்களுக்கு உற்பத்தி திறனோடு கூடிய வேலை வாய்ப்பினை அளிப்பதோடு, விவசாயத் தொழிலாளர்கள், நடுத்தர மற்றும் சிறு விவசாயிகள் பெருமளவில் மேற்கொள்ளும் வகையில் பல சிறப்பம்சங்களைக் கொண்டதாகும்.

மேற்கூறிய குறிக்கோள்களை அடையும் முகத்தான் இத்திட்டத்தை செங்கல்பட்டு, வடஆர்க்காடு, சேலம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் இந்நிறுவனம் நிறைவேற்றி வருகிறது.

1976-77 ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுகளில் 100 கோழிகள்

கொண்ட 6,000 கோழிப் பண்ணைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டது. 1976-77ல் தொடங்கப்பட வேண்டிய இத்திட்டம் 1977-78ல், தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அமைந்த கோழிப்பண்ணைகளுக்கு வணிக வங்கிகள் நிதியுதவி அளிக்கத் தயங்கியதன் விளைவாக 1977-78ல் இத்திட்டம் எதிர்பார்த்த அளவு வெற்றி பெறவில்லை. பெரும் முயற்சிக்குப் பின்னரே இத்திட்டம் வங்கிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு 1978-79 முதல் வளர்ச்சிக்கான ஆரம்ப வளர்ச்சி காண ஆரம்பித்தது.

கோழி வளர்ப்புத் துறையில் மொத்த வளர்ச்சியைப் புதியகண்ணோட்டத்தோடு அணுகி, தற்போது கீழே கண்டவாறு, புதுத் திட்டமொன்று தீட்டப்பட்டுள்ளது:

100 கோழிகள் கொண்ட 1,200 பண்ணைகளை, செங்கல்பட்டு, மதுரை, வட ஆர்க்காடு மற்றும் சேலத்தில் இவ்வாண்டில் தொடங்குதல்.

முதன் முறையாகத் தொடங்கும் பண்ணைகளுக்கு மான்ய விலையில் ஒரு கிலோ தீவனம் ரூ.1.30 விலையில் அளித்தல். தொடர்ந்து வரும் பண்ணைகளுக்கு 1 கிலோ தீவனம் ரூ. 1.40 விலையில் அளித்தல்.

மான்ய விலைக்கும் விற்பனை விலைக்கும் உள்ள வித்தியாசத்தை டாப்கோ சிறப்புக் கால்நடை வளர்ப்புத் (கோழி வளர்ப்பு) திட்டத்தின் கீழ் மான்யமாக பெறுதல்.

இப்புதிய திட்ட அறிக்கை 17.11.81 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தில், மத்திய அரசின் பிரதிநிதியோடு விவாதிக்கப்பட்டது. இதற்கிடையே மத்திய அரசு அதிகாரிகளோடு நடைபெற்ற விவாதங்களிலிருந்து, டாப்கோவிற்கு தீவன மான்யத் தொகை இனி கொள்கை அளவில் கொடுக்கப்பட மாட்டாது என அறியப்படுகிறது. இந்நிலையில், தீவனவிலை ...தியாசத்தினால் ஏற்படும் ...வை டாப்கோ ஏற்பதே ...வழி என்றபோதும், டாப்...வின் பொருளாதார நிலை ...செலவை ஏற்றுக்கொள்ள ...ம் தரவில்லை. இந்நிறுவனத் ... நிர்வாகக் குழுமம் அரசு ...திய மான்யத் தொகை ...க்க முன் வரும்வரை மேற்கொண்டு புதிய கோழிப்பண்ணைகளைத் தொடங்க வேண்டாம் என அறிவுரை வழங்கியுள்ளது.

டாப்கோ தற்போதுள்ள திட்டங்களையும் மற்றும் விரிவாக்கத் திட்டங்களையும் இவ்வாண்டு திறம்படச் செயல்படுத்த ரூ. 48 இலட்சங்களை நிதி உதவியாகக் கோரியுள்ளது. தீவன விலை வித்தியாசத்தை டாப்கோவிற்கு மான்யமாக வழங்குவது பற்றிய முடிவான கருத்து இன்னும் வரப்பெறாததால் நடப்பாண்டில் மேலும் புதிய பண்ணைகள் இன்னும் நிறுவப்படவில்லை.

## 1981-82ஆம் ஆண்டின் திட்டங்கள்

1981-82ஆம் ஆண்டு முந்தைய ஆண்டுகளில் நிறுவப்பட்டு, தொடர்ந்து வரும் 1000 கோழிப் பண்ணைகளில் உள்ள கழிக்கப்பட்ட கோழிகளுக்குப் பதிலாகப் புதிய கோழிக் குஞ்சுகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## டாப்கோவினால் திட்டமிடப்பட்டு, கிராமப்புற ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் :

ஒவ்வொன்றும் 100 இறைச்சிக் கோழிகளைக் கொண்ட 158 கோழிப் பண்ணைகளை மாவட்டங்களில் உருவாக்கத் தற்போது திட்டமிடப்பட்டுள்ளது. செங்கல்பட்டு மாவட்டத்தில் 100 பண்ணைகளும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் 58பண்ணைகளும், 1981-82ஆம் ஆண்டு தொடங்கப்பட உள்ளன. இத்திட்டம் அரசினால் அங்கீகரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரிகளால் நடைமுறைப் படுத்த உள்ளது.

டாப்கோ, கோழிப்பண்ணைகள் அமைக்க தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கி, கோழிக் குஞ்சுகள், கோழித் தீவனம் ஆகியவற்றை அளித்து, அவற்றோடு விற்பனைக்குத் தேவையான உதவிகளையும் செய்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பண்ணையும் 100கோழிகளைக் கொண்ட பத்து தொடர் பிரிவுகளை வளர்த்து ஆண்டிற்கு 1,000 இறைச்சிக் கோழிகளை டாப்கோவிற்கு இறைச்சி விற்பனைக்காக வழங்கி வரும். இத்திட்டத்தில் ஈடுபடும் சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், விசாயத் தொழிலாளர்கள் அனைவரும் மாதம் ரூ.1101 அதிக வருமானம் பெறுவர். இந்த வருமான உயர்வு அவர்கள் வாழ்க்கைத் தரத்தை நிச்சயம் உயர்த்தும்.

## உருவாகும் புதிய திட்டங்கள்

### உலக வங்கி உதவியுடன் கோழி வளர்ப்புத் திட்டம்

உலக வங்கியின் உதவியோடு முட்டை கோழி மற்றும் இறைச்சிக் கோழிப் பண்ணைகள் நிறுவி கோழி வளர்ப்பினை மேம்படுத்தும் திட்டமொன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

சென்னை அருகே 27.91 இலட்சம் செலவில் ஒரு வாத்துப் பண்ணையமைக்கும் டாப்கோவின் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

## சிறப்புச் சாதனைகள்

தமிழக அரசு, கோழி வளர்ப்பிற்கு ஊக்கமளிக்கும் பொருட்டு உயிருள்ள கோழிகள் விற்பனைக்கு ஏப்ரல் 1979ல் இருந்து விற்பனை வரி மற்றும் அதன் மீது விதிக்கும் உபரிக்கட்டணம் ஆகியவற்றிலிருந்து விலக்கு அளித்துள்ளது. தீவன விற்பனைக்கும் இது போன்று விலக்கு அளிப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

கோழிப் பண்ணைகள் பயன்படுத்தும் மின்சாரத்திற்குக் குறைந்த மின் கட்டணச்சலுகை தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளது.

சிறப்புக் கால்நடை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கோழிப் பண்ணைகளுக்குக் காப்புறுதி வழங்கும் பணி தொடர்ந்து செயல் பட்டு வருகிறது.

## இந்திய இஞ்சி

உலகத்திலேயே தரமுள்ள இஞ்சி உற்பத்தி செய்யப்படுவது இந்தியாவில் மட்டுமே. இந்திய இஞ்சி ரகத்தின் மணமும், தரமும் இதர எந்த நாடுகளையும் விட உயர்வானது என்று கருதப்படுகின்றது.

பல நூற்றாண்டுக் காலமாக இந்தியாவில இஞ்சி பயிரிடப்படுவது இதற்கு ஒரு காரணம் என்று கூறலாம். எல்லா நாடுகளிலும் இந்திய இஞ்சிக்கு வரவேற்பு உள்ளது. மருந்துகள் தயாரிப்பில் இஞ்சியின் பங்கு, நாம் அனைவரும் நன்கறிந்த ஒன்றாகும். இந்தியா இருபது நாடுகளுக்கு இஞ்சியை ஏற்றுமதி செய்து வருகின்றது. 1970-71-ல் இஞ்சி ஏற்றுமதி மதிப்பு ரூ. 26 மில்லியன்

# சேலம் மாவட்டத்தில் சிறக்கும் தொழில் வளம்



தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்களில் சிறுதொழில் வளர்ச்சி எந்த அளவுக்கு மேம்பட்டிருக்கிறது என்பதை நேரில் கண்டறிய அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்ட பத்திரிகையாளர் சுற்றுலாவில் நாமும் பங்கேற்றோம்.

சேலம், வட ஆர்க்காடு, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்தது இந்தப் பயன்மிகு சுற்றுலா. அந்த மாவட்டங்களிலெல்லாம் சிறுதொழில் வளர்ச்சி பெற்றுவரும் சிறப்பு நம்மை வியப்படையச் செய்வதாக இருந்தது.

ஒரு நாட்டின் வளர்ச்சி அவ்வந்நாட்டின் தொழில் வளர்ச்சியைப் பொருத்தே அமைகிறது என்பர் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர். அந்த வகையில் பார்ப்போமானால் ஆங்காங்கே நாம் கண்ட தொழில் வளம், குறுகிய கால இடைவெளிக்குள் அப்பாலே இந்த நாட்டுக் கெந்த நாடு ஈடு' என நம்மை நெஞ்சு நிமிர்த்தி கேட்கவைக்கும் என்பது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

பெரிய தொழில்கள் பெற்றிடும் ஏற்றத்தைச் சார்ந்தே சிறிய தொழில்களின் சிறப்பும் அமையும். இதற்கோர் எடுத்துக்காட்டு சேலம் மாவட்டம்.

**—இல. இராசேந்திரன்**

சேலம் உருக்காலை அங்கே அமைந்தாலும் அமைந்தது, மாவட்டம் முழுவதும் சிறு தொழில்கள் செழித்தோங்கி வளரத்தொடங்கிவிட்டன. சேலம் மாவட்டமக்களெல்லாம் சிற்றெறும்புகளாகி விட்டிருக்கிறார்கள் ஓயாத உழைப்பில்... சுறுசுறுப்பில்.

**கயிறு திரித்தல்:**

சேலம் மாவட்டச்சிறுதொழில் வளம்காண நாம் பயணம் மேற்கொள்கிறோம். மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு. பால்ராஜ், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. கிருஷ்ணன் இருவரும் முதலாவதாக நம்மைக் கயிறு திரிக்கும் தொழிற்சாலைக்கு அழைத்துச் செல்லுகின்றனர்.

சேலம் மாவட்டத்தில் சிறப்புற்று வரும் சிறுதொழில்களில் முக்கியத்துவம் வாய்ந்தது கயிறு திரிக்கும் தொழில் என்பது குறிப்பிடத்தக்கது.

மாமாங்கம் என்ற பகுதியில் நாம் சென்ற அந்தக் கயிறு திரிக்கும் தொழிற்சாலையில், அத்தொழில் பிரிவுக்கான மாவட்ட ஆய்வாளர் திரு. தனபால் நம்மை வரவேற்று அத்தொழில் பற்றிய விவரங்களை விளக்குகிறார்.

சேலம் மாவட்டத்தில் கயிறு திரிக்கும் யூனிட்டுகள் 798 உள்ளன. அத்தனையிலும்1811 கயிறு திரிக்கும் சர்க்காக்கள் உள்ளன. ஆண்டு முழுவதும் நடக்கும் இத்தொழில் ஏற்றம்பெற 15 ஆயிரம் டன் மூலப்பொருள் தேவைப்படுகிறது. இந்தத் தேவைக்கேற்ப சேலம் மாவட்டத்தில் ஏழாயிரம் ஏகரில் வளம்பெற்று வான்தொட வளர்ந்திருக்கிறது தென்னை.

மாவட்டம் முழுவதிலுமுள்ள அத்தனைக் கயிறு திரிக்கும் தொழிற்சாலைகளிலும் 5,400 பேர் ஆண்களும் பெண்களுமாகப் பணிபுரிகிறார்கள்.

''ஒரு கயிறு திரிக்கும் சர்க்காவில் மூன்றுபேர் வேலை பார்க்க வேண்டியிருக்கும். அவர்கள் மூவருக்கும் ஒரு நாள் ஊதியம் பதினைந்து ரூபாயிலிருந்து இருபது ரூபாய் வரை கிட்டும்'' என்றார் திரு. தனபால்.

**கயிறு திரிக்கும் பொறிகளில் சிறுவர் சிறுமியரெல்லாம் வேலை பார்க்கவே-''இதென்ன குடும்பம் குடும்பமாக வேலை பார்க்கிறார்களே; கொத்தடிமைத் தொழில் போலவா இது?'' என்றார் ஒரு பத்திரிகையாளர்.**

**''நிச்சயமாக இல்லை. நாங்கள் யாரையும் குடும்பத்தோடு வந்து பணிபுரிய வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதில்லை; முழு ஊதியமும் தம் குடும்பத்திற்கே சேரவேண்டும் என்ற எண்ணத்தில் அவர்கள் தங்கள் பிள்ளைகளையும் கொண்டுவந்து இத்தொழிலில் ஈடுபடுத்தினால் அதற்கு நாங்களா பொறுப்பு?'' என்றார் துணை ஆய்வாளர்.**

காலை ஐந்து மணிக்கெல்லாம் தொடங்கும் ஒவ்வொருவரின் பணியும் மாலை மூன்று மணிக்கெல்லாம் முடிவடைந்து விடுகிறது.

இப்பகுதியில், கூட்டுறவு முறையில் இயங்கும் கயிறுதிரிக்கும் சொஸைடிகள் 9 உள்ளன. 120 பேர் இதில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். இவர்களுக்கு ரூ. 30 தரப்படுகிறது.

ஆண்டொன்றுக்குச் சுமார்13 ஆயிரம் டன் கயிறு வட இந்தியாவுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகிற அளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ள கயிறுதிரிக்கும் சிறு தொழிலுக்கு சேலம் மாவட்டத்திற்கு மட்டும் தமிழக அரசின் பங்கு மூலதனம் பத்தாயிரம் ரூபாயாகும்.

திரு முருகேசன் என்பவருக்குச் சொந்தமான அந்தக் கயிறுதிரிக்கும் தொழிற்சாலையினின்று புறப்பட்டு, கருப்பூரில் உள்ள 'சிவராஜ் கயிறு தொழிற்சாலைக்கு' நாம் போய்ச் சேருகிறோம்.

இத் தொழிலுக்கு மூலப்பொருள் தயாராகும் இடம் அது!

அங்கே தேங்காய் மட்டைகளை ஊறவைத்து, மின்பொறியில் கொடுத்து சக்கையாக்கி நார் நாராக்கும் பணியில் இளைஞர்களும் இளம்பெண்களுமாக 30 பேர் ஈடுபட்டுள்ளனர். ஊதிய விகிதம் அங்குள்ள அளவே இங்கும். ஆனால் ஒரு வேறுபாடு. பெரியவர்களுக்கு மட்டும் ஏழு ரூபாய். சிறுதொழில் தானே? வரவுக்கேற்ற செலவு; உழைப்புக்கேற்ற ஊதியம்.

பொங்கலன்று மட்டும் ஒவ்வொருவருக்கும் எவர்சில்வர் டம்ளர், தட்டு போன்ற பரிசுப் பொருட்கள் தரப்படுவதுண்டாம். அங்கே, கூந்தலெல்லாம் தேங்காய் நாராக நின்ற ஒரு அம்மையார் இதை மகிழ்வோடு தெரிவித்தார்.

**"விரைவிலேயே நம்முடைய அரசால் இத்தொழிலின் ஏற்றத்திற்காக மாஸ்டர் பிளான் செய்யப்படவிருக்கிறது. அதற்குப்பிறகு கயிறு தொடர்பான இப்படிப்பட்ட தொழில்கள் எல்லாமே கூட்டுறவு சொஸைடியின் கீழ் கொண்டுவரப்பட்டு விடும்" எனக் கூறினார் திரு தனபால்.**

## நட்டு தொழிற்சாலை

அடுத்து நமது பயணம் கே. கே. இன்டஸ்ட்ரீஸ்ஸில் போய் முடிகிறது.

இரும்புக் கம்பிகள் தாயரித்தல், நட்டு, ஸ்க்ரு போன்றவற்றைப் பல ரகங்களில் உருவாக்கல் ஆகியவற்றிற்குச் சிறந்த பெயர்பெற்ற நிறுவனம் இது என்றார்கள்.

'ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா' தந்த கடனில் துவக்கப்பட்ட இத்தொழிற்சாலையின் ஊழியர்களெல்லாம் தங்கள் தொழிலில் உற்சாகத்தோடு ஈடுபட்டிருந்தார்கள்.

''தொழில் லாபகரமாக நடக்கிறதா?'' என்று அவ்வமைப்பின் ஒரு பங்குதாரரான திரு. சக்ரபாணியைக் கேட்கிறோம்.

''நல்லாவே நடக்குது. ஆனா.. ஒரே ஒரு குறைங்க. எங்க வேகத்துக்குத் தகுந்தாப்பல மூலப்பொருள் கிடைக்கலே. மேலே எழுதியிருக்கோம்; சீக்கிரமா கெடச்சிரும்கிற நம்பிக்கை இருக்கு!'' என்கிறார் அவர்.

''நம்பினோர் கெடுவதில்லை'' என்று சொல்லி அவரையும் நம்மோடு சேர்ந்து சிரிக்கவைக்கிறார் ஒரு செய்தியாளர்.

## மின் விளக்குகள்

'பத்மா மினியேச்சர் லாம்ப்ஸ்' என்ற தொழிலகத்திற்குச் செல்கிறோம்.

மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் போன்றவற்றிற்கான சிறு பல்புகள் செய்யும்தொழிற்சாலை இது. ஏராளமான பெண்களே இங்கு பணிபுரிகிறார்கள்.

மேற்பார்வையிடும் பணியில் மட்டுமே ஆண்கள்.

இட்டலித் தட்டு போன்ற எந்திர அமைப்பில் பல்பின் கீழ்ப் பாகம் மட்டும் சுற்றிச் சுற்றி வருவது, இரண்டு பெண்கள்

ஜவ்வரிசித் தொழிற்கூடம்





*சிறிய மின்சார 'பல்புகள் தயாராகின்றன*

அதில் நொடிப்பொழுதில் மெல்லிய மின் கம்பிகளை இணைப்பது, பற்றவைப்பது, குளிரச் செய்வது, உருவான முழு பல்பை உடனுக்குடன் எடுத்து வைப்பது. சோதித்துப் பார்ப்பது போன்ற 'பல்பு' சம்பந்தப்பட்ட பல்வேறு பணிகளில் கவனம் சிதறாமல் ஈடுபடுவது போன்ற அந்த வேலை நுணுக்கங்களைப் பார்க்கும்போது -இதற்கேற்ற பொறுமை ஆண்களுக்கிருக்காது என்பதே பெண்களே அதிகம் இங்கு சேர்க்கப்பட்டுருப்பதன் நோக்கமாக இருக்கும் என்பதை நமக்குத் தெளிவாக்குகிறது.

'பத்மா மினியேச்சர் லாம்ப்ஸ்' நிர்வாகப் பங்குதாரரின் அனுமதியோடு அங்கு பணியாற்றும் செல்வி ஓமனாவைப் பேட்டி காண்கிறோம் நாம்.

''சேர்ந்த புதுசுல எனக்கு நூறு ரூவா தான் சம்பளம். இப்ப-மூணு வருசத்துக்கப்பறம் முந்நூறு ரூபா வாங்கறேன். புதுசா சேர்றவங்களுக்கு இப்பவும் நூறு ரூவா தான். ஏன்னா.. வேலை கத்துக்கிற புதுசானதா'ல வேஸ்ட்டேஜ்நெறயா இருக்கும்பாருங்க; அதாலதான். தீபாவளிக்கி எங்களுக்கெல்லாம் ஒரு மாச போனஸ் தராங்க...''

—இப்படி நாம் கேட்டகேள்விகளுக்கெல்லாம் 'பட்பட்'டென்று பதிலை வெடித்தார் செல்வி ஓமனா.

**''அரசு உதவிகள் தாமதமில்லாமல் கிடைச்சதே எங்கள் தொழிற்சாலை வளர்ச்சிக்கு முக்கியக் காரணம்'' என்று முகமெல்லாம் சிரிப்பாகச் சொன்னார் திரு. ஆர். எஸ். இராமநாதன் - அவ்வமைப்பின் நிர்வாகப் பங்குதாரர்.**

## மாக்னசைட்

சேலத்திலிருந்து ஏழாவது கிலோ மீட்டரில் 'மாக்னசைட்' தாதுப் பொருள் வெட்டியெடுக்கப்படும் மலை வெளிக்கு நாம் அழைத்துச் செல்லப்படுகிறோம்.

தமிழ்நாடு அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஒருகோடி ரூபாய் வருமானம் அளிக்கும் சேலம் மாக்னசைட் லிமிடெட் நிறுவனம் 1978ஆம் ஆண்டில் தமிழக அரசால் துவக்கப்பட்டதாகும்.

இப்போது இந்த நிறுவனம் பத்தாயிரம் டன் மாக்னசைட் தாதுப் பொருளைத் தோண்டியெடுத்து வருகிறது.

வேட்டுவைத்து மலைப்பாறைகளைப் பிளந்து - அல்லது குடைந்து வெள்ளை வெளேர் என்றிருக்கும் மாக்னசைட் தாது எடுக்கப்படுகிறது. ஏர்க்காடு மலைப்பகுதியை ஒட்டியுள்ள இப்பகுதியில் இதற்கென அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலையிலும், சுற்றுப் புறத்திலும் புகைமூட்டமும், புழுதிப்படலமும் ஏற்பட்டது நாங்கள் சென்றபோது.

''இதனால் தொழிலாளர்கள் உடல் நலம்பாதிக்கப்படாதா'' என்று கேட்டார் ஒரு செய்தியாளர்.

''நிச்சயம் பாதிக்கப்படாது. ஏனென்றால், ஒரு மணிநேரத்துக்கு ஒரு முறை தண்ணீர்வண்டி மூலம் வண்டிப்பாதை முழுதும் நீர் தெளிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதனால் சுவாசத்தில் புழுதிசேர வாய்ப்பில்லை. தவிரவும் இங்கு பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இலவச மருத்துவ வசதி எப்போதும் உண்டு'' என்றார் நிர்வாகப் பிரிவு உயர் அதிகாரி திரு. எம். சண்முகம்.

**இத் தொழில் தனியார் வசமிருந்தபோது ரூ 300 மட்டுமே சம்பளமாகப் பெற்ற ஒரு தொழிலாளர் இப்போது ரூ 500 பெறுகிறார். 20 சதவித போனஸ் தரப்படுகிறது. அங்கே இன்னொரு அதிசயம்! அங்கு வைக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கான சிற்றுண்டி விடுதியில் தேநீர் 10 காசு; சாப்பாடு ஒரு ரூபாய்; உப்புமா 20 காசு.**

600 ஏக்கர் நிலப்பரப்பில் நடைபெற்று வரும் இந்தப் பணியில் மொத்தத்தில் 2,700 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இன்னும் 80 ஆண்டுக் காலத்திற்குத் தோண்டியெடுக்கத்தக்க மாக்னசைட் தாது இப்பகுதியில் இருப்பதாக நமக்குத் தெரிவிக்கப்பட்டது.

நிர்வாக இயக்குநர் திரு சுப்பிரமணியத்தை நாம் சந்திக்க இயலாவிட்டாலும் அவருடைய கவனிப்பை அங்கே ஒவ்வொரு பகுதியிலும் நம்மால் உணர முடிந்தது.

''மாக்னசைட் தாது, நவீன வகை ஓடு செய்வதற்காகவும், தரைப்பூச்சுக்காகவும் மேல் விதான மினுமினுப்புக்காகவும் மட்டுமில்லாமல் கால்நடைகளின் உணவுப் பொருளுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது'' என்று திரு எம். சண்முகம் சொன்னது நம்மை வியக்கச் செய்தது.

இதற்காக ஏறத்தாழ 500 டன் மாக்னசைட் தாது இங்கிலாந்து நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதாம்.

''தனியார் நிர்வாகத்தில் இருந்

ததை விட எல்லாவகையிலும் இப்போது நாங்கள் அரசு நிர்வாகத்தில் மிகவும் திருப்தியாகவும் நிம்மதியாகவும் இருக்கிறோம்'' என்று அங்கே பணி புரிவோர் ஒட்டு மொத்தமாகச் சொன்னார்கள்.

இந்தப் பணியின் ஏற்றம் கருதி அரசு திட்டமிட்டுள்ள 80 கோடி ரூபாய் மும்முனைத் திட்டமொன்று இன்னும் இரண்டாண்டுக் காலத்தில் செயல்படுத்தப்படவிருக்கிறது.

## ஜவ்வரிசித் தொழில்

அன்னதானப் பட்டியில் உள்ள மீனாட்சி ஜவ்வரிசி, குழல் அப்பளம் செய்யும் தொழிற்கூடத்திற்குச் செல்கிறோம். மாவட்டத் தொழில் மைய மேலாளர் பால கிருஷ்ணன் நமக்கு அந்தச் சிறு தொழில் வளர்ச்சி பற்றி விவரிக்கிறார்.

தமிழ்நாடு முழுவதும் இப்படி ஜவ்வரிசி தயாரிக்கும் தொழிற்கூடங்கள் 700 இருக்கின்றன. அதில் சேலம் மாவட்டத்தில் மட்டும் சுமார் 500 யூனிட்டுகள் உள்ளன. இதற்கு அந்த மாவட்டத் தட்பவெப்ப நிலை பெரிதும் வசதியாக இருப்பதே முக்கியக் காரணம்.

முன்பெல்லாம் ஜவ்வரிசிக்கு விலை நிர்ணயம் செய்வதென்பது குறிப்பிட்ட ஏழெட்டுப் பேர் கையில்தான் இருந்தது. 1981 நவம்பரில் இதற்காக அரசு மூலம் ஒரு சொஸைடி அமைக்கப்பட்ட பின்னாலேதான் இந்த நிலை மாறியது. இந்த சொஸைடியில் இப்போது 100 பேர் உறுப்பினர்கள்.

அப்போதெல்லாம் 90 கிலோ கிராம் எடையுள்ள ஜவ்வரிசி மூட்டையொன்று இருநூறு முந்நூறு ரூபாய்க்குத்தான் போய்க்கொண்டிருந்தது. இப்போது சொஸைடி உருவானபிறகு அதே மூட்டையின் விலை 360 ரூபாய்க்கு விலை போகிறது. வியாபாரிகளுக்கு இதன் மூலம் நல்ல லாபம் கிட்டும்.

குழல் அப்பளம் (வேடீஸ் ஃபிங்கர்) செய்யும் தொழிலில் இப்பகுதியில் ஆர்வத்தோடு அதிகம் பேர் பங்கு கொள்கிறார்கள்.

இந்தத் தொழிற்சாலையின் ஒவ்வொரு யூனிட்டிலும் ஐம்பதிலிருந்து அறுபது பேர் வரை பணியாற்றுகிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். அதிலும் குறிப்பாக 80 சதவீதத்திற்கு மேலானோர் பெண்களாகவே இருக்கின்றனர்.

இந்தத் தொழிலுக்காகத் தென்னார்க்காடு, புதுவை, திருச்சி போன்ற பல்வேறு மாவட்டங்களிடமிருந்து சேலம் மாவட்டத்திற்கு மரவல்லிக் கிழங்கு வருகிறது.

ஒரு கூடை மரவள்ளிக்கிழங்கின் தோலைச் சீவிச் சுத்தம்பண்ண 40 காசு எனக் கூலி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இத்தொழிற்கூடத்தில். ''நாள் ஒன்றுக்குப் பத்துப் பதினொரு கூடைக் கிழங்கை எங்களால் சீவ முடிகிறது.'' என்றார் அங்கே கிழங்கு மலையின் மையத்தின் அமர்ந்திருந்த ஒரு பெரியவர்.

குழல் அப்பளம் செய்யும் பிரிவில் ஒரு கிலோவுக்கு 25 காசு என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒருவரால், ஒரு நாளைக்கு 100 கிலோ வரை செய்யமுடியும் என்கிறார்கள்.

ஜவ்வரிசியை வறுக்கும் பிரிவில் பணியாற்றிய செல்வி, ராணி என்பவரை விசாரித்தபோது ''போனஸ்செல்லாம் எங்களுக்கு உண்டு'' என்று சொன்னதோடு ''எங்கள்ல யாருக்காச்சும் கல்யாணம்னா இந்தக் கம்பெனிக்காரங்க அம்பது நூறுன்னுமொய் எழுதுவாங்களே'' என்று உற்சாகத்தோடு தெரிவித்தார்.

**தருமபுரி, தென்னார்க்காடு, கோவை போன்ற இடங்களிலும் இப்படிப்பட்ட ஜவ்வரிசித் தொழிற்கூடங்கள் உண்டு என்றாலும் சேலம் மாவட்டத் தொழிற்கூடங்களிலேதான் ஆண்டுதோறும் 6000 மூட்டைகள் ஜவ்வரிசி மாவும் தயாரிக்கப்படுகிறது.**

**இங்கே தயாராகும் ஜவ்வரிசி பெரும்பாலும் கல்கத்தாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.**



கயிறு திரிக்கும் தொழிற்சாலை

இப்படிப்பட்ட ஆலைகள் ஆண்டொன்றுக்கு 2.5 லட்சம் டன் எடையுள்ள ஜவ்வரிசியும் மாவும் தயாரிக்கின்றன. இவற்றின் மதிப்பு ஐம்பது கோடி ரூபாயாகும்.

இந்த விவரங்களைச் சேகரித்துக்கொண்டு நாம் அங்கிருந்து புறப்பட்டு, பனம்பட்டியிலுள்ள 'அன்னை சேகர' பாக்டரிக்குச் செல்கிறோம். கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. அங்கமுத்து மூலம் நமக்கு இச் சிறுதொழில் தொடர்பான வேறுசில விவரங்கள் கிடைக்கின்றன.



அரசு மாக்னசைட் தொழிற்சாலை

ஜவ்வரிசி தயாரிக்கும் கூட்டுறவுச்சங்க உறுப்பினர்களின் பங்கீட்டுத் தொகை ரூ. 8 லட்சத்து 30 ஆயிரம்.

தமிழக அரசு, இத்தொழில் வளர்ச்சி கருதி 11 சதவீத வட்டியில் பத்து லட்சம் ரூபாயைக் கடனாக வழங்கியுள்ளது.

இது தவிர, சேலம் மத்தியக் கூட்டுறவு வங்கி ரூ. 50 லட்சமும், பஞ்சாப் நேஷனல் பாங்க் ரூ. 50 இலட்சமும் கடனாக வழங்கியுள்ளன.

''இத்தொழிலானது இன்னும் வளர வேண்டுமானால், எங்களுக்குத் தேவைப்படும் கருவிகள் உபகரணங்கள் ஆகியவற்றைக் குறைந்தவிலையில் அளிக்கவேண்டும். இது பற்றி அரசுக்கு நாங்கள் எழுதிக்கேட்டிருக்கிறோம்'' என்றார் திரு ஏ. அங்கமுத்து.

## தீப்பெட்டி தயாரிப்பு

சேலம் மாவட்டத்திலே மட்டும் பல்வேறு வகைச்சிறுதொழில்களுக்குமான கூட்டுறவுச் சங்கங்கள் 52 இருக்கின்றன.

சேலம் மாவட்டத் தொழில் மையத்தின் திட்டப்படி, பொன்னாச்சியில் ஒரு லட்சத்து 80ஆயிரம் ரூபாய் செலவில் கிராமப்புறத்தொழில் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பயிற்சி தந்து 200 தொழில் நுணுக்க வல்லுநர்களும், 800 தொழிலாளர்களும் உருவாக்கப்பட்டுள்ளனர்.

சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் மாவட்டத் தொழில் மையத்தின் கூட்டுறவோடு வாழப்பாடி, ஆத்தூர், தலைவாசல், கங்காவெள்ளி போன்ற பத்து இடங்களில் தீப்பெட்டித் தொழிற்சாலைகளை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இதற்குத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஒவ்வொரு தொழிற் கூடத்திற்கும் ரூ. 26 ஆயிரம் வழங்கிட ஒப்புதல் அளித்துள்ளது.

மாவட்டத் தொழில் மையத்தின் இம் முயற்சிகாரணமாக மாவட்ட கிராமப்புற வளர்ச்சிக் கழகமும் இந்தத் தொழில்களுக்கென ரூ. 6 லட்சம் வழங்கியுள்ளது.

**இப்போது இம் மாவட்டத்திலே மட்டும் 200 சிறிய தீப்பெட்டித் தொழிற்கூடங்கள் தீக்குச்சிகளைத் தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றன.**

## சேலம் உருக்காலை

சிறு தொழில்களுக்கெல்லாம் ஆதாரமாக இருப்பவை பெருந்தொழில்களே எனக் கட்டுரைத் துவக்கத்தில் கூறினோம். அந்த வகையில்...

சேலத்துக்குப் புகழ்சேர்க்கும் உருக்காலைக்குச் சென்றோம்.

1970ல் முடிவு செய்யப்பட்டு, 1977ல் விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, 1981ஆம் ஆண்டு செப்டம்பர் 13ஆம் நாளன்று செயல்படத் தொடங்கியதுதான் சேலம் உருக்காலை. 13.3.1982ல், இந்த ஆண்டு உற்பத்தித் திறன் ஆண்டாகக் கொண்டாடப்படுவதன் அடிப்படையில் இந்த ஆலை முறைப்படி நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

மாக்னசைட் வெட்டப்படுகிறது



# சேலத்திற்குப் பெருமை சேர்க்கும் உருட்டாலை



**சேலம் உருட்டாலையில் தயாராகும் பொருட்களுக்கு வெளிச் சந்தையில் மிக நல்ல மதிப்பிருக்கிறது.**

இந்திய அரசுக்குச் சொந்தமான 'ஸ்டீல் அதாரிட்டி ஆஃப் இந்தியா லிமிடெட்' நிறுவனத்தின் ஒரு பிரிவாக இயங்கும் சேலம் உருக்காலையின் நிர்வாக இயக்குநர் திருஏ.ஏ.ராஜு, பெருமகிழ்வோடு பத்திரிகையாளர்களைச் சந்தித்து உரையாடினார்.

அப்போது அவர் தெரிவித்த சில விவரங்கள் வருமாறு:

1981-82க்கான முதல் நிதி ஆண்டில் இந்த ஆலை 3.214டன் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் சுருள்களையும் தகடுகளையும் தயாரித்துள்ளது. நடப்பு ஆண்டின் இலக்கான 11 ஆயிரம் டன்னில் கடந்த மூன்று மாதங்களில் உற்பத்தி 1500 டன்களாகும்.

கடந்த மூன்று மாதங்களில் உற்பத்தி ஆகியுள்ள 1500 டன்னில் 700 டன் விற்பனைச் சந்தைக்குச் சென்றுள்ளது.

தற்போது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பக்குவப்படுத்தப்பட்ட இரும்புச் சுருள்கள் இங்கே தயாரிக்கப்படும் தகடுகளுக்காக இந்த ஆலையில் பயன்படுத்தப்படுகிறது. இந்த நிலை மாறி ஆலையின் தேவையான மூலப்பொருட்களை உள்நாட்டிலிருந்தே பெறவும், அதன் மூலம் உற்பத்திச் செலவைக் குறைக்கவும் இரண்டுகட்ட திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

குறைந்த விலையில் சிறந்த ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தகடுகளை உற்பத்தி செய்வதே இந்த உருட்டாலையின் நோக்கம். அந்த வகையில் இங்கே தயாராகும் தகடுகள், வெளிநாட்டில் தயாராகும் மிகச் சிறந்த ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தகடுகளுக்கு ஒப்பானவை.

## மாவட்ட ஆட்சித் தலைவர்

சேலம் மாவட்டத்தின் சிறப்பான தொழில் வளர்ச்சிகளையெல்லாம் நேரில் கண்டறிந்து விட்டுப் பயணத்தை முடிக்கிறோம்; இன்னுமுள்ள ஏராளமான தொழிற்கூடங்களைச் சென்று பார்க்க நமக்கு நேரமில்லை.

சேலம் மாவட்ட சிறுதொழில் அதிபர்கள் கழகம் தரும் வரவேற்பு விழாவில் பங்கேற்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவரும் அதில் கலந்து கொள்கிறார்.

சிறுதொழில் அதிபர்கள் கழகப் பொதுச் செயலாளர் திரு.என். ராமசாமி தொடக்க உரையாற்றுகிறார்:

''சேலம் உருக்காலை இன்னும் வளர்ச்சி பெற்றால் இம்மாவட்ட சிறு தொழில்கள் இன்னும் நல்லபடி வளம் பெறும். சிறு தொழில் வளர்ச்சிக்கு முக்கியமான 'மார்க்கெட்டிங்' நிலை அதிகரிக்கப்பட்டாக வேண்டும். இன்னும் எப்படிப்பட்ட தொழில்களையெல்லாம் இந்த மாவட்டத்தில் உருவாக்கி வளர்க்கலாம் என்பதுபற்றி மத்திய தொழிலமைச்சரிடமும், மாநிலத் தொழிலமைச்சரிடமும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். சிறு தொழிலுக்குள்ள கட்டுப்பாடுகளை சற்றேதளர்த்த வேண்டுகிறோம். இந்த மாவட்டத்தைப் பின்தங்கிய மாவட்டமாக மாநில அரசும் மத்திய அரசும் அறிவித்து, தொழில் வளத்தைப் பெருக்க எங்களை ஊக்குவிக்க வேண்டும்.''

—இவ்வாறு அவருடைய உரை அமைகிறது.

அடுத்து, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு, வரதராஜலு உரையாற்றுகிறார்:

''பெரிய தொழில்களை நடத்துவது சுலபம்; சிறு தொழில்களை நடத்துவது சிரமம் என்பதை நானும் உணர்கிறேன். அதில் சில நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன என்றெல்லாம் இங்கே கூறியுள்ளார்கள். அது பற்றியெல்லாம் விரிவாக என்னைச் சந்தித்து எடுத்துரைப்பார்களானால் தொழில் வளர்ச்சி கருதி, அவர்களது கருத்துக்களை அரசுக்கு எடுத்துச் சொல்லி உதவ நான் தயாராக இருக்கிறேன். இந்த மாவட்ட மக்கள் கடுமையான உழைப்புக்குச் சொந்தக்காரர்கள் என்பதை நான் அறிவேன். இந்த மாவட்டம் தொழில் துறையில் ஏற்றம் பெற என்னவெல்லாம் செய்யவேண்டும் என்பது பற்றிய உங்கள் அனைவரின் நல்ல ஆலோசனைகளையெல்லாம் வரவேற்கிறேன்'.

—இவ்வாறு சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் உரை நிகழ்த்தினார்.

இறுதியாக மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரி நன்றி கூற விழா முடிகிறது.

இத்துடன், நமது 'சேலம் மாவட்டத் தொழில் வளம் காணும் பயணம் முற்றுப் பெறுகிறது.

# ஆந்திர மாநில அமைச்சரின் மனந் திறந்த பாராட்டு

மாண்புமிகு ஆந்திர மாநில கல்வி அமைச்சர் திரு. எஸ். ஆழ்வார்தாஸ் அவர்கள் 10–7–82 அன்று தருமபுரி வந்திருந்தார். தமிழக அரசின் சத்துணவுத் திட்டத்தைக் கண்டறிய எந்தவித முன்னறிவிப்புமின்றி, ஓசூர் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சென்றார். அங்கு, குதிரைப் பாளையம், சின்னப்பெல்லக்கவுண்டப்பள்ளி, நாகொண்டப்பள்ளி, எஸ். முதுகணப்பள்ளி ஆகிய இடங்களில் நடைபெறும் சத்துணவுத் திட்டங்களைப் பார்வையிட்டார். சமைக்கப்பட்ட சத்துணவுகளைச் சுவை பார்த்தார். 'இத்திட்டம் மிகவும் பாராட்டத்தக்கது' என்று கூறினார்.





# எள் கொண்டை புழு

**டாக்டர் மு. மோகனசுந்தரம்,**
**மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம்.**

எள் முளைத்து வருங்காலத்திலிருந்து அறுவடையாகும் வரை தாக்கும் பூச்சிகளுள், எள் கொண்டைப்புழு, **ஆண்டிகாஸ்ட்ரா கெட்டலானாலிஸ்** மிகவும் முக்கியமானதாகும். இப்புழுவின் தாய்ப் பூச்சி மஞ்சள் நிறத்தில், சுமார் 1 செ. மீ. நீளமுடைய அந்துப் பூச்சியாகும். இப்பூச்சிகள் எள் முளைத்து வருங்காலத்திலிருந்து செடிகளில் மீது செடிக்கு ஓரிரு முட்டைகள் வீதம் பரவலாக தம்முட்டைகளை இடுகின்றன. இம் முட்டைகள் மூன்று நாட்களில் பொரித்து முதலில் வெளிர் மஞ்சள் நிறமான புழுக்களாகவும் வளர்ந்த பின் பச்சை நிறப்புழுக்களாகவும் மாறுகின்றன. இவை எள்ளின் நுனி பாகத்தில் வளரும் பகுதியில் அமர்ந்து, அங்கு உள்ள இலைகளையும், வளரும் பகுதியையும் தம் வாய்ப்பகுதியில் சுரக்கும் ஒரு வகை மெல்லிய பட்டு நூலால் இணைத்து கொண்டை போல் ஆக்கி அதனுள் அமர்ந்து மொட்டு, பூ, பிஞ்சு மற்றும் இலைகளை அரித்து உண்டு வளர்கின்றன. புழுப்பருவம் நான்கு முறை தோல் உரித்து வளர்ந்து 15 நாட்களில் கொண்டையின் ஊடே கூட்டுப்புழுவாக



மாறுகிறது. கூட்டுப்புழுப் பருவம் சுமார் 5 நாட்கள் கடந்த பின், இவை தாய்ப் பூச்சிகளாக மாறி வெளிவந்து, பறந்து, இனச்சேர்க்கைக்குப் பின் மீண்டும் செடிகளின் மீது முட்டையிடந் துவங்குகின்றன. இக் கொண்டைப் புழுவின் தாக்குதலால் செடியின் வளர்ச்சியும், மொட்டு, பூ, பிஞ்சு மற்றும் காய்களை அரித்து உண்பதால் மகசூலில் மிகுந்த நஷ்டம் உண்டாகிறது.

**கட்டுப்படுத்தும் முறைகள் :**

1. பயிரில் கொண்டைப்புழுவின் தாக்குதல் தென்பட்டால், ஏக்கருக்கு 300 மில்லி வீதம் எண்டோசல்பான், அல்லது போசலோன் அல்லது எக்காலக்ஸ் மருந்தை தெளிப்பானுக்குத் தக்கவாறு தண்ணீர் கலந்து தெளிக்கவும்.

2. மானாவாரிப் பயிராக இருப்பின் காலை வேளையில் பனிப்பதத்தில் ஏக்கருக்கு 10 கிலோ வீதம் பி.எச்.சி. 10 சதம் தூளைத் தூவவும்.

வேளாண் பல்கலைக்கழகத் தகவல் தொடர்பு நிலையம் இத்தகவலைத் தெரிவிக்கின்றது.



# உத்தம மருமகள்

ஓர் ஊரில் ஒரு பெரிய பணக்காரர் இருந்தார். அவருக்கு நான்கு குமாரர்கள். அந்த நான்கு பேரும் நன்கு படித்து, அறிவும் அனுபவமும் பெற்றவர்கள் ஆனார்கள். அவர்களுக்கு ஏற்ற வயதானபோது ஏற்ற பெண்களைப் பார்த்துக் கல்யாணம் செய்துவைக்கப் பிரியப்பட்டார் தந்தை. அதற்காகப் பெண் பார்த்தார். அப்பொழுது பிள்ளைகள் அவரைப் பார்த்துச் சொன்னார்கள், ''அப்பா! எங்களுக்கு வயது, அறிவு, அனுபவம் எல்லாமே இருக்கின்றன. எங்களுக்கு ஏற்ற துணையை நாங்களே தேர்ந்தெடுத்துக்கொள்ள முடியும். அதனால் எங்களது மனைவிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை எங்களுக்கே அளிக்க வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டனர். அதற்கு ''சரி'' என்று இணங்கினார் தந்தை.

நான்கு பேரும் தூரதேசங்களுக்குப் போய், திருமணம் செய்துகொண்டு திரும்பினார்கள். தந்தை மகிழ்ச்சியோடு மகன்களை வரவேற்றார். மருமகள்கள் அவரது காலில் விழுந்து ஆசி கூறும்படி வேண்டினர். அவர்களை அன்போடு வாழ்த்தினார். மருமகள்களுக்கு தனது அன்புப் பரிசாக ஆளுக்கு 5 நெல் கொடுத்தார். அதைப் பார்த்ததும் பிள்ளைகளுக்குப் பற்றியெரிந்தது. ''அப்பாவுக்கு என்ன புத்தி பேதலித்து விட்டதா? எவ்வளவு சிறந்த மனைவிமார்களை, தூரதேசங்களுக்குப்போய் தேர்ந்தெடுத்து வந்திருக்கிறோம்? அவர்களுக்குப் பரிசளிக்க நெல்லைத் தவிர வேறொன்றும் இவருக்கு அகப்படவில்லையா?'' என்று ஆத்திரப்பட்டனர்.

முதல் மருமகள் அந்த 5 நெல்லை வாங்கிக் கொண்டதும், ''இந்தக் கிழவனுக்கு வந்த திமிரைப் பார் எங்கள் வீட்டுக் குப்பையில் இறைந்து கிடக்கும் இந்த தானியங்கள். ஏழைகள் வந்து பொறுக்கிக் கொண்டு போவார்கள். இதையா எனக்கு கல்யாணப்பரிசாகக் கொடுப்பது?'' என்று வேதனைப்பட்டு அந்த நெல்லைக் குப்பையில் அப்பொழுதே எறிந்துவிட்டாள்.

---

**காளத்திநாதன்**

---

இரண்டாவது மருமகள், அதைப் பிரசாதமாகக் கருதி, வாயில் போட்டு மென்று தின்று விட்டாள்.

மூன்றாவது மருமகள் எறியவும் இல்லை, தின்னவும் இல்லை. ''என் மாமனார் எனக்கு அன்பாகக் கொடுத்தது. அது எதுவாக இருந்தால் என்ன? இந்த 5 நெல்லைப் பெட்டியில் வைத்துப் புனிதமாகக் காத்து வருவேன்'' என்று பத்திரப்படுத்தி வைத்தாள்.

நான்காவது மருமகள் அந்த ஐந்து நெல்லைத் தோட்டத்தில் விதைத்துப் பயிர்செய்தாள். அந்த அறுவடையை மீண்டும் விதைத்தாள். தொடர்ந்து இப்படிச் செய்துவந்தாள்.

ஐந்தாண்டு சென்றது. ஒரு நாள் பெரியவர் திடீரென்று தன்னுடைய நான்கு மகன்களையும், நான்கு மருமகள்களையும் அழைத்தார். மருமகள்களைப் பார்த்து, ''எனக்கு வயதாகி விட்டது. என் மனைவி எனக்கு முன்னால் போய்விட்டாள். அதனால் வீட்டு நிர்வாகத்தை இனி உங்களிடம் ஒப்படைக்கப் போகிறேன். யாருக்கு என்ன பொறுப்பு ஒப்படைப்பது என்பதைத் தீர்மானிக்கத்தான் உங்களைக் கூப்பிட்டேன்'' என்றார். 'இப்பொழுதாவது இந்தக் கிழவனுக்குப் புத்தி வந்ததே?'' என்று உள்ளுக்குள் சந்தோஷம் கொண்டார்கள் பிள்ளைகள்.

''ஐந்துவருஷத்துக்குமுன்னால் உங்களிடம் நான் கொடுத்த 5 நெல்லைக்கொண்டு வாருங்கள்'' என்றார் பெரியவர்.

முதல் மருமகளுக்குக் கோபம் தாளவில்லை. சமயம் வந்தது என்று பொரிந்து தள்ளினாள். ''எங்கள் வீட்டில் குப்பையில் நெல் இறைந்து கிடக்கும், ஏழைகள் எத்தனையோ பேர் பொறுக்கிக்கொண்டு போவார்கள். அதில் 5 நெல் எம்மாத்திரம்? நான் அப்பொழுதே அதைக் குப்பையில் போட்டு விட்டேன்...'' என்றாள்.

பெரியவர் சாந்தமாக, ''உனக்கும் குப்பைக்கும் தொடர்பு இருக்கிறது. அம்மா! நீ இந்த வீட்டிலும் குப்பை கூளங்களைப் பெருக்கிக் கொட்டும் காரியத்தைக் கவனித்துக்கொள்'' என்றார்.

இரண்டாவது மருமகள், ''மாமா நீங்கள் கொடுத்த அந்த 5 நெல்லை நான் பிரசாதமாக நினைத்து வாயில் போட்டு, கொரித்து தின்று விட்டேன்...'' என்றாள்.

''உனக்கும் சாப்பாட்டுக்கும் தொடர்பு இருக்கிறது அம்மா. நீ இந்த வீட்டில் இனிமேல் சமையல் பொறுப்பைக் கவனித்துக் கொள்'' என்றார் மாமனார்.

மூன்றாவது மருமகள், ''நீங்கள் கொடுத்த 5 நெல்லை நான் புனிதபரிசாகப் போற்றி, ஒரு தங்கப் பேழையில் போட்டுப் பாதுகாத்து வைத்திருக்கிறேன்'' என்று 5 நெல்லைக் கொண்டுவந்து கொடுத்தாள்.

''பாதுகாத்து வைப்பதில் நீ கெட்டிக்காரியாக இருப்பதால் இந்த வீட்டின் பொக்கிஷம் உன் பொறுப்பில் இருக்கட்டும்'' என்றார் மாமனார்.

நான்காவது மருமகள், ''நீங்கள் கொடுத்த 5 நெல்லை நான் தோட்டத்தில் பயிரிட்டேன். அறுவடையானதும் மீண்டும் பயிரிட்டேன். இப்பொழுது 5 மூட்டை நெல் இருக்கிறது. அதைக்கொண்டு வந்து காட்ட ஒரு வண்டி கொடுங்கள்'' என்றாள்.

''ஒன்றைப் பத்தாக்கும் உத்தமியே! உன்னிடம் இந்த வீட்டின் முழுநிர்வாகத்தையும் ஒப்படைத்தேன்...'' என்றார் மாமனார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.